பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 24 ஞாயிற்றுக்கிழமை (09.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 233




# ரணிலின் அரசாங்கத்தில் வடக்குக்குச் செல்ல விசா

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய நாட்டில் வடக்கு உள்ளடக்கப்படாது எனவும் எதிர்காலத்தில் வடக்குக்குச் செல்ல விசா தேவைப்படும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஈழத்தை உருவாக்கிக் கொடுத்தே ரணில் புதிய நாட்டை அமைக்க உள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அவ்வாறு செய்தால் தெற்கிலிருந்து வடக்கு செல்ல விசா பெற்றுக்கொள்ள நேரிடுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய ரணில் விக்கிரமசிங்க வடக்கு கிழக்கை ஈழ நாடாக அறிவிப்பார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ரணில் வடக்கு கிழக்குக்குச் சமஷ்டி ஆட்சியை வழங்கிவிடுவார். மருதமடு தேவாலயத்தை

16 ஆம் பக்கம் பார்க்க



















நடுவுநிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையல்

இந்தியாவில் 8 வருட கால அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால், சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.
இடம்:- குமாரசாமி வீதி,
(யாழ்பல்கலைக்கழகம் அருகில்) (1442)

தொடர்பு :- 0766399277

## வேலையாள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள **ஸ்ரீ சரவணபவன்** உணவகத்துக்கு சமையல்காரர், ரொட்டி தயாரிப்பாளர், சப்பிளையர்ஸ் தேவை. (1446)

**தொடர்புகளுக்கு: 0772479723**

## வாடகைக்கு

கொழும்புத்துறை வீதி சுண்டிக்குளியில் சுற்றுலாப் பயணிகள், விற்பனைப் பிரதிநிதிகளுக்கு **A/C, Non A/C** மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. (1444)

தொடர்புகளுக்கு
**0768079284 , 0774803961**

## SPEED

PURIFIED DRINKING WATER

**சுத்தமான குடி தண்ணீர்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



**ஸ்ரீமுருகன்**
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

(C-1763)

# தபால்துறை அமை...

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு மாற்றப்பட்டடுள்ளதோடு தபால்துறை அமைச்சின் செயலாளராக கடமையாற்றுவதற்காக தபால்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-11)

## சிறப்பானதொரு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் மூன்று நேர உணவு, தங்குமிட வசதி, மாதாந்த சம்பளம், நிரந்தர வேலைவாய்ப்பு, உடன் **திருப்பதி வெங்கடேசன் நிறுவனத்தின்** சைவ உணவகத்துக்கும், தேயிலை உப சேல்ஸ் வேலை வாய்ப்புக்குமாக கீழ்வரும் வேலைகளுக்கு அழைக்கின்றோம்.

1. கணக்குகள் பதிவாளர் (பெண்கள்)
2. பில்கிளாக், காசாளர்
3. உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
4. வீட்டு வேலையாட்கள் (பெண்கள்)
5. சமையல் அறை வேலையாட்கள்
6. ரொட்டி, தேநீர் தயாரிப்பாளர்கள்

**சகலரும் நேர்முகத்தேர்வுக்கு 10-08-2015 தொடர்பு கொள்ளவும்.**

இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் வன்னியில் அநாதரவானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (1447)


தொடர்பு:
**திருப்பதி வெங்கடேசன் என்ரபிறைசஸ்**
7/3 யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P :- 0777 917753
021 221 9191

## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyotherapy)

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**



09.08.2015 முதல் 14.08.2015 வரை
6 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகன் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

(C-1764)

**நாதன் இன்**
(பழைய கமல் டொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்றிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

## CNR WORLD WIDE EXPRESS & TRAVELS

அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் [உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி]
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



**சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை**
**401, Clock Tower Road, Jaffna** (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062

(C-1767)


# நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

உங்கள் ஆசியுடன் ஓர் அமைப்பாளராகவும், மாகாணசபை உறுப்பினராகவும் ஆளுமை மிக்க ஓர் இளைஞனாகவும் இருந்து நான் உங்களுக்கு ஆற்றிய சேவைத்துளிகள் சில. . . . . . .

- பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கியமை
- நுண்கலைப் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்கியமை
- வங்கிகளுக்கு வங்கி உதவியாளர் மற்றும் கிராம சேவையாளர் நியமனம் வழங்கியமை
- நேர்மையான முறையில் ஆசிரியர் இடமாற்றம் செய்தமை
- வடமாகாணசபை ஆசிரியர் சேவைக்காலம் 6 ஆண்டுகளாக குறைத்தமை
- 274 கணித, விஞ்ஞான தொழில்நுட்ப பாடங்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கியமை
- யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர் மற்றும் விளையாட்டுத்துறை டிப்ளோமாப் பட்டதாரிகளை ஜனாதிபதியுடன் நேரடியாக கலந்துரையாடி அவர்களது நியமனத்தை உறுதிப்படுத்தி, மேலதிக வெற்றிடங்களுக்கு க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்களை உள்வாங்க நடவடிக்கை எடுத்தமை
- வலி வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கூடவே இருந்து கைச்சாத்திட்ட 1000 ஏக்கர் காணிகளை வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தமை
- வடமாகாண கல்வித் திணைக்களங்களின் கீழும் சுகாதார தொண்டர்களாகவும் ஒப்பந்த அமைய அடிப்படையில் கடமை ஆற்றிய சுமார் 700 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை

உங்கள் அங்கீகாரம் கிடைத்து கடந்த காலங்களில் பதவியில் இருந்தோர் என்ன செய்தனர்?



எனக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கும். . .
இன்னமும் மேலதிக அங்கீகாரங்களை
உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன் உங்கள் சேவகனாய்!

X 1

**அங்கஜன் இராமநாதன்**
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

(சு – 413)

**புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

பாராளுமன்றத் தேர்தல் - 2015
அகில இலங்கை
தமிழர் மகா சபை
X

# பாதுகாப்பு ஏற்பாடுகளில் அதிரடியான மாற்றங்கள்!

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் அதிமுக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில் அதிரடி மாற்றங்கள் செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பாரியளவிலான கொலைகள் உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டதனை தொடர்ந்து ஜனாதிபதியினால் இந்த அதிரடி உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.



ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழங்கி வந்த பாதுகாப்பு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கு பதிலாக விசேட அதிரடிப படை உத்தியோகத்தர்கள், ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் முற்று முழுதாக அகற்றப்பட்டு அவர்களுக்கு பதிலாக, விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்கிய அதிகாரிகளே தற்போதைய ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு வழங்கி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பல்வேறு தரப்பினரும் விமர்சனங்களை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்தும் இரகசிய பேச்சுவார்த்தைகள் குறித்து தகவல்களை ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவினர் கசிய விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின், பாதுகாப்புப் பொறுப்புக்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் முழுமையாக வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த பொறுப்பு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(எ-11-12)

## தபால்துறை அமைச்சின் செயலாளர் பதவி நீக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி பணிப்புரையின் பேரில் தபால்துறை அமைச்சின் செயலாளர் பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் மேற்கொண்ட முறைப்பாட்டினையடுத்து ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இப்பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள தபால்துறை அமைச்சின் செயலாளர்

02 ஆம் பக்கம் பார்க்க....

## சுடப் பயன்படுத்திய வாகனம் மீட்பு

(கொழும்பு)

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீது கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வாகனம் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான சுசில் பிரேமஜயந்த மற்றும் தனசிறி அமரதுங்க ஆகியோரின் வெல்லம பிட்டியில் உள்ள தேர்தல் பிரசார அலுவலகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வாகனம்

15 ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்கா பயண எச்சரிக்கை

(நியூயோர்க்)

இலங்கையில் இருக்கும் அமெரிக்கர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் பாதுகாப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் இம்மாதம் 17-ம திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இலங்கையில் வன்முறைகள் வெடிக்கக் கூடுமென்ற அடிப்படையில் அமெரிக்க அரசாங்கம் தமது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## பிந்திச் சென்றதனால் வாக்களிக்க முடியாத நிலை

### மாற்று வழி கோரும் தபால் மூல வாக்காளர்கள்

(யாழ்ப்பாணம்)


தபால்மூல வாக்களிப்புக்கு யாழ். மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற அரசாங்க ஊழியர்கள் சிலர் வாக்களிக்க முடியாது திரும்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நேற்று ஏற்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதி தபால்மூல வாக்களிப்பில் யாழ்.மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டு வேறு மாவட்டங்களில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்களே இவ்வாறு வாக்களிக்க முடியாது திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்படி அரசாங்க ஊழியர்கள் தாம் பணிபுரியும் பிரதேச மாவட்ட

15 ஆம் பக்கம் பார்க்க....

## 45 கிலோ கிராம் கஞ்சா தொண்டைமானாற்றில் மீட்பு



(கரணவாய்)

தொண்டைமானாறு காட்டுக்குழி பகுதியில் பாழடைந்த வீட்டிலிருந்து 45 கிலோ எடை கொண்ட கேரள கஞ்சா பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த இரகசிய தகவலினை அடுத்து

15 ஆம் பக்கம் பார்க்க....

## பிரசார மோதலில் இளைஞர் பலி

(பதுளை)

பதுளையில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டம் மற்றும் இசை நிகழ்ச்சியில் ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட வேட்பாளர் இருவரது ஏற்பாட்டில், நேற்று முன்தினம் இரவு அட்டாம்பிட்டிய நகரில் பிரசார கூட்டமும் இசை நிகழ்வும் இடம் பெற்றது.

இசை நிகழ்வின் போது அங்கு கூடியிருந்த இருதரப்பு ஆதரவாளர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றி கைகலப்பாகியதில் அங்கிருந்த 18 வயது

15 ஆம் பக்கம் பார்க்க....

## இளையோர் சிவயாத்திரை சித்தன்கேணியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சித்தன்கேணி குருமார் சந்நிதானத்தின் இளையோர் சிவயாத்திரை நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மேற்படிச் சிவயாத்திரைக்கு வீணாகான குருபீட முதல்வர்கள், சின்மயா மிஷன் சுவாமிகள், மாநகராட்சி மன்ற ஆணையாளர், சமய விவகாரக் குழுவின் தலைவர் எஸ்.பிரணவநாதன் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

இதற்கமைய மேற்படி யாத்திரையானது சித்தன்கேணி சிவாலயத்தில் இருந்து ஆரம்பமாகி சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய் சென்றடைந்து அங்கிருந்து மருதனார் மடம் வந்தடைந்து கே.கே.எஸ் வீதியூடாக யாழ்ப்பாணத்தை சென்றடைந்து பின்னர் ஆஸ்பத்திரி வீதி வழி

15 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாக்கிடுங்கள் 5

30 வருடங்களாக ஓயாத விலைபோகாத தலைமை

ஈஸ்வரபாதம் சரவணபவன்

[முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்]

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

(C-406)


# தமிழ் கோ

## மாபெரும் கவிதைப் போட்டி... 2015

அவுஸ்திரேலியா **"தமிழ் கோ"** வினால் இலங்கையின் வட மாகாணத்தில் உள்ள கவி ஆர்வம் உள்ளவர்களுக்கான மாபெரும் கவிதைப்போட்டி ஒன்று நடத்தப் படவுள்ளது. இந்தப் போட்டியானது வடமாகாணத்தில் உள்ள கவி ஆர்வம் மிக்க வர்களின் திறன்களை ஊக்குவித்து பரிசில் வழங்குவதற்கும் அவர்களை கவி தைகளை நூலாக்குவதற்கும் நடத்தப்படுகின்றது. மூன்று பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் எட்டு இடங்களைப் பெறுவோர்க்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

பிரிவு I, II

| | |
|---|---|
| 1ஆம் இடம் | பதினையாயிரம் ரூபா |
| 2ஆம் இடம் | பத்தாயிரம் ரூபா |
| 3ஆம் இடம் | ஐந்தாயிரம் ரூபா |

பிரிவு – III

| | |
|---|---|
| 1ஆம் இடம் | இருபதாயிரம் ரூபா |
| 2ஆம் இடம் | பதினைந்தாயிரம் ரூபா |
| 3ஆம் இடம் | பத்தாயிரம் ரூபா |

ஒவ்வொரு பிரிவிலும் தொடர்ந்து 4.5.6.7.8 ஆம் இடங்களைப் பெறும் ஐந்து வெற்றியாளர் களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் பணப்பரி சில்கள் வழங்கப்படும். போட்டியில் கலந்துகொள் ளும் யாவர்க்கும் சான்றிதழ் வழங்கப்படும்.



## போட்டிக்கான விதிமுறைகள்...

- முதலாம் பிரிவு தரம் 05 முதல் தரம் 09 வரையான மாணவர்கள்
- இரண்டாம் பிரிவு தரம் 10 முதல் உயர்தரம் வரையான மாணவர்கள்
- பாடசாலை மாணவர்கள் அல்லாத பதினெட்டு வயதிற்கு அதிகமான யாவரும் மூன்றாம் பிரிவு போட்டியில் பங்குபற்ற முடியும்.
- போட்டியில் பங்குபற்றுவோர்கள் பொறுப்புக்கூறக்கூடிய இறப்பர் முத்திரை உடைய, சமூக அந்தஸ்துடைய ஒருவரிடம் தமது சுய கவிதை என்பதனை உறுதிப்படுத்தும் சான்றிதழ் பெற்று கவிதையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- முதலாம் பிரிவினர் 15 வரிகளுக்கு மேற்படாமலும் இரண்டாம் பிரிவினர் 25 வரிகளுக்கு மேற்படாமலும் மூன்றாம் பிரிவினர் 35 வரிகளுக்கு மேற்படாமலும் கவிதைகள் அனுப்ப முடியும். குறித்த வரிகளை விடக் குறைவாக இருந்தாலும் கவிதைகள் போட்டியில் சேர்க்கப்படும். கவியின் தரம் முதன்மையாக நோக்கப்படும்.
- கருப்பொருளுக்கு வரையறை இல்லை.
- மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஒருவர் ஒரு கவிதை மட்டுமே அனுப்ப முடியும்.
- கவிதைகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 10.09.2015
- கவிதைகளை தபாலிலோ, நேரடியாகவோ, மின்னஞ்சலிலோ வழங்க முடியும்.
- போட்டியாளர் தமது பெயர், முகவரி, தொலைபேசி எண் (விரும்பினால் மட்டும்) என்பவற்றை தனியான தாளில் இணைத்து அனுப்பவேண்டும். கவிதையின் தாளில் இவை எழுதப்படலாகாது.
- படைப்புக்கள் யாவும் தாயகம், புலம் என்று குறித்த துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களைக் கொண்ட நடுவர் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு போட்டி முடிவுகள் ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டு, மேடை நிகழ்ச்சி ஒன்றில் வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் நினைவுச் சின்னங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- கவிதைகள் தட்டச்சிலோ, தெளிவான கையெழுத்திலோ அனுப்ப முடியும்.
- போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் தங்களது படைப்பை பதிப்பிக்கவோ அன்றி வேறு ஏதேனும் காட்சிப்புல வடிவத்தில் வெளிப்படுத்தும் காப்புரிமை மற்றும் வெளியீட்டு உரிமையை "தமிழ் கோ" விற்கு வழங்குகிறீர்கள்! (குறித்த விதிகளுக்கு சம்மதித்தே தாங்கள் போட்டியில் கலந்து கொள்கின்றீர்கள் என்பதை கவனத்திற்கொள்ளவும்.)

தபால்/ நேரடி முகவரி – கவிதைப்போட்டி 2015
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
புதுக்குடியிருப்பு.

மின்னஞ்சல் முகவரி : kavitaipoaddi2015@gmail.com
மேலதிக தொடர்புகளுக்கு: யோ.புரட்சி : 077 589 2351
க.குவேந்திரன்- +61420421004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 நாள் நினைவஞ்சலி



அமரர்

## வைரமுத்து சிவமணி (தரணியா)

கருவாக எமை சுமந்து குருவாக கல்வி தந்து
அரும்பிய எமக்கோர் அகத்தினில் விளக்காகி
வாழும் காலமெல்லாம் விருட்சமாய் நிழல் தந்து
ஆளுகை பலமாகிய அம்மாவெம் தெய்வமே!

மலர்வு: 1943.03.15
உதிர்வு: 2015.07.10

பொன்மணி நிலையம்
அல்வாய் வடக்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர் :
021 561 1474
077 939 6713

(1299)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தேர்த்திருவிழா 28 ஆம் திகதியும், தீர்த்த திருவிழா 29 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. (இ-7)

Metro Travels & Tours (Pvt) Ltd,
Jaffna Branch,
#272 1/2, Stanley Road, Jaffna, Sri Lanka.
Web: www.metrotravels.lk.

எமது சேவைகள்...

மிக குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள்....

சகல நாடுகளுக்குமான காப்புறுதி சேவைகள்...

இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்...

வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல்...

இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம் ....

(சி1762)

METRO TRAVELS & TOURS (PVT) LTD
# 272/1, Stanley Road, Jaffna, Srilanka.
Tel:- 0212219424, 0212224647, 0212217199
Mobile: - 0773798767, 0777881115
Email: - bartheeban@metrotravels.lk

# Law Classes

Corporate and Business LAW (ACCA)
Fundamentals of Ethics
Corporate Governance
and Business Law } CIMA
Business Law ( AAT) (CMA)
General Principales of Law (IBSL)
Criminal Law (Police Confirmation & Promotion)
Law Entrance



## English Classes

IELTS, Spoken English with Grammer
Diploma in English- English A/L, O/L

*Course fee:*

Very reasonable-IELTS Course Fee Only Rupees 10000/=

*Student's Performance*

Corporate & Business Law:- Vijitha-59, Nivethika-B, Jeevitha-66, Dilanka-72, Jeyasuriya-59
*IELTS Band*:- Kaneshan-07-(In Australia), Nuwan-6.5, Jathusana -6.5-(London), Thivya -07-(London)

*Conducted by*

Mohanarajah Joganantham (M.Raja Joganantham)
L.L.B, Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM
Venue: MICOM INTERNATIONAL Since 1997 in Colombo

*Branches: Jaffna* - 205 H 2/1, Raja Complex (In Front Of Raja Theatre) Kasthurijar Road, Jaffna Town( Classes Will Commence On 1st Sepetember 2015),
*Tellipalai*- Micom, In Front of old AGA's Office K.K.S. Road Tellipalai (Classes All Ready Started)
Point Pedro, Vavuniya

Class Days: Weekdays in Jaffna Weekend in Vavuniya
Contacting Numbers: 077 284 2556, 076 707 7558, 077 395 0215
Contactable person Mr.Joganantham
Lectured on Law, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College, London Business School, MICOM International

*Computer Classes are to be Commenced within a Short Period*

# மரண அறிவித்தல்

## அன்னலிங்கம் குமாரசாமி



கொக்குவிலை பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் குமாரசாமி 07.08.2015 (வெள்ளிக்கிழமை) காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் சரஸ்வதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற தாமோதரன்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மருமகனும் புஸ்பதேவியின் பாசமிகு கணவரும் சங்கரன்(லண்டன்) ,சரளா(சின்மய பாரதி), றேமளா தாமோதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமினி (லண்டன்), ஜெயக்குமார் (ஆதார வைத்தியசாலை மந்திகை வைத்தியர்), செங்குட்டுவன் (திட்ட முகாமையாளர்), சியாமளா(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கிஷானி, கரீஷ், கீர்த்திகன், கம்சிக்கா, கருணிக்கா, ஜனனி, சுருதி, சௌமியா, கவீன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கந்தசாமி செல்வரத்தினம் மற்றும் ஞானம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.08.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி இந்து மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்
077 703 3039

தகவல்:
குடும்பத்தினர்.

(1438)

# ராசி பலன்

09.08.2015
(ஆடி 24, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
தசமி முன்னிரவு 8.26 மணிவரை
ரோகினி முன்னிரவு 10.23 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் | |
| | காலை 10.17இற்கு மிதுன-சந் | | சூரி செவ் |
| | | | குரு புதன் சுக் |
| | | சனி | ராகு |

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**இடபம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பெரியோர் சந்திப்புண்டு.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் அதிகரிக்கலாம், வியாபார நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** காலையிலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பயணங்கால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் இடையிடையே தேவையற்ற கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.

**மகரம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படு வீர்கள், பிரியமான சிலரின் சந்தி ப்பு இடம்பெறலாம், எடுத்த காரி யங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்

**கும்பம்** பூர்விகச் சொத்துக்களால் நன்மை ண்டு, நட்பு வட்டம் விரிவடை யும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரலாம், தொலைபேசி வழியில் பொன்னான தகவலொன்று வந்து சேரலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்குவதில் இழுத்தடிப்பு

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கிராமத்தில் இந்தியன் திட்டத்தின் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரை அவர்களுக்கு கொடுப்பனவுகள் யு.என். ஹபிராட் நிறுவனத்தினால் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், குறித்த வீட்டுத்திட்டத்தினூ டாக வழங்கப்பட்ட வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு வங்கிகளின் மூலம் கடன் பெற்றிருந்தோம்.

நிறுவனத்தினால் பணம் கிடைக்கப்பெறும் என்ற நோக்கிலேயே வங்கிகளின் ஊடாக கடனைப் பெற்றோம்.

தற்போது நிறுவனத்தினரால் கொடுப்பனவு வழங்குவதற்கு இழுத்தடிப்பு செய்யப்படுவதால் கடனை வழங்கிய வங்கிகள் நெருக்குதல் கொடுத்து வருகின்றன.

அத்துடன் வீடுகளுக்கு தேவையான மூலப்பொருட்களான மரம், தடிகள், ஓடுகள் என்பவற்றை குறுகிய கால கடன் அடிப்படையிலேயே பெற்றுக்கொண்டோம். இது குறித்து வீட்டுத்திட்டத்தை மேற்பார்வை செய்யும் தொழில் நுட்ப அலுவலரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, பொதுவாக வீட்டுத்திட்டத்தில் தம்மால் குறிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டங்களும் பயனாளிகளினால் பூர்த்தி செய்யப்பட்டவுடன் அந்த வீட்டினை படம் எடுத்து கொழும்பிலுள்ள இந்தியன் தூதரகத்துக்கு தாம் மின்னஞ்சல் செய்வதாகவும் அங்கிருந்து தூதரக அதிகாரிகளால் பயனாளிகளின் வீட்டுத்திட்ட முன்னேற்றம் குறித்த அறிக்கை படத்துடன் இந்தியா விற்கு அனுப்பிவைக்கப்படும்.

இதன்பின்னர் இவர்களிற்கான அடுத்த கட்ட கொடுப்பனவு வருவதற்கு குறைந்தது 45 நாட்கள் கால இடைவெளி ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஆனால் சில பயனாளிகளினால் வீட்டின் குறித்த கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்களின் வங்கிப் புத்தகங்களில் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேல் பணம் உள்ள நிலையில் அதனை பெறுவதற்கான வங்கிப் பத்திரம் வழங்கப்படவில்லையென பயனாளிகள் வங்கிப் புத்தக ஆதாரத்துடன் எடுத்துக் கூறியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பயனாளிகளிற்கான கொடுப்பனவுகள் விரைவாக கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-302)

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த இவ்வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான 'புலமைப்பரிசில் கருத்தரங்கு' இரு தினங்கள் நடைபெறுமென செட்டிகுள பிரதேச செயலக வாழ் வெழுச்சி உத்தியோகத்தர் ந.சுபிந்தராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மாங்குளம் அல்ஹறா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வவு/பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயத்திலும் கருத்தரங்குகள் இடம்பெறும்.

இக்கருத்தரங்கு குறித்த பிரதேச செயலக பிரிவில் முதல் தடவையாக நடைபெறவுள்ளமையால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் தவறாது பங்கேற்று பயன்பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (2-60)

## உயர்தர வகுப்பு மாணவி தற்கொலை; பாடசாலை அதிபர் பணி இடைநிறுத்தம்

வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி உயர்தர மாணவி தற்கொலை செய்து கொண்ட விவகாரம் காரணமாக பாடசாலை அதிபர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தற்போது நடைபெற்று வரும் உயர்தரப் பரீட்சையில் தோற்றவிருந்த வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவி குணசேகரம் திவ்வியா கடந்த வியாழக்கிழமை மாலை வீட்டின் அருகில் இருந்த பொதுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இதனையடுத்து இடம்பெற்ற விசாரணைகளின் போது மாணவியால் எழுதி வைக்கப்பட்ட கடிதம் பொலிசாரால் மீட்கப்பட்டது. குறித்த மாணவி கல்விப் பொதுசாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தி பெறாத நிலையில் குறித்த பாடசாலையில் கல்வி கற்று வந்துள்ளார். தற்போது பரீட்சைக்கான அனுமதி அட்டை பாடசாலைக்கு வந்த போதும் குறித்த பாடசாலை அதிபர் அதனை வழங்கவில்லை.

இதனால் மனவிரக்தி அடைந்த மாணவி கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படாமையே தற்கொலைக்கு காரணம் என மாணவி கடிதத்தில் எழுதியுள்ளார்.

சடலத்தை பார்வையிட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் சடலத்தை மருத்துவ பரிசோதனைக்கு உத்தரவிட்டு அதன்பின் மாணவி கிணற்றில் குதித்தமையால் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் குறித்த பாடசாலை அதிபர் உடனடியாக பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2)

## முல்லை.சாலை பேருந்தின் மீது கல்வீச்சு தாக்குதல்

### கூழாமுறிப்பு பகுதியில் சம்பவம்

இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலைக்கு சொந்தமான பேருந்து மீது கூழாமுறிப்பு பகுதியில் வைத்து கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் கடந்த 6 ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த பேருந்தின் சாரதி முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு - வவுனியாவுக்கு இடையில்நாளாந்தம் பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவிலிரு ந்து வவுனியாவுக்கும், மாலை 6.30 மணிக்கு வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கும் இந்த பேருந்துசேவை ஈடுபடுவது வழக்கமாகும்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று குறித்த பேருந்து வழமை போன்றுமாலை 6.30 அளவில் வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த வேளை கூழாமுறிப்பு பிரதேசத்தில வைத்து கல்வீச்சு தாக்குதலுக்கு இலக்கானது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த அடையாளம்தெரியாத இருவர் சாரதியின்பக்கம் கல்லால் வீசியுள்ளனர்.

இதனால், சாரதிபக்கமுள்ள கண்ணாடி பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், சாரதிக்கோ அல்லது பயணிகளுக்கோ சேதம் எதுவும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், முன்பக்க வாசலில் நின்று கொண்டிருந்த நடத்துநரின் கண்ணுக்குள் சேதத்துக்குள்ளான பேருந்தின் கண்ணாடித்துகள்கள் வீழ்ந்தது.

இதனையடுத்து குறித்த நடத்துநர் அன்றிரவு மாஞ்சோலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மாவட்ட வைத்திய சாலைக்குமாற்றப்பட்டு சிகிச்சைபெற்று வீடு திரும்பியுள்ளார். (2-15-281)




## முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்முதலாக சமாதான நீதவான் ஒன்றியம் உருவாக்கம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட சமாதான நீதவான் ஒன்றியம் முதன் முதலாக 17.07.2015 அன்று உருவாக்கப்பட்டு நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

இவ்வொன்றியம் முற்பகல் 11.30 மணியளவில் முல்லைத்தீவு நகரப்பிரதேசத்தில் அமைந்துள்ள மண்றகுடியிருப்பு மீனவர் சங்கக் கட்டட மண்டபத்தில் இத்தெரிவு நடைபெற்றது.இதன் தலைவராக வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம், இணைத்தலைவராக யோகதாசன் யூட்நிமலன், உபதலைவராக அந்தோனிப்பிள்ளை மரியராசா, செயலாளராக சின்னத்தம்பி இராஜேஸ்வரன், உப செயலாளராக மாணிக்கவாசகர் விஜயகுமார், பொருளாளராக செல்வராஜா பூலோகசீலன் ஆகியோர் தெரிவாகினர். நிர்வாக உறுப்பினர்ளாக பெர்னாண்டோ அலக்சிஸ் அமலதாஸ்,கார்த்திகேசு சிவகுமார், இம்மானுவேல் யோசெப் ஸ்ராலின்,வேலுப்பிள்ளை யேசுதாசன், கனகசபை குலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதன் ஆலோசகர்களாக பெர்னாண்டோ சாள்ஸ், பாலகிருஷ்ணா செல்லத்துரை, இரத்தினம், திருமதி ஜசிந்தா ராசம்மா இரவீந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இதன் போசகராக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் மிக்கேல் பிள்ளை யேசுறெஜினோல்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வொன்றியமானது ஏற்பாட்டாளரினால் வரையறுக்கப்பட்ட 16 சமாதான நீதவான்களிற்கு மட்டுமே அழைப்புக்கடிதம் நேரடியாக வழங்கப்பட்டு அவர்கள் மத்தியிலிருந்தே இந்நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாக பல நூற்றுக்கணக்கான சமாதான நீதவான்கள் உள்ளபோதும் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளில் மட்டுமே தேர்ந்தெடுத்து இவ்வொன்றியம் உருவாக்கபபட்டுள்ளது.ஒட்டு மொத்த முல்லைத்தீவு மாவட்ட சமாதான நீதவான் ஒன்றியம் என பெயரிடுவது பொருத்தமானது அல்ல என்றும் இவ்வொன்றியத்தை உருவாக்குவதற்கான ஏற்பாட்டாளர்களினால் எந்த ஒரு இடத்திலும் பகி ரங்க அழைப்பு விடுக்கப்படவில்லை என பல சமாதான நீதவான்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-302)



இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்தின் பிரதான நீர் பாயும் வாய்க்கால்களின் கழிவு வாய்க்கால் மதகுகளின் கரையோரங்களில் புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 51 செவ் 7 இல்
உயரம்: 171cm
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: B/4834

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 24
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர
தொ.இ: B/435

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 64 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: B/4836

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 15 செவ் 8 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழல்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: B/4838

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 8
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: G/4866

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 50 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/4869

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 26 சூரிசெவ் 5 இல்
உயரம்: 158cm
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: G/4870

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 73 செவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: HNDA, B.COM/ அரச தொழில்
தொ.இ: G/4872

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# பாலர் பாடசாலையின் கலைவிழாவும் சிறுவர் நூலகத் திறப்புவிழாவும் இன்று

(யாழ்ப்பாணம்)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படுகின்ற திக்கம் பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழாவும் சிறுவர் நூலக பிரிவு திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

திக்கம் பாலர் பாடசாலைப் பணிப்பாளர் திருமதி.இந்திராணி ஸ்ரீரங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இந்தியத் துணைத்தூதர் எஸ்.தட்சணாமூர்த்தி, வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அரசாங்க அதிபரும் திக்கம் மத்திய சனசமூக நிலைய உபதலைவருமான வே.விசுவலிங்கம், திக்கம் நலன்புரிச்சங்கம் சுவிஸ் தி.ஸ்ரீகுகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-5)


பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்.மாவட்டம்



5
(சி-392)
ந.மதிஅழகராசா(மதி)
முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்
தமிழர் விடுதலைக் கூட்டணி
மாற்றம் ஒன்றே மாறாதது...

பாராளுமன்றத் தேர்தல்-2015 யாழ். மாவட்டம்



- வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரு சுயாட்சி மாநிலத்தை அமைப்பதற்காக
- சமநீதியையும் சமவாய்ப்பையும் எல்லோருக்கும் வழங்கக்கூடிய புதிய சமூகத்தை அமைப்பதற்காக
- அரச நிர்வாகத்தினரால் மீறப்படும் பொதுமக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக...

தெரிவு செய்யுங்கள்
(082)
(பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளிலிருந்து இளைஞர்களை மீட்ட அனுபவத்துடன்)
திரு.மு.சிவகுருநாதன்
(சிரேஷ்ட சட்டத்தரணி)
தமிழர் விடுதலைக் கூட்டணி


# தேர்தல் கருத்துக் கணிப்பு

## மாபெரும் போட்டி

- யாழ்ப்பாணம்-கிளிநொச்சி
- வன்னி

தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள்

உங்கள் கருத்துக்களுக்கு பெறுமதியான பரிசில்கள்

1. பெற்றுக் கொள்ளும் ஆசன எண்ணிக்கை?
2. பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள்?

### போட்டி நிபந்தனை

- ஒருவர் ஒரு கருத்துக்கணிப்பை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்
- போட்டியாளர் தாம் சார்ந்த தேர்தல் மாவட்டத்தின் முடிவை மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வலம்புரியில் வெளிவரும் விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு போட்டி முடிவுடன் இணைக்கப்பட வேண்டும்.
- முடிபுகள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தேர்தல் கருத்துக் கணிப்பு - 2015 என தவறாது குறிப்பிடவும்.
- உங்கள் கருத்துக்கணிப்பை 06.08.2015 தொடக்கம் 14.08.2015 வரை அனுப்ப முடியும் அனுப்பவேண்டிய முகவரி பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### போட்டிக்கான விண்ணப்பப்படிவம்

போட்டியாளரின் முழுப் பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல. : ..............................
தேசிய அடையாள அ.இல. : ..............................

..............................
போட்டியாளரின் கையொப்பம்

குறிப்பு:- தேர்தல் முடிபுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே போட்டி முடிபுகள், வெற்றியீட்டியவர்களின் விபரம் என்பன வெளிவரும்.



அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும்

# கம்பன் விழா-2015

### இன்றைய நிகழ்வுகள்

**காலை நிகழ்ச்சி**
*காலை : 9.00*
*இடம் : கம்பன் கோட்டம் நல்லூர்*

**மங்கல விளக்கேற்றல்**
வைத்திய நிபுணர் ரி.கோபிசங்கர் தம்பதியர்

**கடவுள் வாழ்த்து**
செல்வன் ஆர்.சுரசாகித்தியன்

**தலைமையுரை**
கலாநிதி ஆறு.திருமுருகன்

**தொடக்கவுரை**
கவிஞர் சோ.பத்மநாதன்

**கவி அரங்கம**
தலைவர்
கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன்
பொருள்
**"அன்று இவை அவர்கள் கைப்பட்டிருந்தால்..."**
அகலிகைக்கு "சிசிடிவி கமெரா"
ச.முகுந்தன்
இலக்குவனுக்கு "ஏகே 47"
த.நாகேஸ்வரன்
சூர்ப்பணகைக்கு "பார்லர்"
ந.விஜயசுந்தரம்
சீதைக்கு "செல்போன்"
நாக.சிவசிதம்பரம்
அனுமனுக்கு "பேஸ்புக்"
த.சிவசங்கர்
இராமனுக்கு "சட்டலைட்"
சி.சிவகுமார்

**மாலை நிகழ்ச்சி**
*மாலை : 4.30*
*இடம் : துக்கா மணிமண்டபம் நல்லூர்*

**மங்கல இசை**
திரு.பி.எஸ். பாலமுருகன் குழுவினர்

**மங்கல விளக்கேற்றல்**
வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா

**கடவுள் வாழ்த்து**
திருமதி.அ.சுகன்யா

**தலைமையுரை**
திரு.நா.வேதநாயகன்
(யாழ்.மாவட்ட அரச அதிபர்)

**தொடக்கவுரை**
மாண்புமிகு மா.இளஞ்செழியன்
(மேல்நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம்)

**வழக்காடு மன்றம்**
நீதியரசர்
பேராசிரியர் த.ராஜாராம்
பொருள்
**"குற்றக்கூண்டில் கௌதமர்"**
**வாதிகள்!**
த.இராமலிங்கம்
தி.வேல்நம்பி
**பிரதிவாதிகள்!**
இ.ஜெயராஜ்
த.சிவகுமாரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அகில இலங்கை கம்பன் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத அரசியலை முன்னெடுக்கும் மகிந்த ராஜபக்ஷவின் தரப்பினர்

## அமைச்சர் கருஜயசூரிய குற்றச்சாட்டு

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையி லான குழுவினர் இனவாத அரசியலை முன்னெ டுத்து வருகின்றனர். இனவாத அரசியல் இல்லாத ஒரே தெரிவு ஐக்கிய தேசிய முன்னணியாகும் என புத்தசாசன மற்றும உள்ளூராட்சி துறை அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**



புத்தசாசன மற்றும் உள்ளூராட்சி துறை அமைச்சர் கரு ஜெயசூரிய நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கும் ஆணையிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. புதிய பாராளுமன்றத்தின் ஊடாக அரசியலமைப்பு மறுசீரமைப்பு, பொருளாதார அபிவிருத்தி, நாட்டின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான கட்சியையே தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

ஆகவே தற்போதைக்கு மேற்குறிப்பிட்ட அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு உரிய கட்சியினுடைய தேவை எமக்கே உள்ளது. ஆகவே நாட்டை ஆட்சி செய்வதற்கு தகைமையான ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

மகிந்த ராஜபக்ஷ இனவாதத்தை கொண்டு அரசியல் செய்து வருகின்றார். எனினும இனவாத அரசியல் இல்லாத ஒரே தெரிவு ஐக்கிய தேசிய முன்னணியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

மேலும் நிரந்தர அரசாங்கமொன்றை உருவாக்குவதன் மூலமே சர்வதேசத்துடன் ஒன்றிணைந்து செயற்பட முடியும். ஆகவே இத்தகைய போக்கிற்கு நாம் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் 10ம் திகதி முதல் வழங்கப்படும்

ஓய்வூதியக் கொடுப்பனவில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஓய்வூதியம் அதிகரிக்கப்படவிருப்பதாக ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதிகரித்த ஓய்வூதியத்தை வழங்குவதற்காக திறைசேரி 1500 மில்லியன் ரூபாய்களை திணைக்களத்துக்கு விடுவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஓய்வூதியக் கொடுப்பனவு முரணபாடு தொடர்பில் தீர்மானம் எட்டப்பட்டது. இது தொடர்பில் 6/2006 சுற்றுநிருபம் வெளியிடப்பட்டிருந்தது. இந்த முரண்பாட்டைத் தீர்க்கும் நோக்கில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் அதிகரித்த ஓய்வூதியத்தை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கமைய அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்ற 3 இலட்சதது 37 ஆயிரம் பேர் நன்மையடையவுள்ளனர்.

2015/06/25 வெளியிடப்பட்ட 16/2015 என்ற நிர்வாக சுற்றுநிருபத்தின் கீழ் அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவை 2015/7/1 முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய ஓய்வூதியம் பெறுபவர்கள் 2500 ரூபா முதல் 10,ஆயிரம ரூபா வரை அதிகரித்த ஓய்வூதியத்தைப் பெறவிருப்பதாக ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

# சுஜீவவுக்கு உயிர் அச்சுறுத்தல்

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார்.

தனது தேர்தல் நடவடிக்கைகளின்போது பொலிஸாரினால் இடையூறுகள் ஏற்படுவதாகவும் இது தனது உயிருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகக் கருதுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனக்கான அச்சுறுத்தல் பல தடவைகள் தொடர்ந்ததாக கூறும் அவர், மதுபோதையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தனது தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும், அவர் உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளைக் கூறி தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டு இருக்கிறார்.

பொலிஸ் மாஅதிபர் தொடர்பில் தெரிவித்த கருத்தினால் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் ஆகவே, இது குறித்து உடனடியாக ஆராய்ந்து பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்குமாறு பிரதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் தேர்தல் பிரசார நடவ டிக்கைகளில் ஈடுபட்டிருந் போது சில இடங்களில் ஜீப் ஒன்றில் வந்த சுமார் 15 பொலிஸார் அங்கு ஒலிப் பதிவுகளை மேற்கொண்டதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 700 பில்லியன் ரூபா வரிவருமானம் மாயம்

## சம்பிக்க அதிர்ச்சித் தகவல்

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் உயர் வருமானம் பெறக்கூடியவர்களிடம் அறவிட்ட வரி வருமானும் 700 பில்லியன் ரூபா காணாமல் போயுள்ளது என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியினால் அரச சொத்துக்கள் தனியார் மயப்படுத்தப்படுவதாக கூறி பொய்யான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

மகிந்த ராஜபக்ச காலத்தில் செல்வந்தர்கள் வரி அறவிடுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டனர்.

உயர் வருமானம் பெறக கூடியவர்களிடம் வரி அறவிடுவதே பிரதான நோக் கம். சாதாரண நடுத்தர தரப்பினரிடையே வரி அறவிடுதலல்ல.

உயர் வருமானம் பெறக கூடியவர்களிடம் வரி அறவிடுவதை இல்லாமல் செய்தது மகிந்த ராஜபக்ஷவே.

உயர் வருமானம் பெறக் கூடியவர்களிடம் அறவிட்ட வருமான வரி 35% ஆக இருந்தது. அதை 28% மகிந்த ராஜபக்ஷ குறைத்தார்.

சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த 2004 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6% ஆக இருந்தது. குடும்ப வருமானம் 6.5% ஆக இருந்தது.

2012 - 2013 மகிந்தவின காலத்தில் குடும்ப வருமானம் 0.5% இனாலே அதிகரித்துள்ளது. அதே போல 700 பில்லியன் ரூபா காணாமல் போயுள்ளது எனத் தெரிவித்தார். (இ-7)




- ➢கி.மு 48 - ஜூலியஸ் சீசர் பம்பீயை சமரில் தோற்கடித்தான். பம்பீ எகிப்துக்கு தப்பி ஓடினான்.
- ➢378 - உரோமப் பேரரசன் வேலென்ஸ் தலைமையிலான பெரும் படை எகிப்தில் தோல்வியடைந்தது. மன்னனும் அவனது பாதிப்பங்குப் படையினரும் கொல்லப்பட்டனர்.
- ➢1048 - 23 நாட்களே பதவியிலிருந்த பின்னர் திருத் தந்தை இரண்டாம் டமாசஸ் இறந்தார்.
- ➢1173 - **பீசா சாயும் கோபுரத்தின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது இரு நூற் றாண்டுகளுக்குப் பின்னரே முடிவுற்றது.**
- ➢1655 - ஒலிவர் குரொம்வெல் பிரபு இங்கிலாந்தை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தார்,
- ➢1842 - ஐக்கிய அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் ரொக்கி மலைகளின் கிழக்குப் பகுதியில் எல்லைகளுக்கான உடன்பாடு எட்டப்பட்டது.
- ➢1892 - தோமஸ் அல்வா எடிசன் தனது இருவழி தந்திக்கான காப்புரிமம் பெற்றார்.
- ➢1902 - ஏழாம் எட்வேர்ட் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடிசூடினான்.
- ➢1907 - இங்கிலாந்தில் பிறௌன்சி தீவில் ஆகஸ்ட் 1 இல் ஆரம்பிக்கப்பட்ட சாரணிய இயக்கத்தின் முதல் பாசறை முடிவடைந்தது.
- ➢1942 - வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கியதற்காக மகாத்மா காந்தி உட்படப் பல இந்திய காங்கிரஸ் தலைவர்கள் பம்பா யில் கைது செய்யப்பட்டார்.
- ➢1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நகரான நாகசாக்கியின் மீது ஐக்கிய அமெரிக்கா வீசிய கொழுத்த மனிதன் எனப் பெயரிடப்பட்ட அணுகுண்டு 70,000 முதல் 90,000 வரையான பொது மக்களை அதே இடத்தில்கொன்றது.
- ➢1965 - சிங்கப்பூர் மலேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தனி நாடாகியது.
- ➢1965 - ஆர்கன்சில் டைட்டான் ஏவுகணைத தளத் தில் இடம்பெற்ற தீ விபத்தில் 53 தொழிலாளர்கள் கொல்லப் பட்டனர்.
- ➢1974 - வாட்டர்கேட் ஊழல்: அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் பதவி விலகினார்.

**பிறப்புக்கள்**

- ➢1776 - அமேடியோ அவகாதரோ, இத்தாலிய வேதியியலாளர் (இ. 1856)
- ➢1974 - மகேஷ் பாபு, தெலுங்கு திரைப்பட நடிகர்

**இறப்புகள்**

- ➢1962 - ஹேர்மன் ஹெசே, நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (பி. 1877)
- ➢1969 - செசில் பிராங்க் பவெல், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய இயற்பியலாளர் (பி. 1903)
- ➢1975 - திமீத்ரி சொஸ்தகோவிச், ரஷ்ய இசையமைப்பாளர் (பி. 1906)
- ➢2000 - ஜோன் ஹர்சானி, நோபல் பரிசு பெற்ற ஹங்கேரிய பொருளியலாளர் (பி. 1920)


# கம்மன்பில மீது சட்டநடவடிக்கை

## சம்பிக்க ரணவக்க அறிவிப்பு

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் மீது அவதூறு குற்றச்சாட்டை சுமத்தியமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கொழும்பு வேட்பாளர் உதய கம்மன்பில மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பிக்க ரணவக்க பொதுத் தேர்தல் பிரசாரங்களுக்காக 140 மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

இதேவேளை சில ஊடகங்களில் தலைமையாளர்களுக்கு கைத் தொலைபேசிகள் வழங்கப்பட்டதாகவும் சில செய்தித்தாள்களில் வெளியான செய்தியை ரணவக்கவின் ஊடகப்பிரிவு மறுத்துள்ளது. (இ-7)



### பீசாவின் சாய்ந்த கோபுரம்

பீசாவின் சாய்ந்த கோபுரம் (Lea ning Tower of Pisa) இத்தாலியின் பீசா நகரில் உள்ள பீசா பேராலயத்தின் மணிக்கோபுரமாகும். இது நிமிர்ந்து நிற்பதற்கே கட்டப்பட்டதாயினும், ஆகஸ்ட் 9, 1173 இல் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்ட போதே சாயத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

நிலத்திலிருந்து கோபுரத்தின் உயரம் 55 மீட்டர் ஆகும். இதன் நிறை 14,453 தொன் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதன் தற்போதைய சரிவு சுமார் 10%. இது 297 படிகளைக் கொண்டுள்ளது.

இத்தாலிய அரசாங்கம் இந்த சாயும் கோபுரம் விழுந்து விடாமல் பாதுகாக்க உதவும்படி 1964, பெப்ரவரி 27 இல் கோரிக்கை விடுத்தது.

1990, ஜனவரி 7 இல் இக்கோபுரம் பாதுகாப்புக் காரணங்களுக்காக, பொதுமக்களுக்கு மூடப்பட்டது. அண்மையில் கோபுரத்தின் சரிவுக் கோணத்தைக் குறைப்பதற்காகச் சில கட்டுமானப் பணிகள் நடைபெற்றன. 10 ஆண்டு வேலைகளுக்குப்பின் 2001, ஜூன் 16 இல் மீண்டும் பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைக்கொடி விவகாரம்

# இராணுவத்தை காட்டிக்கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி சதிமுயற்சி!

## போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்த ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்கிறார் சுசில்

(கொழும்பு)



**வெள்ளைக்கொடி விவகாரத்தில் இராணுவத்தை காட்டிக்கொடுக்கவே ஐக்கிய தேசியக் கட்சி சதி முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. நாட்டையும் நாட்டை காப்பாற்றிய இராணுவத்தையும் காப்பாற்றுவதில் இவர்கள் அக்கறையின்றி செயற்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த குற்றம்சாட்டியுள்ள அதேவேளை போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்வைக்கும் ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளைக்கொடி விவகாரத்தில் இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் புதிய அரசாங்கம் பொறுப்பில்லாது செயற்படுகின்றது. இந்த விவகாரத்தில் இராணுவ த்தை காப்பாற்றாது சர்வதேச விசாரணையில் சிக்கவைக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதேபோல் ஐக்கிய நாடுகளின் அறிக்கையின் இரகசியங்கள் கசிந்துள்ளன. இதிலும் இலங்கை விவகாரத்தில் இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது.

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் பல அறிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. சனல் 4 நிறுவனத்தின் ஊடகவியலாளர் கெலம் மக்ரே தொடர்ச்சியாக ஆவணங்களை உருவாக்கி ஐ.நா ஆணைக்குழுவிடம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

ஆனால் இவர்கள் முன்வைக்கும் ஆவணங்கள் அனைத்தும் பொய்யானதே. நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த திட்டமிட்டு இவர்கள் முயற்சித்து வருகின்றனர். யுத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் இவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் புகைப்படங்களும் உண்மைக்கு முரணானதாகும். கெலம் மக்ரே கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்திருந்த போதும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதர வில் தான் செயற்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்புகளில் தான் கலந்து கொண் டிருந்தார். ஆகவே இவர்கள் அனைவரும் பக்கச்சார்பான வகையில் தான் செயற்படுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அவர்களுடன் புதிதாக கூட்டு சேர்ந்திருக்கும் நபர்களுக்கும் நாட்டையும், நாட்டை காப்பாற்றிய இரா ணுவ வீரர்களையும் காப்பாற்றும் நோக்கம் இல்லை. மாறாக நாட்டையும், இராணுவத்தையும் காட்டிக் கொடுக்கவே முயற்சிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அக்கிரமக்கார அரசாங்கத்தை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு முயற்சி

### அமைச்சராக தானும் இருந்ததை மறந்து குற்றம்சாட்டுகிறார் ஹக்கீம்

கடந்த ஜனவரி 8இல் விரட்டியடித்த அக்கிரமக்கார அரசாங்கத்தை மீண்டும் மறைமுகமாக ஆட்சிக்கு கொண்டுவருகின்ற ஒரு பின்னணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் செயற்பட முடியாது. இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நகர அபிவிருத்தி நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நிந்தவூரில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரீ.ஹஸன் அலி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.சி.பைசால் காசிம், எச்.எம்.எம். ஹரீஸ் வேட்பாளர் எம்.ஐ.எம்.மன்சூர உட்பட பெருந்தொகையான பொது மக்களும் கலந்து கொண்டனர். இதன் போது அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இந்த தேர்தல் வியூகம் சம்பந்தமாக தவிர்க்க முடியாத விமர்சனங்களை நாம் எதிர்நோக்கினோம்.

ஐக்கிய தேசிய கட்சியோடு சேர்ந்து போட்டியிடுகின்ற போது அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பெருந்தேசியவாத அமைச்சர்களின் கையில் இந்த மாவட்ட அரசியல் அதிகாரத்தை கொடுப்பதா என்ற கேள்விக்கு பதில் காண வேண்டியுளளது. இதற்காக அக்கட்சியில் போட்டியிடும் மு.கா. பிரதிநிதிகளை முஸ்லிம் மக்கள் ஆதரித்தே ஆக வேண்டும். கூட்டத்தோடு கோபித்து விட்டு மூக்கறுப்பார்கள் என்று அஞ்சி, பயந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுக்க முடியாது.

இடைக்கால ஆட்சியில் நிலைக்காத அதிகாரத்தை கொண்டிருந்த நிலையில் அபிவிருத்தியின் தீராத தாகத்தை தீர்க்க வேண்டும் என்றால் அதற்கு ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முடிவு பொருத்தமானதாகும்.

அம்பாறை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி பிராந்திய தலைமையின் முரண்டு பிடிக்கும் விதண்டாவாத அரசியலை மாற்றுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இந்த தேர்தல் வியூகத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் பொத்துவில் தொகுதியின் அரசியல் அதிகாரம் மீண்டும் நிந்தவூருக்கு கிடைக்கவிருக்கின்ற அதேவேளை, அம்பாறை மாவட்டத்தினுடைய அரசியல் அதிகாரத்தினுடைய கடிவாளம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கரங்களுக்கு கிடைக்க வேண்டுமாயின் எமது வியூகம் வெற்றிபெற அம்பாறை மாவட்ட முஸலிம்கள் ஒன்றுபட்டு மு.கா.வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கவின் பேச்சாளராக சந்திரிகா மாறியுள்ளாராம்

### ஜனக பண்டார தென்னக்கோன் வருத்தம்



ஐக்கிய தேசிய கட்சிக்கு சார்பாக எந்தவொரு காரியத்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது பண்டாரநாயக்க பரம்பரையோ மேற்கொள்ள முடியாது. அவ்வாறு செயற்படுவது பண்டாரநாயக்க பரம்பரைக்கு செய்யும் துரோகமாகும் எனவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இன்று ஐக்கிய தேசிய கட்சியின் பேச்சாளராக மாறியுள்ளமை வேதனையளிக்கின்றது எனவும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனக பண்டார தென்னக்கோன் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகரான சந்திரிகா பண்டாரநாயக்க இன்று ஐக்கிய தேசிய கட்சியின் பேச்சாளராக மாறியுள்ளார். இதனை வன்மையாக கண்டிக்கின்றேன். ஐ.தே.கட்சிக்கு சார்பான எந்தவொரு காரியத்தையும் சுதந்திரக் கட்சியாலோ அல்லது பண்டாரநாயக்க பரம்பரையினாலோ மேற்கொள்ள முடியாது.

அவ்வாறு மேற்கொள்வது என்பது பண்டாரநாயக்க பரம்பரைக்கும் சந்திரிகாவின் பெற்றோருக்கும் செய்யும் துரோகமாகும். மகிந்தவிற்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகளை சந்திரிகா கைவிட வேண்டும். அவரது கருத்துக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துள்ளது. இவை எமக்கு வேதனையளிக்கின்றது என்றும் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### சத்தமில்லாத யுத்தம்

“சரசு உன் வீட்டுக்காரர் எங்கே?”

“அரசியல் வாதியானதற்குப் பின் அவர் எங்கே வீட்டில் தங்கிறார்? எந்த ஊரில் எந்த மேடையில் பேசிக் கொண் டிருக்கிறாரோ?”

“பேசட்டும் பரவாயில்லை. ஆனால் சத்தம் போட்டுப் பேசச் சொல் ்லாதே”

“ஏன்?”

“சத்தம் போட்டுப் பேசுபவர்களுக்கு குரல்வளை பாதிக்கப் படுவதாக டாக்டர்கள் சொல்கிறார்கள்.

“அப்படியா?” “ஆமாம் 16 விதமான நோய்கள் குரல்வளையை பாதிக் கிறதாம். முக்கியமாக பாதிப்புக் குள்ளாகிறவ ர்கள் யார் தெரி யுமா?”

“யார்?”

“ஆசிரியர்கள், பாடகர்கள், அரசியல் வாதிகள்”

“அப்படியானால் இவர்களெல்லாம் பாடம் நடத்தி னாலும் பாடினா லும் பேசினாலும் அதிக சத்தம் போடாமல் இருப்பது நல்லது என் கிறாயா”

“ஆமாம் அதனால் தான் எனது வீட்டிக்காரரிடம் கூடச் சொல்லி வைத்திருக்கின்றேன்.”

“என்ன சொல்லி வைத்திருக்கின்றாய்?”

“என்னை திட்டுவதென்றால் கூட மெதுவாக திட்டு ங்கள் என்று சொல்லி வைத்திருக்கின்றேன்”

“உங்களுக்குள் சண்டை வருமா?”

“என்ன அப்படிக்கேட்டு விட்டாய்? தினமும் சண்டை சச்சரவுதான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்குக் கூட கேட்காது.”

“ஆச்சரியமாக இருக்கிறதே!”

“இருந்தாலும் அடுத்த ஜென்மத்திலும் அவரே என் கணவராக வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டி ருக்கிறேன்.”


“அப்படியா?”

“ஆமாம், போட வேண்டிய சண்டை இன்னும் பாக்கி இருக்கிறது.”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்



# நான் நேசித்த மக்களை கைவிட்டு எங்கும் ஓடிப்போனவன் அல்லன்

## டக்ளஸ் சுட்டிக்காட்டு



**நாம் கடந்துவந்த பாதை கடினமானது. கற்களும் முட்களும் நிறைந்தது. எமது இலட்சிய கனவுகளை வென்றெடுப்பதற்காக நாம் பெரும் காட்டாற்று வெள்ளத்தின் மீதேறியே நடந்துவந்திருக்கிறோம். எக்காலத்திலும், நான் நேசித்த எமது மக்களை கைவிட்டு எங்கும் ஓடிப்போனவன் அல்லன் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

சுன்னாகத்தில் நடைபெற்ற பொது மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1986 ஆம் ஆண்டு நான் அப்போது வழிநடத்திச்சென்றிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் உள் முரண்பாடுகளை பேசித் தீர்ப்பதற்காக இந்தியா சென்றிருந்த நான் மறுபடியும், 1990 ஆம் ஆண்டு நடுப் பகுதியில தான் எமது மண்ணில் கால் பதித்திருந்தேன். இந்த இடைவெளியில் தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்ற பொன்னான வாய்ப்பு எமக்கு கிடைத்திருந்தது.

அதை நாம் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருந்தாலும், அதன் நடைமுறையில், அதன் நன்மை, தீமைகளில் ஒருபோதும் நான் பங்கெடுத்திருக்கவில்லை.

சுயலாப ஏமாற்று தமிழ்த்தலைமைகள் போலி உணர்ச்சி பொங்க பேசுவார்கள், மக்களை உசுப்பேற்றுவார்கள், தாம் மட்டும் தத்தமது குடும்பங்களோடு மக்களை கைவிட்டு ஓடுவார்கள்.

திருவிழா வியாபாரிகள் போல் மீண்டும் தேர்தல் திருவிழாவிற்கு வந்து கடை விரிப்பார்கள். தேர்தல் முடிந்தவுடன் பெட்டி படுக்கை, மூட்டை மூடிச்சுகளை கட்டிக் கொண்டு மீண்டும் ஓடுவார்கள்.

மீண்டும் அடுத்த தேர்தல் திருவிழாவிற்கு வந்து கடை விரிப்பார்கள். இப்படி ஒரு சுழற்சி முறையிலான அரசியலை நான் ஒருபோதும் நடத்தியவன் அல்லன்.

நீரில் வாழும் மீன்களைப் போல் நாமும் நிரந்தரமாகவே எமது மக்கள் என்ற கடலில் நீடித்து நின்றிருக்கின்றோம். அளப்பரிய பணிகளை ஆற்றியிருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவரும் மக்கள் மத்தியில் ஒருபோதும் வாழ்வது இல்லையென்றும் அவர் களது குடும் பங்களும் வெளி நாடுகளிலேயே வாழ்ந்து வருவதாகவும் முதல்வர் விக்னேஸ்வரன் அண்மையில் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ளவர்களை இம்முறை தேர்தலில் தாம் ஆதரிக்கப் போவதில்லையென்று அவர் தெரிவித்திருந்ததையும் இங்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.


நாம் எமது இலட்சியக்கனவான அரசியலுரிமைக் காக உழைக்க வேண்டும் என்ற எமது கொள்கைப் பிடிவாதம் போல், அழிவு யுத்தத்தில் அவலப்படும் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்ற விருப்பங்களும், சிதைந்து கொண்டிருந்த எமது தேசத்தை அபிவிருத்தியால் தூக்கிநிறுத்த வேண்டும் என்ற எமது தேசிய அபிலாசைகளுமே அதற்குக் காரணம்.

எமது மக்களின் அன்றாட அவலங்களை நாமே தீர்த்தோம்,

சிதைந்து போன எமது தேசத்தை தூக்கி நிறுத்தும் அபிவிருத்தி பணிகளையும் நாமே முன்னெடுத்தோம். இவைகளை வெறும் சலுகைகள் என்று ஏமாற்று தமிழ் தலைமைகள் எம் மீது சேற்றை வாரி தூற்றினார்கள்.

இவைகள் சலுகைகளா?... அல்லது எமது மக்களின் வாழ்வியல் உரிமைகளா?... 'இதை அழிவு யுத்தத்தின் போது அவலப்பட்டு நின்றிருந்த எமது மக்களாகிய நீங்களே தீர்மானிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஏமாற்றும் அரசியல்வாதிகள் இருக்கும் வரை விடிவில்லை



## அங்கஜன் அதிருப்தி

ஏமாற்றும் அரசியல்வாதிகள் இருக்கும் வரை எமது மக்களுக்கு எவ்வகையிலும் விடிவு வராது. ஆகையால் ஏமாற்று அரசியல்வாதிகளின் பொய்ப்பிரசாரங்களைக கண்டறிந்து வாக்களியுங்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியின் யாழ். மாவட்ட பிரதம வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். உடுப்பிட்டி மல்லாந்தரை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


எமது மக்களின், இளைஞர் களின் எதிர்காலத்தை வளமாக்கும் முகமாக நாம் இன்று சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும். நாளைய தலைமுறைக்கு நாம் வளமானதொரு எதிர்காலத்தை வழங்க வேண்டியது எங்கள் கடமையாகும்.

கடந்த 10 வருடங்களுக்கு முன் எமது மக்கள் வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்.மாவட்டம் காணப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே. ஆனால் தற்போது வளர்ச்சி பாதை நோக்கி செல்லும் உண்மையை நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். எம் மக்கள் சொல்ல முடியாத துயரை அனுபவித்தவர்கள். ஆனால் இனி அவ்வாறு நடக்காது. நடக்கவும் வடமாட்டேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

எமது மக்களை பயன்படுத்தி சுயலாப அரசியல் கண்டோர் பலர். இன்று சுயநிர்ணயம், சுய உரிமை என்று உரைக்கும் ஒரு அரசியல் வாதியின் மகன் கூட மக்கள் பிரச்சினைக்காக போராடி சிறை சென்றதில்லை. ஆனால பல அப்பாவி மக்களை கேடயமாக உபயோகித்து போராடடங்களில் பங்கெடுக்க வைத்து சிறைச்சாலைக்கு அனுப்பியுள்ளனர். அது எல்லோருக்கும் தெரியும். நான யாரையும் குறை கூற வரவில்லை. நான் தெளிவாக விளக்குவது மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் அரசியல் வாதியை இனங்காணுங்கள். மக்களை பயன்படுத்தி அரசியல் இலாபம் பெறும் அரசியல் வாதிகளை புறந்தள்ளுங் கள். எமக்கு எது தேவை? எது சரியானது என்பதை அறிந்து செயற்படுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சட்டத்தை மீறி சில கட்சிகள் பரப்புரையில் ஈடுபடுகின்றன

## கணேஷ்வரன் குற்றச்சாட்டு



உண்மையில் இந்த தேர்தலில் நாடாளுமன்ற சட்ட விதிகளை மதித்து தங்களுடைய சுயேட்சைக் குழுவின் இலக்கத் தையோ சின்னத்தை வேட்பாளர் இலக்கத்தையோ சுவரொட்டிகள் அச்சிட்டு எந்தவொரு வீதிச் சுவர்களில் ஒட்டாது அந்தப் பணத்தை பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவி செய்து வரும ஆறாம் இலக்க சுயேட்சைக் குழு ஒன்றே ஆகும், ஆனால் அந்த சட்டதையும் மீறி சில கட்சிகள்சுவரொட்டிகளை வீதிச் சுவர்களில் ஒட்டி தங்கள்பிரசாரத்தை மேற்கொணடு வருவது தொடர்பாக சட்டம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று ஆறாம் சுயேட்சைக் குழுவின் முதன்மை வேட்பாளர்வேலா யுதம்கணேஷ்வரன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது கலந்து கொண்ட ஆறாம் சுயேட் சைக் குழுவில் கேடயம சின்னத் தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் வேலாயுதம கணேஷ்வரன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

சட்டம் என்பது பொதுவான விடயம். சட்டத்தை மதித்து அதற்கு கௌரவம் அளித்தல் வேண்டும். நாங்கள் எப்பொழுதும் சட்டத்தை மதிப்பவர்கள்.

ஆனால் சட்டத்தை மிதிபவர்கள் அல்லர். எத்தனையோ மக்கள் முகாம் களில் அன்றாடம் ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவையை உணர்ந்து பார்ப்போமாயின் பெருந் தொகையான பணத்தை வீண் விரயம் செய்து சுவரொட்டிகளை அச்சிட்டு தேர்தல் விதி முறையிலுள்ள சட்டத்தை மீறி இந்த சுவரொட்டி விளம்பரங்களைச் செய்வதற்கு எவரும்முன்வர மாட்டார்கள். தேர்தல் என்பது கட்சிகளை வளர்ப்பதே தவிர தமது மக்கள் வறுமையால் வாடும் நிலையை மறக்கச் செய்திடும் ஒன்றாகவே இருக்கிறது. கடந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அல்லற்படும் நிலையை நேரில் சென்று அவர்களுடன் நெருங்கிப் பழகினால் மட்டுமே புரிந்து கொள்ளலாம்என அவர் மேலும்தெரிவித்தார். (இ)

# தேசம் என்பது தனிநாடு அல்ல

## கஜேந்திரகுமார் விளக்கம்



ஒரு நாடு இரண்டு தேசங்கள் என்ற எமது கட்சியன் கொள்கையில் தேசம என்பதை தனிநாடு என்ற ரீதியில் சில அரசியல்வாதிகளும் சட்டத்தரணிகளும திரிபுபடுத்திக் கூறி வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடு இரு தேசம் என்பது வெற்றுக் கோஷம் எனவும் அது அர்த்தமில்லாதது எனவும் வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ. கே. சிவஞானம் கூறியிருந்தார். இந்த கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "இது அடிப்படையில் நேர்மையில்லாத பிரசாரம். இவ்வாறான பொய்ப பிரசாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கின்றது. இலங்கை அரசாங்கம் ஒரு நாடு, ஒரு தேசம் என்பதை வலியுறுத்தி வந்தது. பலாலி வீதிச் சந்தியில் பல காலங்களாக அந்த வாசகம் காணப்பட்டது" என்றார்.

"நாட்டுக்கும் தேசத்துக்கும் வித்தியாசம் தெரியாத அரசியல்வாதிகள் பலர் உள்ளனர். அதில் தமிழ் அரசியல் வாதிகள் அதிகம் உள்ளனர். சட்டத்தரணிகளுக்கு இது தொடர்பில் நன்றாகத் தெரிந்தும் அவர்களும் தேசத்தை நாடு என்றுரைக்கினறனர். இது மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும். மக்களை தொடர்ந்தும் முட்டாளாக்கி அவர்களை அழிக்கும முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியம் என்ற பெயரில் கட்சியை வைத்து தேசம் என்பதை இல்லையென்கினறனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தின் கீழ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடுகின்றது. எமது கொள்கைக்கு முரணாக நாங்கள் சொல்கின்றோம் என்பது அப்பட்டமான பொய். தனி நாடு என்ற கோட்பாட்டின் கீழ் தீர்வை எட்ட முடி யாத நிலையில், கட்சியின் யாப்பை சுயநிர்ணய உரிமை, தேசம் என்ற ரீதியில் கொண்டு வந்துள்ளோம். இது பலருக்குத் தெரியும். தெரிந்தும் ஞாபக மறதியில் கதைக்கின்றனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல்-2015
# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

## தமிழர் விடுதலைக் கூட்டணியை

### உருவாக்கிய உத்தமர்களான


அ. அமிர்தலிங்கம்


ஜி.ஜி.பொன்னம்பலம்


தந்தை செல்வா


சௌ. தொண்டமான்


மு. சிவசிதம்பரம்

இவர்களின் இலட்சியப் பாதையில்


முதன்மை வேட்பாளர்
இ. த. விக்னராசா
(ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி)

என் அருமை வாக்காளப் பெருமக்களே!

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் நீதியையும், அர்ப்பணிப்புடனும் இதயசுத்தியுடனும் செயற்பட்டு, பெற்றுத் தரக்கூடியவர்களே இன்றைய காலத்தின் தேவை என்பதனை நன்கு உணர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகால ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் ஒன்று திரண்டு ஆவணி 17 ஆம் திகதிய பாராளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக என்னை ஏகமனதாக நியமித்துள்ளனர்.

அண்ணன் அமிர்தலிங்கத்துடன் அன்று வாலிபனாக வட்டுக்கோட்டைத் தொகுதி பூராகவும் மக்களை அவர்தம் வதிவிடங்களுக்கு நேரில் சென்று சந்தித்து உரையாடியது போல உங்கள் ஒவ்வொருவரையும் நேரில் வந்து சந்தித்து உரையாடி, நேர்மையான, மக்கள் பற்றுள்ள ஒரு புதிய தமிழ்த் தேசியத்துக்கு அர்ப்பணிப்புடன் ஆழமாக வடிவமைக்கப்பட்ட வல்லவர்களை அடையாளம் கண்டு பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டியது இன்றைய காலத்தின் தேவை என்ற உண்மைகளை தெளிவுபடுத்தி, உங்கள் உள்ளத்தில் நம்பிக்கை ஒளிக்கீற்றை உருவாக்க வேண்டுமென்ற எனது இதய பூர்வமான ஆதங்கத்தை செயல் வடிவம் கொடுக்க தற்போதைய தேர்தல்கள் சட்டம் இடமளிக்காமையால் இம் மடலை வரைகிறேன்.

முதற்கண், கடந்த வட மாகாண சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, புளோட் ஆகிய அரசியல் கட்சிகள் ஓரணியாகத் திரண்டு தேர்தலில் போட்டியிட்டு ஒரு இலட்சத்து முப்பத்து மூவாயிரம் விருப்பு வாக்குகளை தமிழ் பேசும் மக்கள் வழங்கிஅடையாளம்காட்டிமுதலமைச்சராக தெரிவான நீதியரசர் க. வ. விக்னேஸ்வரன் அவர்கள் ஆவணி மாதம் 17 ஆம் திகதிய பாராளுமன்ற தேர்தலில் அரசியல் நேர்மையுள்ள, நீதியான, சலுகைகளுக்கு விலை போகாத மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் கூடியவர்களை உங்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்ய வேண்டுமென விடுத்த வேண்டுகோள் இலட்சியப் பற்றுள்ள இனிய தமிழ் பேசும் மக்களுடைய சிந்தனைக்குரியதாகும் எனக் கருதுகிறேன். ஏனெனில், வட மாகாண சபைத் தேர்தலில் ஓரணியாகத் திரண்டு நின்ற தமிழ் அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவும் தமிழ் பேசும் மக்கள் முன் நிற்பதனால் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களை மாத்திரம் ஆதரிக்காது ஓர் நடுநிலைமையுடன் மக்களை சரியான வழியில் வழி நடத்தும் பொருட்டு உரிமைகளையும், நீதியையும் தூரநோக்குப் பார்வையில் அர்ப்பணிப்புடன் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்கக்கூடிய சலுகைகளுக்கு விலை போகாத பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு நீதியரசர் க. வ. விக்னேஸ்வரன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதுடன் இதேவேண்டுகோளை மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் அவர்களும் வலியுறுத்தியுள்ளார்.

1961 ஆம் ஆண்டு மாசி மாதம் 20 ஆம் திகதி தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்த இலங்கை அரசுக்கெதிராக யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் அங்கமாக தன்னை 1976 இல் இணைத்துக் கொண்ட தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வாவினால், ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் விஸ்வரூபம் எடுத்து தபால் சேவை நடாத்த எடுத்த முடிவுக்கமைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்னும் ஓர் அங்கமாக தன்னை 1976 இல் இணைத்துக் கொண்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் அவர்கள் போராட்டத்தில் இணைந்து முதலாவது கடிதத்தை அரசாங்க அதிபருக்கு விநியோகித்து தமிழ்த் தேசியத்திற்கு வலுவூட்டினார். ஆகவே, 1960 ஆம் ஆண்டிலேயே என் இனிய தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தை முன்னிறுத்தக் கூடியவர்களையே தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்தனர் என்பது மறத் தமிழர் வரலாறாகும்.

ஆகவே, நேர்மையான அரசியலில் அர்ப்பணிப்புடன் தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தில் உறுதியுடன் தூர நோக்குப் பார்வையில் மக்களுடைய துன்ப துயரங்களை மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து அனுபவித்தவன் என்ற வகையிலும், பிறந்தது முதல் இன்றுவரை, கொடூரமான யுத்த நிலைமைகளிலும்இம்மண்ணை விட்டுச் செல்லாமல்பின்வரும் வகையிலும் அவற்றிற்கு மேலாகவும் என்னால் இயன்றளவு மக்களுக்காக சேவையாற்றியவன் என்ற வகையிலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்க உறுதி பூண்டுள்ளேன்.

பிரதானமாக, குடாநாட்டிலும், வன்னிப் பிராந்தியங்களிலும் நீதிமன்றங்கள் இயங்காமல் இருந்த நேரங்களில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகத்தினால் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்ல வேண்டிய நோயாளிகளின் போக்குவரத்து சேவையை யாழ். கிளை அம்புலன்ஸ் வண்டி மூலம் கிளாலி வரையும், அங்கிருந்து நல்லூர் இறங்குதுறை வரை மிகத் திகிலான அனுபவங்களுடன் படகிலும், அங்கிருந்து கொழும்பு வைத்தியசாலை வரை கிளிநொச்சிக் கிளையில் தங்கவிட்ட யாழ். கிளை அம்புலன்ஸ் வண்டி மூலமும் வழங்கப்பட்ட அச் சேவையின் செயற்பாட்டு பொறுப்பு அலுவலராக குறித்த நோயாளிகளுடன் மக்கள் சேவையை மாத்திரம் நோக்காக கொண்டு பயணித்து செயற்பட்டு வந்ததுடன், பின்னர் 1997 ஆம் ஆண்டில் நீதிமன்றங்கள் செயற்பட ஆரம்பித்து நீதிபதியாக கடமையாற்றிய காலங்களிலும் நீதிமன்றங்களில் ஏற்பட்ட வேலை வாய்ப்பு வெற்றிடங்களை நிரப்பும் முகமாக வடபகுதி இளைஞர் யுவதிகள் நேர்முக தேர்விற்காக தென்ப குதி செல்வதில் காணப்பட்ட தடங்கல்களை கருத்தில் எடுத்து அவர்களின் வேலைவாய்ப்பு உரிமையை நிலைநாட்டும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுத்து நியமனங்களை உறுதி செய்து பெற்றுக் கொடுத்ததோடு, போர்க் காலகட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் குடும்பமாக படகுகளில் இந்தியாவிற்கு தஞ்சமடைய கடலில் பயணம் செய்யும் போது சட்டவிரோதமான முறை என கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட போதும் சட்டமா அதிபரினால் இவர்களுக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவில்லையென நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் சட்டத்தின் தேவைப்பாட்டிற்கமைய அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டிய நிலைமையில் விடுதலையானவர்கள் பலர் தமக்கென யாருமற்ற சூழ்நிலையில் சுதந்திரமாக வெளியே சென்று தங்க இயலாமல் இருந்த சூழ்நிலையிலும், தொடர்ந்து சிறைச்சாலையில் தங்க சட்ட ஏற்பாடுகள் அற்ற நிலையிலும் உரிய அதிகாரிகளின் அனுமதிகளை சிரமங்களின் மத்தியில் பெற்று காலஞ்சென்ற எனது மனைவியின் முழுமையான ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுடன் அவர்களை தங்க வைத்து பராமரிக்கும் ஒழுங்குகள் ஏற்பாடுகள் யாவையும் என்னால் மனித நேயத்துடனும் இதய சுத்தியுடனும்செய்யப்பட்டன.

எனவே, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்க உறுதி பூண்டுள்ள நிலையில்,அவ்வாறு நான் செயற்பட வேண்டும் என நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டு அங்கீகரித்து, உங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று **உங்கள் பொன்னான வாக்கினை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதய சூரியன் சின்னத்திற்கும் எனக்கெனத் தரப்பட்டிருக்கும் இலக்கமான 1 ஆம் இலக்கத்திற்கும் புள்ளடியிட்டு** என்னை உங்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டுள்ளதை வெளிக்காட்டி தேர்நிதடுப்பதன் மூலம் என்னால் சேவை மனப்பான்மையுடனான அர்ப்பணிப்புடனும், மன சுத்தியுடனும், இதுவரை நான் சேவையாற்றியது போல தொடர்ந்தும் இந்த புதிய பரிமாணத்தில் என்னால் உங்களுக்கு சேவையாற்ற முடியும் என்பதை என் இனிய தமிழ் பேசும் இதயங்களுக்கு இத்தால் வெளிப்படுத்தி உறுதி கூறுகிறேன்.

### எமது அரசியல் பிரச்சினைக்கான தீர்வு

2002 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 11 ஆம் திகதி சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் கிளிநொச்சி நீதிமன்ற கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களால் பிராந்தியங்களின் ஒன்றியம் என்பதனை மையமாகக் கொண்டு வரையப்பட்ட அரசியலமைப்பு வரைபு தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியது. என தெளிவுபடுத்தியுள்ளதால் குறித்த அரசியலமைப்பு வாயிலாக தமிழ் மக்களின் உறைவிடங்களை பிராந்தியங்களின் ஒன்றியமாக உருவாக்க உறுதியளிக்கின்றேன். மேலும் தாங்கள் ஆணை வழங்கும் பட்சத்தில்


- ஆட்சிமொழியாக்கப்பட்ட தமிழ் மொழியை நீதி, நிர்வாகத் துறைகளில் அமுல்படுத்த அரசியல மைப்பில் செய்யப்பட்ட 16 ஆவது திருத்தத்தை நுழைவாயிலாகக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆட்சி மொழியாக தமிழ் மொழி கோலோச்ச வகை செய்தல்.
- சட்டம் - ஒழுங்கு, நிலம், கல்வி, கலாசாரம், சுகாதாரம், உள்ளூராட்சித்துறை என்பவற்றை முழுமையாக பிராந்திய சபையிடம் கையளித்தல்.
- கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தமிழ் பேசும் மக்களுக்கு சம்பூரண சமஉரிமையை உருவாக்குதல்.
- யாழ்ப்பாணத்தில் உடனடியாக தொழில் நீதிமன்றம் மீள செயற்பட நடவடிக்கை எடுத்தல்.
- ஏனைய பிரதேசங்களைப் போன்று வடக்கிலும் தொழிற்சங்கங்களை வளரச் செய்து ஸ்திரப்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.
- பெண்கள் தலைமைத்துவத்தின் கீழ் உள்ள குடும்பங்களின் வாழவாதாரத்தை ஸ்திரப்படுத்தி, சமூகத்தில் உரிய அந்தஸ்துடன் வாழ வழிசமைத்தல்
- பெண்கள், சிறுவர்களுக கெதிரான வன்முறைகளை துடைத் தெறிய, சமுதாய விழுமியங்களை பேணும் பொறிமுறைகளை சமூகத்தில் உருவாக்குதல்.
- பிராந்திய மட்டத்தில் ஒரு உயர் நீதிமன்றம் அமைக்கப்படுதல்.
- பிராந்திய சபைகளுக்கு பொருளாதார ஒதுக்கீடு பற்றி தீர்மானம் செய்வதற்கு ஒரு நிதிக்குழு உருவாக்குதல்.
- அரசியல் கைதிகளைவிடுதலை செய்யவோ அல்லது குறைந்தபட்சம் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யுமாறு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்குதல்.
- போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுத்தல். அல்லாதுவிடின் சுயதொழிலில் ஈடுபடும் வாய்ப்பையேனும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுத்தல்.
- இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் வீடுகள் மற்றும் நிலங்கள் எதுவித மறுப்புமின்றி உடனடியாக உரியவருக்கு கையளிக்கப்படவும், மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த சகோதர முஸ்லிம் மக்கள் அனைவரையும் அவரவர் இடங்களில் மீளக் குடியேறவும், குடியேறும் மற்றும் குடியேற்றப்படும் சகோதர முஸ்லிம் மக்களின் அவசிய தேவைகளை அடையாளம் கண்டு பூர்த்தியாக்கப்படல்.
- மீன்பிடி பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் வடபகுதி மக்களை பாதிக்காத வகையில் சுமுகமான தீர்வுக்கு இணங்கவேண்டும் என வலியுறுத்தி, தீர்வுக்கு உதவுதல்.

போன்றவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கவும் அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் செயலாற்றுவோம் என உறுதியளிக்கிறேன்.


தமிழ்பேசும்மக்களாகிய நீங்கள்ஒன்றிணைந்து கடந்த ஜனாதிபதித தேர்தல்ல் அரசியல் சாணக்கியத்துடன் புத்திசாலித்தனமாக வாக்களிதது ஒரு ஜனாதிபதியை மாற்றக் கூடிய சக் தியை அகிலத்திற்கு வெளிப்படுத்தினீ கள். அதேபோல எதிர்வரும் பொதுத தேர்தலிலும், **நேர்மையான அரசி யல் கொள்கையில்உறுதயாக நினறு தமழ்த் தேசியத்தின் மீது தமக்கு ள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார் மீகக் கடமைகளை சரிவரச் செய்ய மனோதிடம் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட் பாளர் களுக்கு ஒற்றுமையாக ஒருமித்து வாக்களித்து தமிழ் பேசும் மக்களின் இதயங்கஎில்இறைஞ்சுகின்ற அர்த் தமுள்ள அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண** டுமென அறை கூவல் விடுக்கிறேன்.

நன்றி.

இ. த. விக்னராசா



ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி
தமிழர் விடுதலைக் கூட்டணியின்
முதன்மை வேட்பாளர் (சி-402)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தருக்குள் நித்திரையடைந்து மறைந்தும் மறையாத 'ஆசிரியர் திலகம்' சித்தன் பாலசுப்பிரமணியம்(ஓய்வு நிலை உதவி அதிபர், யாழ். மத்திய கல்லூரி) அவர்களின் 31 ஆம் நாள் நினைந்துருகல்

### அருட்திரு.எஸ்.ஏ.றொஷானின் இதயத்தில் இருந்து

''பாலா'' ஆசிரியரின் திடீர் மரணம் வேதனைமிக்க செய்தியாக அமைந்தது. மனித உருவாக்கத்தில் சமூகத்தில் பலர் அங்கம் வகிக்கின்றனர். குறிப்பாக ஞானத்தையும் அறிவையும் ஊட்டும் ஆசான்களின் பங்கு மிகப் பெரியது.

அவ்வகையில் ஆசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்களை நான் எனது உள்ளத்திலும் கல்வி வாழ்விலும் சுமந்து செல்கின்றேன். யாழ்.மத்தியில் கல்வி ப்யிலும் காலத்தில் எனது விஞ்ஞான ஆசிரியராகவும் வகுப்பாசிரியராகவும் இருந்து தமது சிறப்பான ஆன்மீக, கல்வி, ஆளுமை திறன்களால் என் வாழ்வில் செல்வாக்கு செலுத்தினார்.

அவருக்கும் எனக்கும் இடையிலான உறவு கல்லூரி வாழ்வுடன் முடிவுறவில்லை. எனது குருத்துவ விழாவிலும் குருத்துவ பணி தளங்களிலும் சிறப்பாக நான் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியில் ஈடுபடும் இக்காலம் வரை என்னை தேடி வந்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வந்த ஓர் கல்விச் செம்மலையை இழந்து விட்டோம்.

**அருட்திரு.எஸ்.ஏ.றொஷான் உப அதிபர்**
**புனித பத்திரிசியார் கல்லூரி,யாழ்ப்பாணம்.**

### ஆசிரியத்துவத்தின் கலங்கரை விளக்கு

அமரர் சி.பாலசுப்பிரமணியம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். நல்லதோர் குடும்பத் தலைவனாக, பாசம் மிகு தந்தையாக, அன்பு கொண்ட சமூக சேவையாளனாக, அறிவு புகட்டும் ஆசிரிய ராக வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்த அமரர் சி.பாலசுப்பிரமணியம் அவர்களின் பண்பு எவராலும் மறக்கப்பட முடியாது.ஆசிரியத் தொழிலில் இளைப்பாறினாலும் தனியார் கல்வி நிலையங்களில் புகழ்பூத்த விஞ்ஞான ஆசிரியராக பணியாற்றிய பாலாசேர் என செல்லமாக அழைக்கப்பட்ட அவரின் சேவை மாணவர் க்ளினால் என்றும் மறக்கப்பட முடியாது.கஷ்டமான விஞ் ஞான பாடத்தை இலகுவாகக் கற்பிக்கக்கூடிய ஆற்றல் மிக்க ஆசிரியராக அவர் திகழ்ந்த காரணத்தால் ஆயிரக் கணக்கான மாணவர்கள் அவரை நாடிச்சென்று அவரிடம் கல்வி கற்றதை நான் நன்கறிவேன். மனிதநேயம் மிக்க அவரின் ஆசிரியப்பணி மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கல்விகற்க உதவியதுடன் அவருக்கு பெருமளவான நண்பர்களையும் பெற்றுக்கொடுத்தது எனக்கூறினால் அது மிகையாகாது.

நண்பர் அமரர் சி.பாலசுப்பிரமணியம் யுத்தகாலத்திலும் தான் பிறந்த மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற மனோநிலையினால் யாழ். மத்திய கல்லூரியிலும் தொடர்ந்து த்னியார் கல்லூரிகளிலும் ஆசிரியராகப் பணியாற்ற வேண்டும் என்ற விருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. நான் அயலூரைச் சேர்ந்தவன் என்ற காரணத்தினால் அவரை நாளாந்தம் சந்திக்கும் வாய்ப்பினைத் தந்ததுடன் சமகால அரசியலை கலந்துரையாடும் வாய்ப்பைத் தந்திருந்தது. எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கான பல ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்டிருந்த அவர் அவற்றை தனது விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் வேளையிலேயே மாணவர்களின் உள்ளத்தில் விதைத்திருந்தார்.அது அவர்களை நல்ல கல்விமான்களாக மாற்றிய அதேநேரம் சமூக நோக்குள்ளவர்களாகவும் மாற்றியது என்றே கூறுதல் வேண்டும். இத்தகைய ஆசிரியப் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஆசிரியர் அமரர் சி.பாலசுப்பிரமணியம் அவர்களின் இழப்பு கல்விச்சமூகத்திற்கு பேரிழப்பாகும்.அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா ஆண்டவன் திருவடியில் இருந்து எம்மை வழிநடத்த வேண்டும் என்று இறைவனிடம் இறைஞ்சி நிற்கின்றேன்.


**பேராசிரியர் க.தேவராஜா**
**தலைவர்/வணிகத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

### K.T.C கல்வி நிறுவனம்
### ஸ்ரேசன் றோட்,கோண்டாவில்.

விஞ்ஞான ஆசிரியராக உதவி அதிபராக சிறந்த சேவையை 27 வருடம் யாழ்.மத்திய கல்லூரியில் ஆற்றி 28.01.2006 ஓய்வுபெற்று அதே சேவையினை தனியார் கல்வி நிறுவனத்திலும் ஓய்வு பெறாது ஆற்றி மாணவர்களுக்கு விஞ்ஞான பாடத்தினை இலகுவாக மனம் கொள்ளவும் கற்பித்ததுடன் மாணவர்களுடன் தொடர்புகளைப் பேணி மாணவர்களின் அன்பைப்பெற்ற

**உயர்திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள்**
**'ஆசிரியர் திலகம்'**

என்ற சிறந்த விருதினை கோண்டாவில் மக்கள், K.T.C கல்விச் சமூகம், இன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினர்கள்,கௌரவ விருந்தினர்கள் முன்னிலையில் பிரதம விருந்தினர் யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி உயர்திரு க.தேவராசா அவர்களால் 20.10.2007 அன்று வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



### மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்

அமரர் பாலசுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள் சத்தியசாயி பாடசாலையில் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஜூலை 3 ஆம் திகதி வரையும் விஞ்ஞான பாடத்தினை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர்கள் முன்மாதிரியாக, கடமையுணர்வு மிக்க ஆசிரியராக பணியாற்றியமை அவருக்கே உரிய தனிச்சிறப்பாகும்.அவரிடம் காணப்பட்ட போற்றிப்பாராட்டத்தக்க பண்பு நேர முகாமைத்துவம் ஆகும்.அவர்களின் இழப்பு ஆங்கில மொழி மூலம் கல்விகற்கும் மாணவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு வெற்றிடமாகியுள்ளமை கண்கூடாகும். அவரின் ஆத்மா ஆண்டவன் அடியில் அமைதியுறப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.ப.பத்மநாதன்**
**அதிபர்**
**சத்திய சாயி பாடசாலை.**

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விஞ்ஞான பாடத்தினை தனக்கேயுரித்தான பாணியில் கற்பித்து பல மாணவர்களின் உள்ளங்களை கவர்ந்தவர்.கல்லூரியால் விலகிய மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் சுபாவம் கொண்டவர். இதனால் பழைய மாணவர்கள் பலர் இன்றும் கல்லூரியை நேசிப்பது போல பாலசுப்பிரமணியம் ஆசிரியரையும் நேசிப்பதை அவதானித்துள்ளோம். கல்லூரியின் சேவை காலத்தில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பகுதி தலைவராகக் கடமையாற்றி கல்லூரி நிர்வாகம் செயற்பட உழைத்தவர். இவரது இழப்பு மாணவர்களுக்கு பேரிழப்பு ஆகும்.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஞான திருக்கேதீஸ்வரன்(ஆசிரியர்)**
**யாழ்/மானிப்பாய் இந்து கல்லூரி**
**த.வரதராசா**
**சிரேஷ்ட ஓய்வுநிலை கணித ஆசிரியர்**
**யாழ்/மத்திய கல்லூரி.**

### ''பாலா சேர்'' ஒரு விஞ்ஞான பொக்கிஷம்

மத்தியில் நீண்டகாலம் கல்வி பணியாற்றிய ஆசான்களில் திரு. பாலசுப்பிரமணியம் ஆசிரியரும் ஒருவர். இவர் ஆங்கில மொழி மூலம் பயின்றதால் விஞ்ஞான பாடத்தை இரு மொழிகளிலும் எளிதாக போதிக்கும் திறன் கொண்டவர். இவர் ஒரு விஞ்ஞான பொக்கிஷம். எமது பாடசாலையில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரிய சேவையாற்றியவர்.

யாழ்.மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் விஞ்ஞான அறிவை உயர்த்தியவர்களில் முக்கிய மானவர் என்ற பெருமைக்குரிய இவர் யாழ்.மாவட்டத்திற்கு வெளியிலும் ஆசிரிய வளம் குறைந்த கஷ்டப் பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகளில் மனம் உவந்து இணைந்து சேவை செய்தவர். அனைத்து மாணவர் உள்ளங்களிலும் "பாலா சேர்" என இறுக்கமாக இணைந்த இவர் யாழ்.மத்திய கல்லூரியில் மூத்த ஆசிரியராக இருந்து சேவை செய்தது மட்டுமன்றி பகுதி தலைவராகவும் தனது நிர்வாகத்திறனை கல்லூரிக்கு வழங்கி பெருமை சேர்த்தவர். சக ஆசிரியர் மத்தியிலும் "பாலா சேர்" என ஆழப்பதிந்த ஒரு சிறந்த ஆசான் இன்று எம்மிடம் இல்லை. இழப்பு மாணவர்களுக்கு பேரிழப்பு ஆகும். அன்னார் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**வி.தயாபாலன் (ஆசிரியர்)**
**யாழ்/ இந்து கல்லூரி V.S. மகேந்திரன்**
**ஓய்வுநிலை ஆசிரியர்,**
**நவீல்ட் பாடசாலை கைதடி.**

பாலா மாஸ்டர் என்று எல்லோராலும் அன்புரிமையுடன் அழைக்கப்படும் திருவாளர் சி.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியர் என்ற தொழில்முறையிலும் சிறந்த நட்பாளர் என்ற தோழமை முறையிலும் என்னுடன் நெருக்கமான தொடர்பைத் தனது இறுதிக் காலம் வரை தொடர்ந்தவர்.

விஞ்ஞான பாடம் என்றாலே அஞ்சிய மாணவர்களைத் தனது தனித்துவமான கற்பித்தல் பாணியால் விஞ்ஞானத்தின் மீது ஈடுபாடு கொள்ள வைத்து அவர்களது அறிவாற்றலை வளர்த்தெடுத்தவர். நல்லாசிரியராக எனது யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை நல்கியவர்.

ஆசிரியத் தொழிலிலும் தனிப்பட்ட எனது குடும்ப வாழ்விலும் முகத்துதி இல்லாமல் நடுவுநிலை நின்று என் செயற்பாடுகளை விமர்சித்து என்னைச் சரியான தடத்தில் இயங்க வைத்த ஒரு நல்விமர்சகர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நான் வணங்கும் இயற்கை என்னும் பேரிறைவனை இறைஞ்சி நிற்கிறேன்.

**பொ.ஐங்கரநேசன்**
**அமைச்சர்**
**விவசாய, கமநல சேவைகள்,கால்நடை அபிவிருத்தி ,கூட்டுறவு அபிவிருத்தி,உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு,வடமாகாணம்.**

### சயன்ஸ் பாலாவின் நினைவலைகள்

நீண்டகால வரலாற்று பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பல பெருமை மிக்க ஆசான்கள் தங்கள் கற்பித்தல் திறமையினால் தடம் பதித்து சென்றுள்ளார்கள். அந்த வரிசையில் தமது விஞ்ஞான பாட வினைத்திறன் மிக்க கற்பித்தலினால் இரண்டு தசாப்தத்திற்கும் மேலாக யாழ்.மத்திய கல்லூரியில் பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு நல்ல விளைத்திறன் கிடைப்பதற்கு காரணமாக அமைந்தவர் அமரர் பாலசுப்பிரமணியம் என்றால் அது மிகையாகாது.

அதனாலேயே (SCIENCE BALA) என அழைக்கப்பட்ட பெருமைக்குரியவராக அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் புகழுடன் பணியாற்றினார்கள். இருந்தாலும் அவ்வாறான நல்ல வாய்ப்புக்களை தவற விட்டதாக கவலைப்படும் மாணவர்களும் பல உண்டு. எடுத்துக்காட்டாக றியோ நிறுவன உரிமையாளர் திரு.பாஸ்கரன், கொழும்பில் பிரபல வர்த்தகராக விளங்கும் திரு.நியாஸ் போன்றவர்கள் கவலைப்படுவதுண்டு. இருப்பினும் மத்திய கல்லூரியில் நல் ஆசான்களிடம் பெற்ற அடிப்படை அறிவினால் சிறந்த தொழில் அதிபர்களாக விளங்குவதனால் மனநிறைவடைகின்றனர்.

நான் அவருடன் நீண்டகாலம் இணைந்து பணியாற்றியமையால் அமரரின் பிரிவுச் செய்தியை தொலைபேசி ஊடாகக் கேட்டதும் ஒரு கணம் அதிர்ந்து போனேன். அமரர் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்ற வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது. என்றாலும் எங்களின் நட்பு காரணமாக அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைக்காக வெளியிடப்படவுள்ள கல்வெட்டு பிரார்த்தனை மலரில் எனது இரங்கல் செய்தியை பதிவு செய்யவாய்ப்பு கிடைத்தமையையிட்டுமனநிறைவடைகிறேன்.

**திரு.ப.திருஞானசம்பந்தன்,**
**உபஅதிபர்,**
**யாழ்.மத்திய கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

### "மத்தியின் மணி பாலா சேர் "

யாழ். மத்தியின் முன்னாள் விஞ்ஞான ஆசான் அமரர் உயர்திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரியிலும் எமது பிரதேசத்திலும் தனக்கெனஅழியா முத்திரை பதித்துச் சென்றவர்.பாலா சேர் என்றால் மத்தியின் பழைய மாணவர் சமூகம் முழக்கமிட்டு அவர் புகழ்பாடும். அவரால் வைத்தியர்கள்,பொறியிலாளர்கள் ,விஞ்ஞானிகளானோர் எண்ணிலடங்கா. இவர் சேவையில் கல்லூரியும் சமூகமும் பூரிப்படைந்த காலம் என்றும் மறக்கப்படாது.

கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு பாலாசேருக்குரிய தனிப்பண்புகள்,கண்டிப்புடன் கற்பித்து சாதிக்கும் கலையே அவருக்குரிய தனித்தகைமை. தன்னலமற்ற சேவையாளன் பாலா சேர் அவர்கள் மத்தியின் மனதில் நித்தம் நிலைத்திருப்பார்.அவரது ஆன்மா சாந்தி பெறுக இறைவனில்.

**திரு.ம.மரியதாஸ்**
**உப அதிபர் யாழ்.ம.கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பங்களை பரிசீலித்து உதவுவது மனிதப் பண்பு. பண்பு என்பது பக்குவத்தின் விளைவு - லேனா.தமிழ்வாணன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மனிதாபிமானமற்ற போக்கால் வவுனியாவில் நடந்த பரிதாபம்

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டை தரப்படவில்லை என்ற வேதனையில் வவுனியாவைச் சேர்ந்த மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டதான செய்தி இதயத்தைக் கருக்கி விடுகிறது.

பரீட்சைக்கான அனுமதி அட்டை தரப்படும் என்று கூறிவிட்டு இறுதி நேரத்தில் அனுமதி அட்டையை கொடுக்க அதிபர் மறுத்ததன் காரணமாக, மனமுடைந்த பிரஸ்தாப மாணவி தன்னுயிரை மாய்த்ததாக செய்திகள் வெளியாகியுள்ளதுடன் அந்த மாணவி எழுதிய கடிதம் இதனை உறுதி செய்வதாகவும் உள்ளது.

சம்பவத்தின் முழுமையும் இங்கு ஆராயப்படா விட்டாலும் மாணவர்கள் மன உளைச்சல் படும் போதெல்லாம் அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய பாடசாலை அதிபர், ஆசிரியர்களால் ஒரு மாணவி தற்கொலை செய்து கொள்வதென்பது மிகப்பெரிய கொடுமை. இத்தகைய கொடுமைகள் ஏன் நடைபெறுகின்றன என்பது குறித்து கல்விச் சமூகம் கடுமையாக ஆராயவேண்டும்.

அதேநேரம் வவுனியாவில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி அட்டையை குறித்த மாணவிக்கு வழங்கப் பாடசாலை அதிபர் மறுத்தமை எத்தகைய அதிகாரத்தின் கீழ் நடந்தது என்பது பற்றியும் வலயக்கல்வித் திணைக்களங்கள் ஆராய்வது அவசியம்.

ஏனெனில் குறித்த சில பாடசாலைகளில் சில மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்க அதிபர் அல்லது பாடசாலை நிர்வாகம் மறுப்புத் தெரிவிப்பதாக மாணவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இத்தகைய நிலைமை யாழ்.மாவட்டத்திலும் உண்டு.

இத்தகைய சம்பவங்கள் அதிபர்களின் ஏதேச்சதிகாரத்தையே காட்டி நிற்கிறது. பரீட்சைக்கான அனுமதி அட்டையை வழங்க மறுத்தல்-பரீட்சைக்குத் தோற்ற அனுமதி மறுத்தல்- பரீட்சைக்கு விண்ணப்பிக்க அனுமதி மறுத்தல் என்ற மிக மோசமான மனித உரிமை மீறல்கள் பாடசாலைகளில் இடம்பெறுவது மிகப்பெரிய வேதனைக்குரியது.

தத்தம் பாடசாலைகளின் சித்தி வீதம் உயர்வானது என்ற மாயையை வெளிப்படுத்துவதற்காக பரீட்சை எழுதுகின்ற உரிமையை மறுப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

எனவே இது விடயத்தில் வலயக்கல்வி அலுவலகங்கள் மிக இறுக்கமான கட்டளைகளை அதிபருக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் கொடுக்க வேண்டும். பரீட்சை எழுதுவதற்கான அனுமதி அட்டையை பாடசாலை அதிபர் தர மறுத்ததால், மாணவி ஒருவர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்வதென்பது சாதாரணமான விடயமன்று.

இத்தகைய சம்பவங்கள் அதிபர், ஆசிரியர்கள் மீதான மதிப்பை அடியோடு வெட்டிச் சாய்த்துவிடும். மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக-மாணவர்களை பண்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்ற ஆசிரியர் சமூகம் பின்விளைவுகள் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், மாணவர்களின் மனங்களைக் குழப்புகின்றவர்களாக இருப்பதை எவரும் மன்னிக்க மாட்டார்கள். அதேநேரம் ஒரு சில அதிபர், ஆசிரியர்கள் செய்கின்ற மிகக் கீழ்த்தரமான நடவடிக்கைகள் மாணவர்களின் உயர்வுக்காக அயராது பாடுபடுகின்ற அதிபர்கள், ஆசிரியர்களின் புனிதமான சேவைக்கும் களங்கத்தை ஏற்படுத்தி விடுகிறது.

வவுனியாவில் உயர்தர வகுப்பு மாணவி தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் என்பது எங்கள் கல்விச் சமூகத்துக்கு ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். இது வவுனியாவில் நடந்தது என்று நினைத்து விடாமல் இது போன்ற பிரச்சினைகள் நாம் சார்ந்து வாழும் பாடசாலைகளிலும் உள்ளதென்ற உண்மையை ஏற்று அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை கல்விசார் சமூகம் கண்டிப்புடன் எடுத்தாக வேண்டும்.

அப்போதுதான் வவுனியாவில் நடந்த துரதிர்ஷ்டமான சம்பவங்களைத் தடுக்க முடியும்.

## பாடசாலை மாணவர்களிடையே
# தொலைபேசி பாவனையினால்தான் குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன
### யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவிப்பு

தொலைபேசி பாவனையினால்தான் பாடசாலை மாணவர்களிடையே குற்றச் செயல்கள் அதிகரித்துவருவதாக யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவித்துள்ளார்.

எந்த வயதுடையவர்களாக இருந்தாலும் இரவு 9 மணிக்கு பின்னர் அநாவசியமான தொலைபேசிப் பாவனை, கணனிப் பாவனையை கட்டுப்படுத்துவதற்குப் பெற்றோர் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு அருகாமையிலமைந்துள்ள நிறுவனமொன்றில் மாணவர்களிடையே நேற்றுக்காலை நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் துஷ்பிரயோகச் சம்பவங்கள், பாலியல் வன்புணர்வுகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற வண்ணமேயுள்ளன.

இவ்வாறு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் அதிகளவு இளவயதுடையோர் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளே உள்ளன.

இம்முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார்மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்றது.

பின்பு அத்தொடர்புகள் மூலம் சந்திப்புக்கள் இடம்பெற்று முடிவில் அது பொலிஸ் நிலையம் வரை செல்கின்றது.

காதலித்து ஏமாற்றிவிட்டான், பாலியல் வன்புணர்வு அல்லது புகைப்படங்களை வைத்து மிரட்டுதல் எனப் பலதரப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

ஒரு பாடசாலை மாணவன் அல்லது மாணவிக்கு தொலைபேசி என்பது தேவையற்றது. அதேபோல் சமூக வலைத்தளங்களும் மாணவர்களுக்கு தேவையற்றது. இதனை முதலில் பெற்றோர்கள் உணர வேண்டும்.

மாணவர்களை அவர்களின் போக்கில் விட்டாலும் அவர்களைக் கண்காணிப்பது பெற்றோர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இல்லாதுபோனால் இது அக் குடும்பத்தினையும் சீரழிப்பதோடு அக்குடும்பம் சார்ந்த சமுதாயத்துக்கும் தீங்கினை ஏற்படுத்திவிடும்.

ஒரு மாணவன் நல்ல அறிவுடைய, ஒழுக்கமுடைய, மாணவனாக வர வேண்டுமானால் அம்மாணவன் சார்ந்துள்ள சமூகமும் குடும்பமும் அவன் மீது அக்கறைகாட்டி நல்வழிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தவறிழைக்கும் உங்கள் பிள்ளைகள் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று சிறைச்சாலைகளில் வாழவேண்டிய நிலையும் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## பைரோ-டிமோ விபத்து சாரதி வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத பைரோ வாகனம் ஒன்று முன்னால் சென்ற டிமோ வாகனத்தை மோதித் தள்ளி விபத்துக்குள்ளாகியதில் பைரோ வாகனச் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று சனிக்கிழமை காலையில் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற வாகனங்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ்விபத்துச் சம்பவத்தில் பின்னால் சென்று மோதிய பைரோ வாகனமே பலத்த சேதமடைந்துள்ளதுடன் டிமோ வாகனம் சிறு சேதங்களுக்குட்பட்டுள்ளது.(இ-5-29)

## மருத்துவ முகாம்

சங்கானை லயன்ஸ் கழகமும் நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் ஒன்று நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரணி கரம்பைக் குறிச்சி பொதுமண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி மருத்துவமுகாமில் நீரிழிவு நோய் பரிசோதனைகள், சுவாசம், இதய சம்பந்தமான சிகிச்சைகள், தோல் சம்பந்தமான சிகிச்சைகள், குருதி அமுக்கப் பரிசோதனைகள், முடி உதிர்தல் மற்றும் ஏனைய மருத்துவ சிகிச்சைகள், ஆலோசனைகள் என்பவற்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் கண்பார்வை குறைந்தவர்களுக்கு கண் பார்வை சிகிச்சை நடைபெற்று கண்ணாடி வழங்கல் நிகழ்வும் மேற்படி மருத்துவ முகாமில் இடம்பெறவுள்ளன. எனவே வரணி பகுதிகளில் வாழும் மக்கள் இவ் இலவச மருத்துவ முகா மில் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார். (இ-5)

# இறைவேண்டலில் ஈடுபட்டு சரியானவர்களுக்கு புள்ளடியிடுவோம்

தற்போது நாம் அனைவரும் பாராளுமன்றத் தேர்தலையும் அதன்முடிவுகளையும் எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கின்றோம். இந்தவேளையில் பாதுகாவலன் பத்திரிகையில் ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் 02.08.2015 அன்று எழுதிய "எமது எண்ணம்" என்னும் பகுதியில் இருந்து சில வரிகளை பகிர விரும்புகின்றோம்: மீண்டும் ஏமாறாமல் இருக்க என்னசெய்வது? தகுதியான வேட்பாளர்களை எப்படி இனம் காண்பது? என்ற வினாக்களுக்கு விடையை தேடும் எமக்கு பைபிளும் விடைதருகிறது.

இயேசு மக்களுக்குப் பணிபுரிய பிரதிநிதிகளை தெரிந்தெடுக்க விரும்பினார். அப்போது இயேசு செய்த முதலாவது அலுவல்: மலைக்குச்சென்று இரவெல்லாம் இறைவேண்டலில் செல விட்டதுதான். விடிந்ததும் அவர் தம் சீடர்களை கூப்பிட்டு அவர்களில் பன் னிருவரை தேர்ந்தெடுத்தார். இதிலி ருந்து நாம் அறியக்கூடியது: எம்மால் தெளிவாகக் காணமுடியாத ஒன்றை சரியாகக் கண்டு கொள்ள செபம் எமக்கு உதவிபுரியும்.


## பரமபிதா காட்டிய பாதை

எந்தக்கட்சிக்கு புள்ளடிபோடுவது? யாருக்குப் புள்ளடி போடுவது? என்று தெரியாது இந்நாட்களில் ஏங்கிக் கொண்டிருக்கும் எங்களுக்குத் தேவை இறைவேண்டலே. நாம் புள்ளடிகளை சரியான கூட்டிற்குள் இடுவதற்கு இறைவனின் வழிநடத்தலைப் பெற நன்றாக இறைவேண்டல் செய்யவேண்டும் என்றே இயேசு எமக்குக் கற்றுத்தருகிறார். புனித அகுஸ்தினார்: 'செபி. பின் நீ விரும்பியதை எல்லாம் செய்... நீ தவறானதை விரும்ப இறைவன் விடமாட்டார்' என்கிறார்.

இயேசுதன்னை எப்போதுமே ஏழைகளோடும், ஒடுக்கப்பட்டவர்களோடும் துன்புறுவோரோடும் அடையாளப்படுத்தினார்.

எனவே தேர்தல் காலத்தில் மட்டுமல்லாமல் எப்போதும் ஏழைகளோடும், ஒடுக்கப்பட்டவர்களோடும், துன் புறும் மக்களோடும் இருக்கக் கூடியவர் கள் யார் என்பதை இனம் கண்டு அவர்களுக்கு எமது வாக்குகளை அளிப்போம். இயேசு மக்கள் சார்பாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களை நல்வழி யில் வழிநடத்த வேண்டும் என்று விரும்பினார். பல சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்கின்ற இன்றைய சமுதாயத்திற்கு சரியான வழிநடத்தல்களை கொடு க்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்களை தெரிவுசெய்வோம். மக்கள் மத்தியில் மலிந்துவிட்ட தீமைகளான, போதைப் பொருள் பாவனை, குழு மோதல், கட்டுப்பாட்டை இழந்த இளம் சமூகம், இல ஞ்சம், ஊழல்கள், பாலியல் குற்றச் செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகம்... போன் றவற்றை முளையிலே கிள்ளி எறிய வல்லவர்களை இனம் கண்டு அவர்க ளின் சின்னங்களுக்கு முன்- அவர்க ளின் இலக்கங்களுக்குமுன் புள்ளடியிடு வோம்.

இயேசு பன்னிருவரை தெரிந்தெடு த்த பின், அவர்கள் சீடர்களாகவே பணி புரிந்தார்கள். தம்மை தெரிந்தெடுத்தவர்களின் வழிகாட்டலிலேயே எப்போ தும் பணிசெய்தார்கள். எனவே தேர்த லில் வெற்றிபெறுபவர்கள் தாம் தலை வர்கள் என்ற எண்ணத்தை கைவிட்டு தாம் தம்மை தெரிந்தெடுத்த மக்களுக் குப் பணியாளர்கள் என்ற உண்மையை உணர்ந்து செயற்பட வேண்டும். மக்களும் தாம் தமது தலைவர்களை தெரிந்தெடுத்தோம் என்ற எண்ணத்தை விடுத்து தாம் தெரிந்தெடுத்தவர்கள் தமது பணியாளர் கள் என்ற உண்மையை புரிந்து கொண்டு தமது தலைமைத் துவத்தை தொடர்ந்து பொறுப்பேற்க வேண்டும்.



இக்காலத்தில் உருவம் தெரியாத இருளில் இருந்துகொண்டு நாம் சிதைந்து போகும் கனவுகளையே மென்று மென்று வேதனையுடன் தின்று கொண்டிருக்கின்றோம்.

இந்த வேளையில் உருட்டி விளையாடும் பகடைக்காய்களாய் எம்மை மாற்றி விடவே பல தேர்தல் வேட்பாளர்கள் முயல்கின்றனர். இவ ற்றை எல்லாம் கருத்தில் கொண்டு ஆண்டவரே மண்ணுலக வழிகளில் ஏமாந்து போய் மாறிவரும் சமுதாயத்தில் நாம் நீயே எமது வழி நீயே எமது ஒளி என உணர்ந்து எம்மை உம்மிடம் கையளிக்கின்றோம்.

அழிவுச் செயல்கள் அல்ல ஆக்கப் பணிகளை அதிகம் செய்பவர்களை தெரிவுசெய்ய, இனத் துவேசமற்ற தூயவர்கள் எம் இலங்கை மண்ணிலே உருவாகிட மதம் பிடித்தவர்கள் அல்ல மனித நேயங்கொண்ட வர்களை மலரச்செய்ய எமக்கு வழிகாட்டும் என்று எஞ்சியிருக்கும் இந்த சொற்பநாட்களில் இறைவேண்டலில் இடைவிடாது ஈடுபட்டு சரியானவர்களுக்கு எமது புள்ளடிகளை அனைவரும் இடுவோம்.


ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க
சுதந்திரப் பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பீடங்களுக்கிடையிலான தடகளப்போட்டி முகாமைத்துவபீடம் சம்பியன்
















யாழ்.பல்கலைக்கழக 2015 ஆம் ஆண்டுக்கான பீடங்களுக்கிடையிலான புதுமுக மாணவர்களுக்கான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் ஜுலை 25,26 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இப் போட்டியில் கலை, விஞ்ஞானம், மருத்துவம், முகாமைத்துவம், விவசாயம், பொறியியல்,பிரயோக விஞ்ஞானம்,வியாபாரக்கற்கைகள் ஆகிய பீடங்களையும் மற்றும் சித்தமருத்துவம், இணைமருத்துவ விஞ்ஞான துறைகளைச் சார்ந்த மாணவர்களும் பங்குபற்றினர்.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முகாமைத்துவ பீடம்,கலைப் பீடம், விஞ்ஞானபீடம் என்பன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெண்கள் பிரிவில் கலைப்பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,விஞ்ஞான பீடம் என்பன முறையே முதலாம், இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டன.

மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,கலைப்பீடம்,விஞ்ஞானபீடம் என்பன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி கலாநிதி எஸ்.பாலகுமார், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தடகள பெண்கள் அணியின் தலைவியும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கதிரியக்கவியல் துறை நிபுணருமாகிய வைத்திய கலாநிதி கலைமகள் அறிவுச் செல்வன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியில் கே.அனுஜன் (விஞ்ஞான பீடம்) சிறந்த தட வீரராகவும் டி.எல்.ஜே.என்.லியனகே(முகாமைத்துவகற்கைகள் வணிக பீடம்) சிறந்த கள வீரராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.எச்.ஏ.ஏ.சேத்தனா சமோதினி (முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்)சிறந்த தட வீராங்கனையாகவும் ஆர்.ஜோபிதா (கலைப் பீடம்)சிறந்த கள வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப் போட்டியின் சிறந்த வீரராக டி.எல். ஜே.என். லிய னகே( முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்) தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியில் ஆர். எம்.ஓ ரணசிங்க (விஞ்ஞானபீடம்) குண்டெறிதலிலும் டி.எல்.ஜே.என். லியனகே (முகாமைத்துவ வணிக பீடம்) ஈட்டி எறிதலிலும் எஸ்.லோஜிதா (கலைப்பீடம்) 3000 மீற்றர் ஓட்டத்திலும் புதிய சாதனைகளை நிலைநாட்டியிருந்தனர். (கு)

## ஜே.பி.எல்.வெற்றிக்கிண்ணம் கிராஸ் கொப்பர்ஸ் வெற்றி



யாழ்.பிறீமியர் வெற்றிக்கிண்ணத்திற்கான யு.ஆர்.பவுண்டேசன் 3 ஆவது ஆண்டாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட் டியின் பிரிவு I இல் கிறாஸ்கொப் பர்ஸ் அணி, ஹாட்லி யைற்ஸ் அணியை 3 இலக்குகளால்வெற்றிபெற்றுதனது 2ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 121 ஓட்டங்களை பெற்றது.

சாகித்தியன் -17, புருசோத்-46, பிரசாத்-10 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் பங்குகொண்ட ஹாட்லியைற்ஸ்அணி சார்பாக ஜனன்தன் -03 , கோகுலன், கபிலன் தலா-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 19.1 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களை பெற்றனர்.



காந்தசீலன்-13, கோகுலராஜ்-32, அஜித்-25, கோகுலன் -12 ஓட்டங்களை பெற்றனர். பிரசாத்-03, சன்ஜயன்-02, சதீன்-01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியில் சிறந்த வீரராக கிறாஸ்கொப்பர்ஸ் அணியை சேர்ந்த ஜனன்தன் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 6 ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ்.நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் கிறாஸ் கொப்பர்ஸ்அணி4.52புள்ளிகளையும் ஹாட்லியைற்ஸ் அணி 1.91 புள்ளிகளினைப் பெற்றுக்கொண்டன. (கு)

## இன்றைய போட்டிகள்

நடராசா வைத்தியலிங்கம் ஞாபகார்த்தமாக வல்வை சைவின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 நபர் 12 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மென்பந்தாட்ட தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைறெும் முதலாவது போட்டியில் நேதாஜி அணியை எதிர்த்து றெயின்போ அணியும்.

முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

இன்று ஞாயிற்றுக்கிழமையாழ்ப்பாணக் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டி வருமாறு,

காலை 8 மணிக்கு கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து கே.சீ.சீ.சீ. அணியும் முற்பகல் 11 மணிக்கு சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஹட்லியை ஸ்சும் பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சியும் மோதவுள்ளன.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நெற் கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. முதலாவது போட்டியில் கில்லரி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொலின்ஸ்விளையாட்டுக்கழகமும்

மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் சென்லூசியஸ் விளையாட்டுக்கழகத்தை (மன்னார்) எதிர்த்து சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் (நாச்சிக்குடா) மோதவுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தல் - 2015

## யாழ். தேர்தல் மாவட்டம்



6

சவால்களைச் சாத்தியமாக்கவும்
கனவுகளை நிஜமாக்கவும்
மாற்றத்துக்காய் வாக்களிப்போம்

வைத்தியர்
**இ.சிவசங்கர் (MBBS)**
யாழ்.போதனா வைத்தியசாலை

**ஐக்கிய தேசியக் கட்சி**

X 6



## 3 பட்டம் : நேர்மை, தகைமை, சேவை



தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை ஓயாது!
தேசிய கட்சிகள் எம் உரிமைக்கு துணை போகா!
தனிக்கட்சி ஆதிக்கம் இங்கு விடையல்ல!
ஏழு "நேர்மைகள்தான்" இங்கு விடையாக முடியும்!
மாற்றத்துக்கான நேரம் இது ...
நேர்மை, உரிமை அரசியலை முன்நிறுத்துவேன்!
போதைவஸ்து ஒழிப்பு என் கடமைகளில் ஒன்று!

**வீ. ஆ. ஜெயசங்கரி B.A.**
(Public Administration & Governance)

சுயேட்சைக் குழு - 5

X 3


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி பொன்னையா
## (வீரசிங்கம்)



தாவளை இயற்றாளையைப் பிறப்பிடமாகவும் பத்தன்மோட்டையை வசிப்பிடமாகவும் மடத்தடி வீதி, கொடிகாமத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னையா 07.08.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா திலகவதியின் ஆருயிர்க் கணவரும், ஞானம் பலவாணர் (ராசா-சுவிஸ்), சிவசோதி (கனடா), சிவநேசன் (கனடா), ரவிக்குமார் (ரவி-சுவிஸ்), சிவராணி (யசோ-கொடிகாமம்) மற்றும் அமரர்களான ஞானேஸ்வரன், சிவராசா, வசந்தகுமார், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும், திருப்பூங்கோதை (சுவிஸ்), பத்மகாந்தன் (கனடா), பகிரதி (கனடா), புவனேஸ்வரி (சுவிஸ்), சிவராசா (சிறி வெற்றிலைக் கடை கொடிகாமம்) ஆகியோரின் மாமனாரும், சுஜீவன், கார்திகாயினி (சுவிஸ்), ரஜீவன், காயத்திரி (சுவிஸ்), மயூரன் (கனடா), மீனுஜா (கனடா), ரவீனன் (சுவிஸ்), ரானுஷா (சுவிஸ்), துர்க்கா (கனடா), லதீசன் (கனடா), பிரதீசன் (கனடா), லக்சன் (கனடா) சனுஷன், தனுஷன், கானுஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புப் பேரனும், சைலன், லக்மன், அஸ்வின், கயலின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் கட்டைபறித்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-1771)

கண்டி வீதி, மடத்தடி,
கொடிகாமம்.

தகவல்:-செ.சிவராசா குடும்பத்தினர்
(சிறி வெற்றிலைக்கடை, கொடிகாமம்)
தொ.பே:-0772784730 (சிறி)
0773621166 (யசோ) 0775270888 (சனு)

# மரண அறிவித்தல்

## பாலசிங்கம் லோகப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற A.O- நிர்வாக உத்தியோகத்தர்,
ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளாய் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பா.லோகப்பிரகாசம் அவர்கள் 08.08.2015 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம்-இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இளையதம்பி-அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும் மதினி (ஆசிரியர்), றமணன் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), றமா (கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சாட்சரலிங்கம் (ஆசிரியர்), பகிரதி (தென்னை பயிர்ச் செய்கை சபை (M.A)), வசந்தன் (இயக்குநர், இகேட்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (09.08.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-1773)

**தகவல்:-குடும்பத்தினர்.**

## சூடப் பயன்படுத்திய...

பொலிஸாரினால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில், மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அளித்த வாக்குமூலத்தைக் கொண்டு வெல்லம்பிட்டியவில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரினால் நேற்று மாலை அவ்வாகனம் மீட்கப்பட்டுள்ளது. (எ-12)

## அமெரிக்கா...

ஊடகச் செய்திகளை கவனிப்பதுடன் மிகவும் நிதானத்துடன் செயற்பட வேண்டுமென அமெரிக்க அரசாங்கம் தமது நாட்டுப் பிரஜைகளிடம் கோரியுள்ளது.

இதேவேளை சுற்றுலாப் பயணங்கள் மேற்கொள்வதற்கும் வாழ்வதற்கும் இலங்கை சிறந்த நாடாக விளங்குவதாகவும் அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு அவுஸ்திரேலிய அரசாங்கமும் ஏற்கெனவே தமது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 45 கிலோ

வல்வெட்டித்துறை பொலிஸாருடன் இணைந்து நேற்று அதிகாலை 5 மணியளவில் குறித்த வீட்டிலிருந்து 45 கிலோ பெறுமதியான கஞ்சா மீட்கப்பட்டது. அத்துடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் படி ரக வாகனம் ஒன்றை மீட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-12,60)

## பிரசார மோதலில்...

டைய இளைஞர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் உடனடியாக அட்டாம்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆனால் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் பொலிஸார் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன் அப்பகுதியின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11,12)

## இளையோர்...

யாகச்சென்று பருத்தித்துறை வீதியை அடைந்து பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர்க் கந்தன் ஆலயத்தை சென்றடையவுள்ளது. நல்லூர்க்கந்தன் மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 19-ம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இச் சிவ யாத்திரை இடம்பெறவுள்ளது. (எ-5)

## பிந்திச் சென்ற...

செயலகத்தில் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தைச் செய்ததனால் அங்கு சென்றே வாக்களிக்க வேண்டிய நிலை இருந்தது. எனினும் இறுதித்தினமான நேற்று அவர்கள் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு செல்ல வேண்டிய நிலையில் வாக்களிக்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது.

எனவே இது தொடர்பில் ஏதாவது மாற்று வழிமுறைகள் அல்லது வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுமா? என வாக்களிக்க முடியாது திரும்பிய தபால் மூல வாக்காளர்கள் கேட்டுள்ளனர். (எ-3,9)


## சேல்ஸ்மன் தேவை

O/L, A/L படித்த, அனுபவமுள்ள
புடைவை வியாபாரம்
செய்யக்கூடியவர்கள் தேவை.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1772)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் அரசாங்கத்தில்...

வழிபாடு செய்யக் கூடிய சூழ்நிலையை தமது அரசாங்கம் உருவாக்கிக் கொடுத்துள்ளது.

இன்னமும் இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் நீடிக்கக் கிடைத்திருந்தால், மக்கள் கைகளில் பணத்தை கொண்டு சேர்க்கக் கூடிய முறைமை ஒன்றை உருவாக்கியிருக்க முடியும். புத்தி சாதுரியமான மக்கள் இதற்கு இடமளிக்க மாட்டார்கள் எனதாம் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை முடிவுறுத்தி நாட்டை அபிவிருத்தி செய்து வந்ததாகவும், கடந்த ஜனவரி மாதம் 8-ம் திகதி முதல் பிரேக் அடித்தது போன்று இந்த அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதன்காரணமாக பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளதாக மகிந்த சுட்டிக்காட்டினார். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 09.08.2015 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 27

# பாராளுமன்ற தேர்தல் 2015



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் அரசியல் பிரதிநிதித்துவம் சிதறிக்கிடக்கிறது




விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆயுதப் போராட்டம் பற்றிய சிந்தனையோடு இருந்தாரேயன்றி அரசியல் கட்டுமானம் பற்றி அவர் கவனம் செலுத்தவில்லை என்ற விமர்சனங்கள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் எழுந்திருந்தன.

இத்தகையதொரு விமர்சனத்திற்கு தமிழ் மக்களின் அகிம்சாவழி அரசியல் தோற்றுப் போனமை காரணமாக இருந்திருக்கலாம்.

அகிம்சைவழி அரசியலின் தோல்வி முழுமைக்கும் பேரினவாதிகளே காரணமா? அல்லது தமிழ் அரசியல் தலைமைகளும் இதில் பங்கேற்கின்றனவா? என்ற கேள்விக்கான பதிலில் இருந்து தமிழ் அரசியல் தலைமைகள் விடுபட முடியாதென்பதும் நிறுத்திட்டமான உண்மை.

தமிழ் மக்களின் உரிமை, அதனைப் பெறுவதற்கான வியூகம் என்பதில் தமிழ் அரசியல் தலைமைகள் காட்டிய அக்கறை என்பதை விட, உசுப்பேத்தல் மூலமான ஒரு அரசியல் கட்டுமானத்தை ஏற்படுத்தி, அதில் தமது பதவி ஆசையை நிறைவு செய்தனர் என்பதே உண்மை.

அன்றைய சூழ்நிலையில் உசுப்பேத்தல் அரசியல் தமிழ் மக்களிடம் வேகமாக எடுபட்டது. இதன் காரணமாக அடையப்பட முடியாத இலக்குகள் மீது நம்பிக்கை வைக்கப்பட்டன.

அதேநேரம் சிங்களப் பேரினவாதிகளும் தமிழர்களுக்கு எதிரான வன்போக்கை வெளிப்படுத்துவதன் மூலமாகவே சிங்கள மக்களின் வாக்குகளைத் தமதாக்கிக் கொண்டிருந்தனர்.

ஆக, இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து சிங்கள, தமிழ் அரசியல் என்பது சிங்கள- தமிழ் விரோதத்தை அடித்தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டதாக இருந்தது. இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போது, பாராளுமன்றத்தில் அப்போது அமைச்சராக இருந்த சிறில் மத்தியூ , பாணந்துறை பாராளுமன்ற உறுப்பினர் நெவில் பெர்னாண்டோ போன்றவர்கள் ஆற்றிய உரையை மீட்டுப் பார்த்தால், இலங்கைப் பாராளுமன்றம் என்பது இனவாதம் பேசுகின்ற இடமாக மட்டுமே இருந்துள்ளது என்பது தெரியவரும்.

## தேர்தலுக்குப் பின்பான கூட்டு சாத்தியமாகும் வாய்ப்புண்டு

பாராளுமன்றத்தின் முக்கிய பணிகளில் ஒன்றான சட்டவாக்கத்தில்கூட, சிறுபான்மை இனத்திற்கு எதிரான சட்டங்களே கொண்டு வரப்பட்டன.

ஆக, எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் இலங்கையில் வாழ வேண்டும் என்பதாகவோ அல்லது அவர்களும் இலங்கையர்கள் என்ற புரிதலுடனான செயற்பாடுகளோ இந்த நாட்டில் நடந்ததான வரலாறுகள் அறவே இல்லை எனலாம்.

இவையாவற்றினதும் பின்னால், தமிழ்த் தலைமைகளின் தூரநோக்கில் ஏற்பட்டிருந்த பலவீனங்கள் முக்கிய இடத்தைக் கொண்டுள்ளன.

தமிழர்கள் சுயநிர்ணயத்தோடு வாழக்கூடிய சூழலை நம்மிடம் தந்து விட்டுப் போகக் கூடியவர்களிடம் அதனைப் பெற்றுக் கொள்ளாமல் தர மறுக்கின்ற, எந்த வகையிலும் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிலைநாட்டத் துடிக்கின்ற இனத்திடம் சென்று தமிழினத்தின் சுயநிர்ணயத்தைப்பெற முற்படும் போது, அது சாத்தியமாகாது என்பதும் யதார்த்தமே.

இத்தகையதொரு வன்மத்தின் போக்கிலும் தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் உசுப்பேத்தலிலும் வீறுகொண்ட தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் பல்வேறு அமைப்புகளினூடாக எழுகைபெற்று பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட போது இலங்கையில் தனிநாடு அமையும் என்றவாறான சூழ்நிலைகளும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் பலங்களும் அமைந்திருந்தன.

இலங்கையில் தமிழ் மக்கள் நடத்திய ஆயுதப் போராட்டம் சர்வதேசம் முழுவதையும் கவனயீர்ப்புக்கு உட்படுத்தியது.

கூடவே உலகம் முழுவதிலும் புரையோடியிருந்த ஆயுதப் போராட்ட அமைப்புகளின் வேலைத் திட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற நினைப்பு உலக நாடுகளிடம் ஏற்படாமலும் இல்லை.

உலகப் பரப்பில் [illegible] [illegible] மற்றும் உலகமயமாதல் கொள்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதில் தாமதம் காட்டிய எங்கள் விடுதலைப் போராட்டமும் ஒரு முடிவுறுதலைப் பெற்றுக் கொண்டது.

தமிழர்கள் தாக்கப்பட்டால் உலக நாடுகளின் தலையீடு குறிப்பாக அண்டை நாடான இந்தியாவின் தலையீடு இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போது அவை அனைத்தும் தமிழினத்திற்கு எதிர்வளமாக இருந்தன என்ற உண்மையை இழப்புகளின் பின்னாலேயே எங்களால் புரியப்பட்டது.

எதுவாயினும் தமிழ் மக்களுக்கு வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த வன்கொடுமை ஏதோவொரு வகையில் சிங்கள மக்களின் மனங்களையும் பாதித்துள்ளது என்பதை அடியோடு மறுத்துவிட முடியாது.

இத்தகைய பாதிப்பும் மகிந்தவின் தோல்வியின் பின்னால் இருந்தது என்பதை ஏற்றுத் தானாக வேண்டும்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் தோல்வியை தமிழ் இனம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் என்பதை விட மீண்டும் ஒரு உசுப்பேத்தலைச் செய்வதிலேயே தீவிரமாக உள்ளது என்பதையும் உணர முடிகின்றது.

எதுவாயினும் ஆயுதப் போராட்டம், இராணுவ பலம் என்பவற்றுக்கு ஈடாக, பெரும் ஒரு பலமான அகிம்சைவழி தமிழ் அரசியல் தலைமை யையும் விடுதலைப் புலிகள் கட்டியெழுப்பி இருப்பார் களாயின், அந்த அமைப்பு இன்று தமிழினத்திற்கான உரிமைத் தேடலில் வெற்றி கண்டிருக்கும். எனினும் அது சாத்தியமாகவில்லை.


இத்தகையதொரு நிலைமையில்தான், ஆயுதப் போராட்டம் முடிவுறுத்தப்பட்டு ஆறு ஆண்டுகள் என்ற மிகக் குறுகிய காலப் பகுதியில் தமிழர் தாயகம் எங்கும் பல அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில் களமிறங்கியுள்ளன.

இந்நிலைமை தமிழர்களுக்கு ஆரோக்கியமானதல்ல. இருந்தும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைமைகள் ஆரோக்கியமற்ற வையாக, நம்பகத் தன்மை குறைந்தவை யாக தம்மைத் காட்டிக் கொள்ளும் போது மேற்போந்த நிலைமைகள் தாமாகத் தோன்றுவது இயல்பே.











எப்படியாயினும் இப்போதிருக்கின்ற தமிழ் இனத்தின் அரசியல் என்பது தனித்து விடுதலைப் புலிகளின் கொள்கைகளோடு இருப்பதனாலோ அல்லது விடுதலைப் புலிகளின் கொள்கைகளை முற்றாக மறுதலிப்பதாலோ நிர்ணயம் செய்வதாக இல்லை என்பது மட்டும் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

ஆக, எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிபுகள், பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பெற்ற தமிழ்ப் பிரதிநிதிகளை ஒன்றுபடுத்துகின்ற- அதிலிருந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்குகின்ற தன்மையைக் கொண்டதாகவே அமையும். அதாவது தேர்தலுக்கு முன்பான கூட்டு என்பதை விட உதிரிகளாகப் பெற்ற தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்து வங்கள் ஒன்று சேர்தல் என்றவொரு நிலைமையே இப்போதைக்கு சாத்திய மும் சாதகமுமாக இருக்கும் எனலாம்.

விதுரன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப் பிள்ளையார் கோயில் திருவிழாவில் இன்று விசேட சொற்பொழிவு இடம்பெறாததால் ஆலடி மாநாடு நேரத்தோடு கூடியது.

வாத்தியார் தலைமையில் ஆலடி மாநாடு ஆரம்பமாகியது.

**வாத்தியார்:** ஆலடி மாநாட்டில தேர்தல் நிலைமை குறித்து ஆராயப்படவேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். சமூக, பொது விடயங்கள் மட்டுமன்றி சமகாலத் தேர்தல் நிலைமைகள் குறித்து ஆராய்வது அவசியம் என்பதால் இன்றைய ஆலடி மாநாட்டில தேர்தல் நிலைமைகள் குறித்து ஆராயலாம் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(வாத்தியாரின் அறிவிப்பில் பண்டிதருக்கு திருப்தியில்லையாயினும் மௌனமாக இருப்பது நல்லது என்ற முடிவுடன் பண்டிதர் பேசாதிருந்தார்)

**விதானையார்:** நல்லது வாத்தியார். தேர்தல் என்பது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான ஆட்சியைத் தீர்மானிப்பது. எனவே ஆலடி மாநாட்டில தேர்தல் சூழ்நிலைகள் குறித்து ஆராய்வது மிகவும் அவசியம். இந்தாப் பாருங்க வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாக மேடையேறிப் பேசமாட்டேன் என்று அடித்துச் சொல்லிவிட்டார். மக்கள்யாரைத்தெரிவுசெய்கினமோ அவர்களுடன் நான் இணைந்து செயற்படுவன் அவ்வளவு தான். முதலமைச்சரின் இந்த அறிவிப்பு நடுநிலையானது. அதனை நாங்கள் வரவேற்க வேண்டும்.

**மூப்பர்:** அது சரி வடக்கு மாகாண அமைச்சர்கள் சிலர் முதலமைச்சரைச் சந்தித்து அவருடன் தர்க்கப்பட்டதாகக் கேள்வி.

**கங்காணி:** ஏனாம் தர்க்கப்பட்டவியள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முதல்வர் ஆதரவு தெரிவிக்க வேணும் எண்டு தர்க்கப்படுகிறவியள் உள்நோக்கத்தோடதான் தர்க்கப்பட்டிருப்பினம் என்பது சர்வநிச்சயம்.

**விதானையார்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக முதல்வர் விக்னேஸ்வரன் பிரசாரம் செய்ய வேண்டும் என விரும்புகிறவர்கள் பிர தமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வந்த போது நீங்கள் கட்டாயம் எங்கள் முதலமைச்சரைச் சந்திக்க வேணும் எண்டு கேட்டல்லோ இருக்க வேணும்.

வடக்கின் முதலமைச்சரைச் சந்திக்கமாட்டேன் என்று பிரதமர் ரணில் கூறிய போது இதுதான் உங்கட கொள்கை எண்டால் நாங்களும் உங்களைச் சந்திக்கமாட்டம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் சொல்லியிருக்கவேணும். அப்ப இவையளுக்குத் தெரியாதோ தேர்தல் வரப்போவது.

உங்கட முதலமைச்சரைப் பிரதமர் மதிக்கத் தவறும்போது நீங்கள் எப்படி ரணிலைப் போய்ச் சந்திக்க முடியும். இது எந்த வகையில் நியாயம்.

**பண்டிதர்:** இதுதான் நான் சொல்லுறது தேர்தல் பற்றிக்கதையாதீங்கோ எண்டு.

(பண்டிதர் இப்படிக் கூறியதும் விதானையாருக்குக் கடுங்கோபம் வந்தது)

**விதானையார்:** பண்டிதர் இப்படிக் கதையாதீங்க. பயம் எண்டு ஒதுங்கிக்கொண்டால் இன்னும் பிரச்சினை எங்களைத் துரத்தும். துணிந்து எழுந்து நில்லுங்க பார்ப்பம். நியாயம் பிறக்குதோ இல்லையோ எண்டு.

**கங்காணி:** விதானையார் சொல்லுறதுக்கு நான் பூரண ஆதரவு. வடக்கின் முதல்வரோட கதைக்க மாட்டன், அவரைச் சந்திக்க மாட்டன் எண்டு சொன்ன பிரதமர் ரணில் யாழ்ப்பாணத்திற்கு வந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரைப் போய்ச் சந்தித்தது எதற்காக?

முதல்வர் தேவையில்லையெண்டா

நான் நினைக்கிறன் அன்றைக்கே முதல்வர் விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் மேடையில் ஏறப் போவதில்லை எண்டு முடிவெடுத்தார் போலும்.

**மூப்பர்:** அது சரி யாருக்காகவும் தேர்தல் பிரசாரம் செய்யமாட்டன் என்று முதல்வர் அறிவித்த போது இது தொடர்பில் தேர்தல் முடிந்த கையோட அவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வம் எண்டு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் லண்டன் பிபிசி தமிழோசைக்குச் செவ்வி கொடுத்தார். அவர் கூறியதன் தார்ப்பரியம் என்ன என்று புரியவில்லை.

**வாத்தியார்:** ஏன் புரியவில்லை? வடக்கின் முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவோம் என்பதுதான் சம்பந்தர் கூறியதன் தார்ப்பரியம்.

**விதானையார்:** அட சங்கதி அப்படியோ?

**மூப்பர்:** வடக்கு மாகாண சபை முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அவரை விலத்திப் போட்டு, அந்த இடத்தைப் பிடிப்பதில வடக்கு மாகாண சபையின் முக்கிய புள்ளி ஒருவர் தீவிரம் காட்டுவதாகக் கேள்வி.

முதல்வர் விக்னேஸ்வரனின் இடத்தைப் பிடிப்பதற்காக முதல்வரை அவர் கடுமையாக விமர்சிப்பதாகவும் அறிய முடிகிறது.

**விதானையார்:** முதல்வர் விக்னேஸ்வரன் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏதும் கொண்டு வாற நோக்கம் இருந்தால், அதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடியோட கைவிட்டுவிடவேணும். அந்தச் சிந்தனை ஏதும் இருந்தால் வடமாகாணத்துத் தமிழ் மக்கள் சும்மா இருப்பினம் எண்டு எவரும் நினைத்துவிடக்கூடாது.

**பண்டிதர்:** அப்படியொரு நிலைமை இருக்காது எண்டு நினைக்கிறன். அதுசரி வடக்கின் தவிசாளர் சீ.வீ.கே.சிவஞானம் ஆற்றிய உரை ஒன்றில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் கொள்கையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கையும் ஒன்றாக இருப்பதாகவும் தேர்தல் முடிய ஜனநாயகப் போராளிகள் கட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

**வாத்தியார்:** அப்ப சீ.வீ.கே. சிவஞானத்தின் கருத்துப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தாலும் ஒன்றுதான் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கு வாக்களித்தாலும் ஒன்றுதான் என்பது போலல்லவோ இருக்கிறது.

**பண்டிதர்:** சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்கிறார் போராளி அல்லாதவருக்கு எப்படி ஆசனம் கொடுக்க முடியும் என்று.

சிவஞானத்தார் சொல்லுகிறார் கூட்டமைப்பின்ர கொள்கையும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் கொள்கையும் ஒன்றென்று.

இங்க என்ன நடக்குது என்று தெரியவில்லை. காங்கிரஸாருக்கு ஆதரவு கிடைத்துவிடும் என்ற பயத்தில ஏதோ சொல்லப் போய் அது என்னவோ மாதிரி முடிஞ்சு போகுது.

மேடையில பேசமுதல் கொஞ்சமாவது தயார் செய்து பேசுவது நல்லது.

**விதானையார்:** இப்ப யாரு தயார் செய்து மேடையில பேசுறது. ஆக்களப் பிடிக்கிறதே பெரிய கஷ்டமாய் இருக்கும்போது என்னண்டு தான் தயார் செய்து பேச மனம் வரும்.

ஏதோ கூட்டத்திற்கு வந்து சேருகின்ற ஒரு சில சனங்களுக்கு எழுந்தமானமாகப் பேசி விட்டுப் போகின்ற நடைமுறை தான் இப்ப எங்கட மண்ணில நடக்குது.

இப்படி விதானையார் கூற அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டா மணியும் ஒலித்தது. மணி ஒலிப்புடன் ஆலடிமாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையாரின் பூசையைப் பார்க்கச் சென்றனர்.



## சுரேஷ் அப்படிச் சொல்லுகிறார் சிவஞானம் இப்படிச் சொல்லுகிறார்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தெனாலியும் கத்தரிக்காயும்



ஒருமுறை தெனாலிராமனுக்கு கத்தரிக்காய் சாப்பிட வேண்டும் என்று அதீத விருப்பம் ஏற்பட்டது. அரண் மனைத் தோட்டத்தில் பிஞ்சுக் கத்திரிக் காய் அதிகமாக விளைந்திருப்பதைக் கேள்விப்பட்டார்.

ஆனால், அது அரசாங்கத்திற்குச் சொந்தமானது. நாம் உபயோகிக்கக் கூடாது என்ன செய்வது. என்னவென் றாலும் இன்று கத்தரிக்காய் சாப்பிட்டே தீருவது என்ற தீர்மானித்த தெனாலி ராமன் ஒரு ஆலோசனை செய்தார். காவலாளிக்குத் தெரியாமல் கத்தரிக் காய் அனைத்தையும் சத்தமில்லாமல் பறித்துக்கொண்டார்.

வீட்டுக்குச் சென்று மனைவியிடம் "இன்றைக்கு விதவிதமாய் கத்தரிக்காய் —தார்த்தம் செய்" என்றார். தெனாலி ராமன் கொண்டவந்த கத்தரிக்காய் அரண்மனைத் தோட்டத்திலிருந்து கொண்டுவந்தது என்று தெரிந்ததும் தென்னாலிராமனின் மனைவி மிகவும் கலக்கமடந்தாள்.

தெனாலிராமன் "நீ பயப்படாதே! எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ சமைத்து வை" என் றார். அவரது மனைவியும் மறுபேச்சு பேசாமல் கத்தரிக்காய்க் குழம்பு, கத் தரிக்காய்க் கூட்டு என்று விதவிமாகச் செய்து வைத்தார். இருவரும் சாப்பிடத் தயாரானார்கள்.

தெனாலிராமன் மகனை எங்கே என்று கேட்டார். அவன் வெளித் திண்ணையில் படுத்து உறங்கிக் கொண் டிருப்பதை மனைவி தெரிவித்தார். உடனே தெனாலிராமனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அவர் ஒரு குடம் நிறைய தண்ணீ ரைக் கொண்டுவந்து திண்ணையில் படுத்திருந்த தனது மகன் மீது ஊற்றி னார். பதறியடித்து எழுந்த மகனைப் பார்த்து "வெளியே மழை பெய்கிறது. உள்ளே போய்ப் படுத்துக்கொள்" என்று கூறினார். அரைத்தூக்கத்தில் இருந்த மகனும் அவர் சொன்தைக் கேட்ட வுடன் வேகமாக வீட்டிற்குள் சென் றான். படுத்துறங்கப்போனவனை தெனாலிராமன் எழுப்பி "கத்தரிக்காய்ச் சாப்பாடு ருசியாய் இருக்கிறது, சாப் பிட்டு விட்டு தூங்கு" என்று கூறினார்.

அவனும் தூக்கக் கலக்கத்துடனேயே நன்றாகச் சாப்பிட்டான். பிறகு எல்லோ ரும் படுத்து நிம்மதியாகத் தூங்கினார்கள்.

மறுநாள், தெனாலிராமன் அரண் மனைத் தோட்டத்தில் கத்தரிக்காய் பறித்த விஷயம் எப்படியோ மன்னருக்குத் தெரிந்துபோனது.

மன்னர் தெனாலிராமனை அழைத்து வரச் சொன்னார். நடக்கப்போவதை யூகித் துக்கொண்ட தெனாலிராமனும் மன்னர் முன் சென்று நின்றார்.

மன்னர் தெனாலிரமனைப் பார்த்துக் கேட்டார் "தெனாலிராமா! அரண்மனைத் தோட்டத்தில் கத்தரிக்காய் எல்லாம் காணமல் போனது உனக்குத் தெரியுமா?" என்றார். தெனாலிராமனோ எதுவும் அறியாததுபோல "என்ன? அரண்மனைத் தோட்டத்தில் கத்தரிக்காய் காணாமல் போனதா?" என்றார்.

மன்னரோ விடுவதாய் இல்லை. "ஒன்றும் அறியாததுபோல் கேட்கிறாய் ராமா! நீதான் கத்தரிக்காய் அனைத்தை யும் பறித்ததாக நான்கேள்விப்பட்டேன். உண்மையை ஒத்துக்கொள்" என்றார். தெனாலிராமனோ இல்லவே இல்லை என்று சாதித்தார்.

மன்னர் உடனே "தெனாலிரமா நீ உனது மகனை அழைத்துவா. குழந்தை கள் பொய்சொல்லாது. நேற்று நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள் என்பதை நான் உன் மகனை விசாரித்து தெரிந்து கொள் கிறேன்" என்றார்.

தெனாலிராமனது மகனை காவலாளி கள் அழைத்துவந்தார்கள். மன்னன் சிறுவனிடம் அன்பாக விசாரித்தார். "தம்பி நேற்று உங்கள் வீட்டில் என்ன சாப்பிட்டீர்கள்?" உடனே சிறுவன் சொன் னான் "கத்தரிக்காய்க் குழம்பு, கத்தரிக் காய்க் கூட்டு மற்றும் சாதம் எல்லாம் சாப்பிட்டோம். மிகவும் ருசியாக இருந் தது"

மன்னன் உடனே தெனாலிராமனைப் பார்த்தார். "இப்போது மாட்டிக்கொண் டாயா தெனாலிராமா. இப்போதாவது உண்மையை ஒத்துக்கொள்" என்றார். தெனாலிராமனோ விடாப்பிடியாக மறுத் தார். "மன்னா, இவன் இரவில் கனவு கண்டு அதை உளறுகிறான். நன்றாக விசாரியுங்கள். நீங்கள் நம்பும்படியாக அவன் கூறினால் நான் உண்மை என ஒத்துக்கொள்கிறேன்" என்றார்.

மன்னன் சிறுவனைப் பார்த்து மீண் டும் கேட்டார். "குழந்தாய் நேற்று உங்கள் வீட்டில் என்ன நடந்தது என்று விளக்கமாகச்சொல்" சிறுவனோ "நேற்று இரவு ஜோ என்று மழை பெய்ததா..! அப்பா, என்னை வீட்டுக்குள் கூட்டிக்கொண்டு போனாரா...! அப்போ கத்தரிக்காய் வைத்து சாட்பிடச் சொன்னார்கள்...! சாப்பிட்டுவிட்டுப் பிறகு நான் உறங்கிவிட்டேன்" என்றான்.

தெனாலிராமனோ "நேற்று மழை பெய்ததா மன்னா! நீங்களே சொல்லுங் கள்" என்று மன்னரைக் கேள்வி கேட்டார்.

மன்னர் குழம்பிப்போனார். அவை யில் இருந்தவர்களை விசாரித்தார். நேற்று நகரத்தின் எந்தப்பகுதியிலும் மழை பெய்யவில்லை என்று எல்லோ ரும் சொன்னார்கள்.

மன்னரும் தென்னாலிராமன் சொன் னதுபோல குழந்தை கனவில கண்ட தைத்தான் சொல்கிறான் என்று சொல்லி தெனாலிராமனையும் விடுவித்தார். மனதிற்குள் மகிழ்ந்துகொண்டே தெனாலிராமனும் இடத்தைக் காலி செய்தார்.

பிறிதொருநாள், மன்னரிடம் தாம்தான் கத்தரிக்காயை திருடியதாக ஒத்துக்கொண்டு நடந்தவைகளை தெனாலி சொல்ல, மன்னர் ஆச்சரியத் துடன் சிரித்து மகிழ்ந்தார். பிறகு தெனாலிராமனின் சாதுரியத்தை மெச்சி பல பரிசில்களை அளித்து மகிழ்ந்தார்.

# இயங்கும் எரிமலை வெள்ளிக்கிரகத்திலுமா...!

**வெ**ள்ளிக்கிரகத்தில் எரிமலைகள் இருக்க லாம் என இப்பொழுது விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

வெள்ளியானது பூமியின் இரட்டை (ருவைன்) என்றும் சொல்லப்படுகிறது. ஏனெ னில், இது பூமியைப்போன்ற அளவுடை யது. மேலும், பூமி எவற்றினால் ஆக்கப்பட்டுள் ளதோ அவற்றினாலேயே இதுவும் ஆக் கப்பட்டுள்ளது. பூமியைப்போன்றே வெள்ளிக் கிரகமும் இயங்கும் எரிமலைகளைக் கொண்டிருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரி விக்கின்றனர். ஏனெனில் *வீனஸ் எக்பிரஸ்* என்ற விண்கலம் இதனைக் கண்டுபிடித் துள்ளது.

இதன் அடர்த்தியான வளிமண்டலம் கீழே உள்ளவற்றை மறைக்கின்றது. *வீனஸ் எக்ஸ் பிரஸ்* விண் கலத்தின் புதிய கண்காணிப்பு படங்கள் அக்கிரகத்தில் எரிமலை வெடிப்பு இருப்பதற்கான சான்றாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

வீனஸ் எக்ஸ்பிரஸ் 2006 ஆம் ஆண்டி லிருந்து கடந்த ஆண்டுவரை வெள்ளிக்கிர கத்தைச் சுற்றி வந்தது. இந்த இயந்திர விண் கலம் வெள்ளிக் கிரகத்தின் மேற்பரப்பிலிருந்து **அகச்சிவப்பு ஒளி** வெளிவருவதை கண்டு பிடித்துள்ளது. சூடான பொருட்களிலிருந்து அகச்சிவப்பு ஒளிவெளிவருவதில்லை. எனவே, **அகச்சிவப்பு ஒளி**, எரிமலைக் குழம்பிலி ருந்துதான் வெளிவந்திருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் முடிவெடுக்க அந்தக் கண்டு பிடிப்பு வழி வகுத்தது. அத்துடன் சூடான பிரதே சங்கள் விரைவாக சூடேறின. பிற்பாடு குளிர்ச்சி யடைந்தன. முறிவுகள் நிறைந்த இந்த எரி மலை வெடிப்பு, பூமியின் எரிமலை வெடிப்புகள் போன்றே வெள்ளிக்கிரகத்தின் மேற்பரப்பில் நிகழ்ந்துள்ளது.

வெள்ளிக்கிரகத்துக்கான முன்னைய பய ணங்கள் அங்கே எரிமலைகள் இருப்பதற்கான தடயங்களை வழங்கியிருந்தன. **மகெலன்** என்று அழைக்ககப்படும் பணிநிமித்தம், வெள் ளிக் கிரகத்தின் மேகங்களை ஊடறுத்து, கண்டு பிடிக் கப்பட்டவை எரிமலைகள் போன்று காணப் பட்டன. **பயனீர்** என்ற பணிநிமித்தம் கண்டு பிடிக்கப்பட்டவை வீனஸ் காற்றுவெளியில் சல்பர் டை ஒக்சைட் ($SO_2$) கூர் முனைகளாக இருந்தன. சல்பர் டை ஒக்சைட் ஆனது, பொது வாக பூமியின் எரிமலைகள் கக்குகின்ற வாயு வாகும். வெள்ளிக்கிரகத்தில் வெடித்தெழும் எரிமலைகள் இருப்பதற்கான சான்றுகள் வளர்ந்துவருகின்றன. அவ்வாறு அங்கு இயங்கும் எரிமலைகள் இருப்பின் எரிமலை யுள்ள மூன்றாவது உலகம் வெள்ளியாகும். எனெனில், **பூமியில் மட்டுமல்ல யூப்பிட்ட ரின் நிலாவான இயோவிலும் இயங்கும் எரிமலைகள் ஏற்கனவே கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.**


*தமிழில், பாமா*



வெள்ளிக்கிரகத்தில் அகச்சிவப்பு ஒளி-வீனஸ் எக்ஸ்பிரஸ் எடுத்த படம்-

Valampuri 001.pdf 1 8/8/2015 6:03:15 PM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



பிரபாகரன் தேர்தலில் போட்டி இட்டிருந்தால்?

அரசியல்வாதிகளைவிட நடிப்பில் திறமானவர்கள் உண்டா?

சூர்யாவின் படங்கள் தோல்வியடைய என்ன காரணம்?

**மதி** — சுழிபுரம்

**அப்துல் கலாமின் இழப்பு இந்திய தேசத் திற்கு பெரும் இழப்பல்லவா?**

இந்தியாவுக்கு மட்டுமல்ல தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும். அவரின் மரண வீட்டில் கலந்து கொண்ட நடிகர் வடிவேலு பேசும் போது அப்துல் கலாமின் இறப்பு ஒவ்வொரு தமிழர்களின் வீடுகளிலும் ஒவ்வொருவரை இழந்ததாய் உணருகின்றனர் என்றார்.

**கஜரூபன்**

**எத்தனை வயதில் திருமணம் செய்து கொள்ளலாம்?**

உங்கள் வயதை இருபத்து ஐந்தால் பெருக்கி வரும் விடையை இருபத்து ஐந்தால் வகுக்க வும் விடை தெரியும்.

**கௌரீசன்** — கரணவாய்

**பிரபாகரன் தேர்தலில் போட்டி இட்டிருந் தால்?**

நாங்கள்தான் நாங்கள்தான் என்று குழறும் பலரின் சாயம் வெளுத்திருக்கும்.

**ராஜி** — வல்வெட்டித்துறை

**பஞ் ஒன்று சொல்லுங்க பிளீஸ்?**

தற்போதைய நடுநிலை என்பது சமனானது அல்ல. யாரால் நமக்கு இலாபம் கிடைக் கிறதோ அந்தப்பக்கம் சாய்ந்திருப்பதே!

**சுஜிந்தன்** — புதுக்குடியிருப்பு


**சூர்யாவின் படங்கள் தோல்வியடைய என்ன காரணம்**

தொடர்ந்து வெற்றிப்படங்களை தெரிவு செய்து கொடுத்துக் கொண்டிருந்த சூர்யாவின் தெரிவு கள் பிழைத்துவிட்டன. பெரிய இயக்குநர் என்றவுடன் கதை கேட்காமலே ஓகே சொல்லி விட்டார் போல.

**அபிக்குட்டி** — கரவெட்டி

**உலகில் கண்ணுக்குத் தெரியாத அழ கான பொருள் எது?**

காதலி கிடைக்காத ஒருவனின் கனவுக் காதலி



**தனு** — அல்வாய்

**கல்வி கற்பது சுகமா? கற்பிப்பது சுகமா?**

கல்வி கற்கும்வரை கற்பது கடினமாகவும் கற்றபின் கற்பிப்பது சுலபமாகவும் ஆகிவிடு கிறது.

**ஜெயா** — சுழிபுரம்

**நாங்களும் அப்துல் கலாம் ஆக வேண் டும் என இலக்கு கொள்ளலாமா?**

ம்ம்ம்... கனவு காணச் சொல்லி அப்துல் கலாமே சொல்லியிருக்கிறாரே! ஆனால் அந்த கனவை நிறைவாக்க முயற்சி செய்.

**கோகுலன்** — மானிப்பாய்

**வாழ்க்கையில் முன்னேற முடியவில் லையே?**

இப்போதெல்லாம் உழைத்து சம்பாதிப்பது என்பது குண்டூசியால் குழி தோண்டுவதைப் போலவும் செலவு செய்வது குண்டூசியால் பலூன் உடைப்பதும் போலவும்தான்.




**கிருஷா** — வரணி

**அரசியல்வாதிகளைவிட நடிப்பில் திற மானவர்கள் உண்டா?**

எனக்குத் தெரிந்து இவர்களை விட நடிப்பில் சிறந்தவர்கள் என்று யாருமே இல்லை.

**தனு** — சிறுப்பிட்டி

**காதலில் ஜெயிப்பது எப்படி?**

என்னம்மா கத்தரிக்காய் குழம்பு வைப்பது எப்படி என்கிற மாதிரிக் கேட்கிறாய்.

**க.கனகராசா** — சாவகச்சேரி

**இம்முறை பிரதமராகும் வாய்ப்பு யாருக்கு அதிகம்?**

இன்னும் ஏழு நாட்கள் பொறுமையாக இருங் களேன்.

**அன்ரன் ஜெயசுதன்** — கரவெட்டி

**சங்கம் அமைத்துக் கொள்ளாத துறை எது?**

காதலித்து ஏமாற்றுவோர் சங்கம் என்பது இன் னும் உதயமாகவில்லை.

**சிறி** — வரணி

**எறும்புத் தோலை உரித்துப்பார்க்க யானை வந்ததடா என் இதயத் தோலை உரித்துப்பார்க்க ஞானம் வந்ததடா இதன் அர்த்தம் என்ன?**

எறும்பின் தோலை உரிக்கலாமா அப்படி உரித்தாலும் அதில் இருந்து யானைவருமா? இதயத் தோலை உரிக்கலாமா? அப்படி உரித் தாலும் அதில் இருந்து ஞானம் வருமா? சாத்தியப்படாதது சில நடைபெறும் போதே மனிதன் ஞானி ஆகிறான்.

**கஜி** — இணுவில்


**மனிதன் மிச்சம் வைக்காமல் சாப்பிடுவது எதனை?**

மிச்சம் வைக்காமல் என்று எதுவுமே இருக் காது அப்படி இருக்கும் என்றால் அது "திருப்தி" என்பதாகவே இருக்கும்.

**சுமதி** — வன்னி

**ஆண்கள் பாவம் என்கிறார்களே?**

என் மகன் சரியில்லை - அம்மா.
என் புருசன் சரியில்லை - மனைவி.
எல்லா மாமியார் மருமகள் சண்டையின் கடைசி யில் வந்து முடியும் வார்த்தை. அப்படியென் றால் ஆண் பாவம் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## இமயம் தொட

நீ வென்று விட்டாயா?
உன் மகிழ்வு அத்தனையையும்
உன்னுள் அடக்கு
ஏனென்றால்
உன்னுடனான போட்டியில்
தோல்வியுற்றவன் மனமோ
எரிமலையாய்
குமுறிக்கொண்டிருக்கும்
புரிந்து நடந்துகொள்
உன் கொண்டாட்டம்
அவர் இதயத்தை
முள்ளாய்க் கிழிக்காமல்

மாவை. நா.கஜேந்திரன்

## தேவைகளின் பூரணம்

எங்களின்
துயரங்களுக்கு மேல்
அழகாகப் பூசப்படுகின்றன
அபிவிருத்தி வர்ணங்கள்
எமக்கான
அடிப்படைத் தெரிவுகளை
புறமொதுக்கித்தள்ளிவிட்டு
உள்ளுள் கிடந்து
கொதிக்கின்ற மன உணர்வுகள்
மெல்ல
வீச்சாகின்றன வீரியமாய்
வெப்பத்தின் வெளிப்பாடாய்
சொல்லால் விதந்துரைக்க
சுதந்திரமற்றுப் போன நிலையில்
செயலால் ஆக்கம் பெறட்டும்
எமது சிந்தனையின் மறுவடிவம்
இதுவரை நிரப்பப்படாத
தேங்கிக் கிடக்கும் தேவைகளின்
பூரணத்துக்குப்பின்
தெளியட்டும் இத்தேசம்
நிமிரட்டும் எமக்கான காலம்

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

## உன் நினைவில் நான்


காற்றாக வந்து என்னுள்
கலந்து கொண்டாய்
கனவாக மாறி என்னுள்
காதல் தந்தாய்
விடியாத இரவு இல்லை
என்றுரைத்தாய் இன்று
விடிவே என் வாழ்வில் இன்றி
விட்டுச் சென்றாய்
புரியாத புதிராக என்னுள்
வாழ்ந்து வந்தாய்
புது விடியலுக்குள் நீ மெல்ல
ஒளிந்து கொண்டாய்- எனக்கு
விடிவே இனி வேண்டாம் என்று
முடிவு செய்தாய்- அதனால்
இருள் தந்து நீ விலகி
இறைவனிடம் சென்றாய்

கரவையூர் பி. கவி

## வழி ஏது சொல்வீர்

ஆழியை வென்றிட அதிற்சென்று மீண்டிட
அறிவினால் வழிகண்டார் அன்று
ஆயினும் போதையில் மூழ்கியோர் மீண்டிட
வழிகாணாத் தவிக்கின்றோம் இன்றும்
பொன்னான வாழ்வை போதையில் ஆழ்த்தி
உன் வாழ்வை முடிக்கிறாய் மனிதா
கண்ணான உறவுகள் கலங்கியே நின்றிட
காலத்தை முடிக்கிறாய் மனிதா
தன்னையே உணரா தடுக்கவே முடியா
என்னவோ காரியம் செய்தாய்
மண்ணிலே உந்தன் மகத்துவம் புரியா
மடிந்து நீ ஒழிகிறாய் வீணாய்
உலகிலே உந்தன் பெயரென்றும் நிலைக்க
ஒருபணி ஆற்றிட மறந்தாய்
நிலைபெறு மின்பம் என்றெண்ணிப் போதையில்
நீதடு மாறியே இறந்தாய்

கலாபூஷணம் ந.இராமநாதன்



## பற்றும் வரவும்

வலி தந்தவர்களை
உயிராய் நினைப்பது
தாய்மையும் காதலும்
வாய்மை வாய்ந்த
இந்த மூதாட்டி கூட
இதற்கு விலக்கல்ல
துயரங்கள் தொடர்ந்து
தூரத் துரத்தியபோதும்
உற்ற உறவுகளின்
பற்றும் வரவும் குறைந்தாலும்
அந்தக் காலகட்டத்தின்
மனிதநேயச் சம்பவங்கள்
இதயத்தில் பசுமையாய்
நிறைந்திருப்பதால்
நினைத்துப்பார்க்கையில்
நிம்மதி பிறக்கின்றது

க.நாகராசா
நுணாவில்

## கலியுகம்

கோயில் தெருவினிலே
யாசகம் வேண்டி
யாசகர் சில்லறைகளுக்கு
பசியுடன் கையேந்தி நிற்க..
கருவறையில் கடவுளின்
உண்டியல்கள் விழுங்கின
பணநோட்டுக்களை

எஸ்.ஆர்.ராம்கி
கிளி/ கிளிநொச்சி இ.க.

# மௌனத்தின் தேடல்- 260

## நீ மட்டுமா விதிவிலக்கு

உன் மனம் என்னும்
அட்சய பாத்திரத்தில்
துயரங்கள் நிறைந்து வழிந்திட
யுத்தமோ சீரழிவுகளோ
உறவுகளைப் பிரித்துவிட
உன் வயிற்றுப் பசிக்கும்
உணவு தூரம் போகின்றதோ!
விதியின் கையில்– வீதியில்
தவித்துக்கொண்டிருக்கும்
பாட்டியே! கலங்காதே!
நீ மட்டுமா? விதியின்
விதிவிலக்கு

எஸ்.அகல்யா
சண்டிலிப்பாய்

## யோசிக்கவேண்டாம் பாட்டி

வேட்டுக்கள் தீர்ந்த நிலையிலும்
காட்டிக் கொடுப்பவராலும்
தலை ஆட்டிப் பணம்
பெறுபவராலும்
நாட்டில் அமைதியிருக்காது பாட்டி
பட்டினியாய் எத்தனை
நாளிருப்பது
வீட்டில் தனித்திருந்து– தன்
பாட்டில் யோசிப்பதை விடுத்து
கேடில்லா முதியோர் இல்லத்தில்
சேர்ந்திடலாம் வாங்க பாட்டி

குமார
தென்மட்டுவில்

## தாயே ஏன் துயரம்

பூமி ஒரு குற்றவாளிக்
கூண்டுதானம்மா
பிறக்கும் போது
தாய்க்கு வேதனை
இறக்கும் போது
பாசத்திற்கு சோதனை
இருக்கும்போது
எல்லோருக்கும்
நல்லது செய்வோம்
விடியல் கிட்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## வயோதிப அரக்கன்

பாசப் பெரும் வயலில்
வறுமைக் களை அகற்றி
வியர்வை உரமிட்டு
வளர்த்து ஆளாக்கி
கண்மணிகளை
சாதனைச் சிகரத்தில்
ஏற்றிவிட்ட அன்னையை
வயோதிப அரக்கன்
சிறைபிடித்தபோது
வந்து மீட்காத
நன்றி மறந்தவர்களை
யாரோடு சேர்ப்பது?


அராலியூர்
சோ.சிவகுமாரன்

## தள்ளாடும் வயதினிலே...!

சிப்பிக்குள் இருக்கும்
முத்து எவ்வளவு பெறுமதி
மிக்கது என்பதும்
பாரினில் பிறக்கும்
ஒவ்வொருவர் வாழ்வில்
முதுமை என்பதும்
பெறுமதியானது
அந்த முதுமையை நாங்கள்
வெறுக்காது அரவணைப்போம்
என்றென்றும்
எங்கள் வாழ்வில்...

செ.பேபிசாளினி
மட்டுவில் தெற்கு

# மௌனத்தின் தேடல் –261



அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 12.08.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

## இவ்வாரம் மனவெளியில் சேவை வழங்குநர் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.




இன்றைய காலத்தில் நமது சமூகத்தில் பல் வேறுபட்ட பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றில்சில வெளிக் கொணரப்பட்டு தீர்த்து வைக்கப்படுகின்றன. அல்லது நடைபெறாமல் தடுக்கப்பட்டுகின்றன. வேறு சில பிரச்சினைகள் வெளிக் கொணரப்படாமலும் செல்கின்றன.

ஆனாலும் பிரச்சினைகள் எத்தகைய தாக்கமுள்ளவையாக இருந்தாலும் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு உதவலுங்களுடைய நாட்டில் பல்வேறு அமைப்புக்கள் செயற்படுகின்றன, தொடர்ந்து சேவையாற்றி வருகின்றன. அவற்றின் விபரங்கள் பற்றி மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். தங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைக ளைத் தீர்ப்பதற்கு யார் யாருடன்தொடர்பு கொள்ளவேண்டும் என்ற பூரண அறிவு மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோககில் இவ்வார மனவெளி வெளியீட்டில் தொடர்பு கொள்ளக்கூடிய அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் தரப்படுகின்றன.

பெண்கள் மற்றும் சிறுவர் தொடர்பில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசஅமைப்பில் பல்வேறு அதிகாரிகள் இருக்கின்றனர். அதே வேளை அரசசார்பற்ற நிறுவனங்களும் பலவும் இயங்குகின்றன.

இருந்த போதும் பலருக்கு அவை தொடர்பான முழுமையான விபரங்கள் தெரியாதுள்ளது. "சேவைகள் முழுமையாக கிடைக்கப் பெறும நோக்கிலும், மக்கள் நன்மையையும் நோக்கிலும் இவ்விபரங்கள் தரப்படுகின்றன. அதேவேளை உதவிகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளக்கூடிய அவசர அழைப்பு இலக்கங்களும் தரப்பட்டுள்ளன.

சிறுவர் உரிமை மீறல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்முறைகள், சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், அடித்தல் காயப் படுத்துதல் போன்ற இன்னொரன்ன சிறுவர் சார்ந்த பிரச்சினைகள் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டு தானிருககின்றது.

அவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வுகளும், திட்டங்களும் முன்னெடுக்கப் பட்டுக் கொண்டு தானிருக்கின்றன.

ஆனாலும் நாம் அவ்வாறு பாதிக்கப்படும் போது உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அல்லது தெரியாமல் தடுமாறுகின்றோம். அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

**பிரதேச செயலகங்களிலுள்ள பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்**

| பிரதேச செயலகம் | தொலைபேசி. இல |
|---|---|
| யாழ்ப்பாணம் | 021-2227536 |
| நல்லூர் | 021-2222208 |
| கோப்பாய் | 021-2224044 |
| உடுவில் | 021-2223953 |
| தெல்லிப்பளை | 021-2223952 |
| பருத்தித்துறை | 021-2221726 |
| சாவகச்சேரி | 021-2222501 |
| கரவெட்டி | 021-2223258 |
| சண்டிலிப்பாய் | 021-2223951 |
| வேலணை | 021-2229974 |
| மருதங்கேணி | 021-2225533 |
| சங்கானை | 021-2250044 |
| காரைநகர் | 021-3211612 |
| ஊர்காவற்துறை | 021-2223955 |
| நெடுந்தீவு | 021-3214239 |
| பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர்(யாழ்ப்பாணம்) | 021-2222774 |
| பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் (முல்லைத்தீவு) | 021-2290035 |
| பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் (கிளிநொச்சி) | 021-2283945 |
| பால்நிலைசார் வன்முறைகளைக் கையாளும் பிரிவு (உளமருத்துவப்பிரிவு, யாழ் போதனா வைத்தியசாலை) | 021-2221090 |

**சிறுவர் தொடர்பான அரச சேவை வழங்கும் நிறுவனங்கள்**

**சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் (PO)**

| பிரதேச செயலகம் | தொலைபேசி இல |
|---|---|
| வேலணை | 021-2222774 |
| சண்டிலிப்பாய் | 021-3734502 |
| கரவெட்டி | 021-2255552 |
| சங்கானை | 021-2250044 |
| யாழ்ப்பாணம் | 021-2228469 |
| தெல்லிப்பளை | 021-2241726 |
| பருத்தித்துறை | 021-2268259 |
| ஊர்காவற்துறை | 021-2211601 |
| கோப்பாய் | 021-2230011 |
| மருதங்கேணி | 021-2260533 |
| சாவகச்சேரி | 021-2270011 |
| உடுவில் | 021-2241726 |
| நல்லூர் | 021-2222208 |
| காரைநகர் | 021-2211725 |
| யாழ். மாவட்டச் செயலக சிறுவர் பாதுகாப்பு பகுதி | 021-2222774 |
| யாழ். மாவட்ட உளசமூகப்பணி பிரிவு | 021-2222774 |
| மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவு | 021-2222774 |
| முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி பகுதி | 021-2222774 |

**சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் (CPRO)**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 0212222235 |
| நெடுந்தீவு | 0212215201 |
| வேலணை | 0212229974 |
| ஊர்காவற்துறை | 0212211601 |
| காரைநகர் | 0212211725 |
| நல்லூர் | 0212229801 |
| சண்டிலிப்பாய் | 0212255551 |
| சங்கானை | 0213202217 |
| உடுவில் | 0212240195 |
| தெல்லிப்பளை | 0212241723 |
| கோப்பாய் | 0212242202 |
| சாவகச்சேரி | 0212270011 |
| கரவெட்டி | 0212263258 |
| பருத்தித்துறை | 0212260215 |
| மருதங்கேணி | 0212260501 |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் உத்தியோகத்தர் (NCPA)**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 0212222235 |
| நெடுந்தீவு | 0212215201 |
| வேலணை | 0212229974 |
| ஊர்காவற்துறை | 0212211601 |
| காரைநகர் | 0212211725 |
| நல்லூர் | 0212229801 |
| சண்டிலிப்பாய் | 0212255551 |
| சங்கானை | 0213202217 |
| உடுவில் | 0212240195 |
| தெல்லிப்பளை | 0212241723 |
| கோப்பாய் | 0212242202 |
| சாவகச்சேரி | 0212270011 |
| கரவெட்டி | 0212263258 |
| பருத்தித்துறை | 0212260215 |
| மருதங்கேணி | 0212260501 |

**யாழ் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலைய**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 021-2222222 |
| காங்கேசன்துறை | 021-2059907 |
| சாவகச்சேரி | 021-2270722 |
| கொடிகாமம் | 021-2050222 |
| ஊர்காவற்துறை | 021-2211696 |
| நெல்லியடி | 021-2226322 |
| பருத்தித்துறை | 021-2263227 |
| கோப்பாய் | 021-2224022 |
| மானிப்பாய் | 021-2255160 |
| வல்வெட்டித்துறை | 021-2263573 |
| சுன்னாகம் | 021-2240323 |
| நெடுந்தீவு | 021-3213337 |
| வட்டுக்கோட்டை | 021-2250222 |
| தெல்லிப்பளை | 021-2240222 |
| அச்சுவேலி | 021-2058385 |
| இளவாலை | 021-3212435 |
| பலாலி | 021-3212480 |

**அவசர அழைப்பு இல (Hot lines)**

| | |
|---|---|
| பெண்கள் வன்முறை தொடர்பான அவசர அழைப்பு இல. | 0114 718585 |
| சிறுவர் தொடர்பான பிரச்சினைகளுக்கு அறிவிக்க வேண்டிய அவசர இல.(NCPA) | 1929 |

**அரசசார்பற்ற நிறுவனங்கள் (பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் பணியாற்றுபவர்கள்)**

| | |
|---|---|
| வின் (WIN) | 021-2229671 |
| பெண்கள் அபிவிருத்தி நிலையம் | 021-2224398 |
| சாந்திகம் | 021-2223338 |
| Save The Children | 021-2225078 |
| UNICEF | 0112677550 |
| சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் (CFCD) | 021-2221354 |
| SOS சிறுவர் கிராமம் | 021-2211101 |
| Legal Aid Commission (சட்ட உதவியை நாடுவதற்கு) | 021-2224545 |

**சுகாதார உத்தியோகத்தர்கள்**
**குடும்பநல சேவை உத்தியோகத்தர் (FHW),**
**பொதுச்சுகாதார பரிசோதகர் (PHI)**
**பொதுச்சுகாதார பரிசோதகர் உளநலம் (PHI – Mental Health)**
**பாடசாலை பற்சிகிச்சையாளர்**
**சுகாதாரக்கல்வி உத்தியோகத்தர்**

| | |
|---|---|
| சங்கானை | 021 2250732 |
| சாவகச்சேரி | 0212270014 |
| யாழ்ப்பாணம் | 0212222645 |
| கரவெட்டி | 0212261006 |
| ஊர்காவற்துறை | 0212211660 |
| கோப்பாய் | 0212231060 |
| நல்லூர் | 0212053702 |
| பருத்தித்துறை | 0212264482 |
| சண்டிலிப்பாய் | 0212255248 |
| தெல்லிப்பளை | 0212241182 |
| உடுவில் | 0212241183 |
| வேலணை | 0212211555 |
| பொதுசுகாதார மேற்பார்வையாளர் | 0212223725 |

வாசகர்களிடமிருந்து கேள்விகள். கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்;

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகப்பை எங்கே..? போதைப்பொருட்களை சுமப்பது...ஏன்?

ஒரு சமூகத்தை அழிவை நோக்கி தள்ளுவதும் அழிவின் பாதையை நோக்கிச் செல்வதற்கான சூழலை உரு வாக்கிவிடுவதும் திட்டமிட்ட இன அழிப் பின்பாற்பட்டதேயாகும். நேரடியாகவும் மறைமுகமாகவும் மிகவும் நுட்பமாக இந்த சூழலை நோக்கி தமிழர் சமூகம் தள்ளப்படுகின்றது. நிகழ்காலத்தின் மனிதர்கள் அழிக்கப்படுவதுபோல எதிர்காலத்தின் மனிதர்களும் திட்டமிட்டு அழிக்கப்படுமொரு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

போருக்குப் பின்னர் வடக்கில் சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்திருப்பது போலவே சிறுவர்கள் போதைக்கு அடிமையாக்கப்பட்டிருப்பதும் அதனால், வன்முறைகளில் ஈடுபடுகின்ற சம்பவங் களும் அதிகரித்திருக்கின்றன. புத்தகம் சுமக்க வேண்டிய ஏதுமறியாத சிறுவர்களின் கையில் வாழ்க்கையை எதிர்காலத்தை சமூகத்தை அழிக்கும்போதைப் பொருட்கள் புழங்கும் சூழல் உருவாக்கபபடுவது மிகவும் தந்திரமான திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

அண்மையில் கிளிநொச்சியில் ஒரு சிறுவனைச் சந்தித்தேன். அவனுக்கு வயது 15. அவன் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளான். அவனுக்கு போதைப் பொருட்கள் எங்கிருந்தோ கிடைக்கின்றன. ஆனால், எதற்காக அவன போதைப் பொருட்களை நாடுகிறான் என்பதையே நான் அறிய விரும்பினேன். அவனது தயார் யுத்தத்தில் இறந்து விட்டார். தாயின் அரவணைப்பு இல்லாமல் போன பிறகு அவனது வாழ்க்கையே தடம் புரண்டு விட்டது. அவனது தாயாரை எனக்குத் தெரியும். அவர் மிகவும் கண்டிப்பானவர். குறிப்பாக பிள்ளைகளின் படிப்பில் மிகவும் அக்கறை கொண்டவர். அவர் கொல்லப்பட்ட பிறகு கணவரும் அதிகமாக குடிக்கத் தொடங்கினார். ஆரம்பத்தில் குடிக்கத் தொடங்கிய இந்தச் சிறுவன் இப்போது ஆபத்தான போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிட்டான். தன் பிள்ளை படித்து பெரிய ஆளாக வரவேண்டும் என்று கனவு கண்ட அந்தச் சிறுவனின் தாயின் கனவு சிதறுண்டு விட்டது.


கிளிநொச்சியில் உள்ள ஒரு கிராமத்தில் உள்ள தற்காலிக வீடு ஒன்றைக் கடந்து செல்லும்போது சிறுவர்கள் கூடியிருந்து போதைப் பொருட்களை பாவித்துக் கொண்டிருப்பதை பார்க்க நேரிட்டது. அவர்களில் பலரும் யுத்தத்தில் தாய் தந்தையர்களை இழந்தவர்கள். பாடசாலையை விட்டு இடை விலகியவர்கள். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிட்டனர். பல சிறுவர்கள் பொக்கற்றுக்களில் கஞ்சாவடன் அலைகின்றனர். இதுபோல பல சிறுவர்களை நான் சந்தித்துவிட்டேன். அவர்கள் இன்று வாழ நேர்ந்துள்ள சமூகச் சூழலே இவ்வாறான நிலமைக்கு தள்ளியுள்ளது. பெற்றோர்களின்றி, தனிமையில், அவநம்பிக்கைகளின் மத்தியில் எதிர்காலம் குறித்து எந்த திட்டமுமின்றி மன உளைச்சல்களை தீர்க்க போதைப் பொருட்களை நாடுகின்றனர்.


கிளிநொச்சியில் பாரதிபுரத்தில் அண்மையில் கஞ்சா போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்ட சிறுவன் இராணுவ அதிகாரி ஒருவருக்காகவே தான் கஞ்சா கொண்டு சென்றதாக கூறினான். அந்த இராணுவ அதிகாரி முறிகண்டியில் உள்ள முகாம் ஒன்றில் இருப்பதாகவும் அவர் தனது நண்பர் என்றும் அந்தச் சிறுவன் குறிப்பிட்டான். அவருக்காக வாரம் தோறும் கஞ்சாவை எடுத்துச் செல்வதாகவும் அதற்காக அவர் தனக்கு இறைச்சி வழங்குவார் என்றும் அந்தக் கஞ்சாவை கிளிநொச்சி நகரத்தில் இருநூற்றைம்பது ரூபாவிற்குப் பெற்ற தாகவும் அச்சிறுவன் ஊடகங்களுக்குக் குறிப்பிட்டிருந்தான். சுமார் 14 வயது மதிக்கத் தக்க அந்தச் சிறுவன் போதைப் பொருளுக்கு அடிமையாகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான்.

வடக்கில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்கள் இராணுவத்திற்கான போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபடுத்தப் படுகின்றனர். கல்வி, வருமானம் எதுவு மற்ற நிலையில் மிக இலகுவாக பணம் சம்பாதிக்கவும் தமக்குத் தேவையான போதைப் பொருளை நுகரவும் போதைப் பொருள் விநியோகத்தில் சிறுவர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு இராணுவத்தினர் முழுமையான பாதுகாப்பை ஆதரவை வழங்குகின்றனர். ஏனெனில் இராணுவத்திற்குத் தேவையான போதைப் பொருட்களை இந்த சிறுவர்களே பெற்றுக கொடுக்கின்றனர். வீதிகளில் ரோந்து செல்லும் இராணுவம் சிறுவர்களிடமிருந்து போதைப் பொருட்களை எடுத்துச் செல்கின்றனர். வடக்கில் இராணுவ்த் தலைமையகங்களில் போதைப் பொருள் பாவிக்கும் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு சிறுவர்களே ஊடாகவே கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் விநியோகம் இடம் பெறுகின்றது.

கிளிநொச்சி நகரத்தை அண்டிய கிராமம் ஒன்றில் அண்மையில் நடந்த வாள்வெட்டில் ஈடுபட்டவர்களில் நான்கு பேர் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள். சம்பவம் நடக்கும்போது அவர்கள் போதையில் இருந்துள்ளனர். சிறுவர்கள் வன முறைகளில் ஈடுபடுகின்ற சம்ப வங்கள் பலவும் போருக்குப் பின்னர் பதிவாகியுள்ளது. வடக்கிலிருந்து பல சிறுவர்கள் வன்முறைகளில் ஈடுபட்ட மையால் அநுராதபுரம் சிறைக்குச் செல்கின்றனர். இவர்களில் பலர் போதைப் பொருள் பாவித்து மற்றும் மது அருந்திய நிலையிலேயே வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வருடம் முன்னர் வடக்கில் பொலிஸ் உறுப்பினர் ஒருவரை கிளிநொச்சி சிறுவர் கத்தியால் குத்தியிருந்தார். தன் இனத்தை பழித்தமையால் கத்தியால் குத்தியதாக சிறுவன் கூறியிருக்கிறான்.

பெற்றோரை இழந்த பிள்ளைகளின் புள்ளி விபரம்








போதைப்பொருள் தொடர்பான கைதுகளின் விபரம்

யுத்தம் செய்து ஒரு தேசத்தை ஆக்கிரமிக்கும் இராணுவம், தொடர்ந்தும் அங்கொரு யுத்த நடவடிக்கையை தொடரும். அந்த தேசத்தின் வாழ்வை வரலாற்றை அழிக்கும் ஒரு நடவடிக்கையை சத்தமின்றி மேற்கொள்ளும். இன்றைக்கு வடக்கின் சிறுவர்களை, யுத்தத்தில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களை போதைப்பொருள விநியோகத்திலும் போதைப் பொருள் பாவனையிலும் ஈடுபடுத்தி அதன் ஊடாக அவர்களது எதிர்காலத்தை பாழாக்கிக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருப்பதும் இதன்பாற்பட்டதே.

இது தொடர்பில் தமிழ் சமூகமும் அரசில் தலைமைகளும் அரச அதிகாரிகளும் விழிப்புடன் செயற்படுவது அவசியமானது. போரால் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளை, படிக்க வேண்டிய வயதில் பாடசாலைகளைவிட்டு இடைவிலகியவர்களை மீள கல்வியில் இணைப்பதும் இடைவிலகல் காரணங்களை கண்டறிய வேண்டும். வடகிழக்கு மாகாணங்களில் கிராம மட்டத்தில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து தடம் மாறிய சிறுவர்களின் எதிர்காலத்தை வளம்படுத்த சமூக அக்கறை மிக்க செயறபாடு இன்று தேவை.

இன அழிப்பு இராணுவம் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலத்தை ஆக்கிரமித்து விட்டு -அங்கு காவல் செய்கிறது என விபரிப்பது ஒடுக்குமுறையாளர்களின் அரசியல் யுக்தி. அந்த இராணுவம் அந்த நிலத்தின் அதிகாரத்தை கைப்பற்றும் விதமாக அந்த மக்களை மேலும் ஒடுக்கி அழிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஈழ நிலத்தின் சிறுவர்களை வளரும் தலைமுறையை நம்பிக்கையை முளையிலேயே அழிப்பதும் அழிவுக்குரிய அடிப்படைகளை ஏற்படுத்துவதும் இலங்கை இராணுவத்தின், இலங்கை அரசின் நெடுங்காலத் திட்டமான தமிழ் சமூகத்தை அழிப்பதற்கான மிக எளிய வழிமுறையாக முன்னெடுக்கப்படுகிறது.





16 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளின் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய புள்ளிவிபரம்- இலங்கை பொலிஸ் அறிக்கையிலிருந்து

-பார்த்தீபன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலையாத கனவு



## சிறுகதை

"அண்ணா! அக்கா! எங்க போறிங்க... யாழ்ப்பாணம் போறாக்கள் ஏறுங்கோ..."

கூடி நின்ற பயணிகளைக் குசலம் விசாரிப்பதுபோல போகுமிடம் விசாரித்துதார் பேருந்து நடத்துனர்.

யாருமேஏறிக்கொள்ளவில்லை..

மரக்கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் வௌவால்களாக மிதிபலகை தாண்டியும் ஒற்றைக் கால்... ஒற்றைக் கையின் பிடியில் பிரயாணிகள் பயணமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

"கால்கூட வைக்க இடமில்லாமல் கிடக்கு... அதுக்குள்ள என்னடா வெண்டா பிறகும் ஆக்களை ஏத்தப் பார்க்கிறான்... எங்களை என்ன சாக்காட்டப் போறானோ..." இது, வண்டிக்குள் நின்ற பாட்டிகள் சிலரது புறுபுறுப்பு.

"ஓமணை இந்த வகுவில இப்படி போட்டுக் கொல்லுறானே... மூச்சுக்கூட விடமுடியேல்ல...." பக்கத்தில் நின்று அப்புவும் பதிலுக்கு கூறினார்.

பகல் முழுவதும் மேய்ந்துவிட்டு படுத்திருந்து அசைபோடும் மாடுகள்போல் வண்டிக்குள் பிரயாணிகள்... "இதென்ன அநியாயமாக் கிடக்கு அங்கால இஞ்சால கூட அரக்க முடியாமல் இருக்கு...."

என்றவாறு பக்கத்தில் நின்ற நடுத்தர வயதுப் பெண்யொருத்தியைச் சற்றுத் தள்ளியவாறு வயது போன அம்மா ஒருவர் திரும்பிநின்று கொணடார்.

"எடியுள்ள! உந்தச் செருப்பால மிதியாதை மோனை..." அருகில் நின்ற இளம் பெண்ணொருத்தியின் குதியுயர்ந்த செருப்பின்கீழ் பாட்டி ஒருத்தியின் கால் மாட்டிக் கொண்டது.

ஆடியசைந்து அம்மன் பவனி வருவது போல் அந்த மினிபஸ் பயணித்துக்கொண்டிருந்தது.

அது, கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கும் தனியாருக்குச் சொந்தமான மினிபஸ்.

"நாவற்குழியில இறங்கிறவை முன்னுக்கு வாங்கோ..." நடத்துனரின் கூவுதல் இறுதி ஆசனத்தில் இருந்தவர்களுக்கு கேட்க வாய்ப்பில்லை. வாகன இரைச்சல், சனத்தின்ரை இரைச்சல்...

ஒருசிலர் இறங்கிக்கொள்ள மீண்டும் வண்டி பயணமானது.

இந்த வண்டியிக்குள்ளதான் ஏற்கனவே கொடிகாமத்தில் ஏறியிருந்த ஆரபியும் அம்மம்மாவும் இறுதியாசனத்தில் அமர்ந்திருந்தனர்.

ஆரபியின் கண்கள் இவைற்றை அவதானித்தாலும், அவளின் மனக் கண்கள் அவளின் கடந்தகாலங்களையே அசைபோட்டுக் கொண்டிருந்தன.

தனிமை அவளுக்கு அளிக்கப்பட்ட வரம்போலும். தனது ஒரே துணையான பாட்டியுடனேயே அவள் பல்கலைக்கழகம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறாள்.

பாழாய்ப்போன யுத்தத்தில் தனது உறவுகள் அனைவரையும் இழந்துவிட்டு...

"கடவுளே...!ஏன், என்னைமட்டும் விட்டுவைத்தாய்? அதுகளோட சேர்த்து என்னையும் எடுத்திருக்கலாமே..." என்று அடிக்கடி வருத்தப்படுவாள். அவளின் இந்த விரக்தி மனோபா வத்தை வெட்டியெறிவது அவளது அன்பான பாட்டிதான்.

அம்மம்மாதான் வன்னியில் பெற்றோருடன் வாழ்ந்த அவளை யுத்தத்தின் பின்னால், யாழ்ப்பாணத்திற்கு அழைத்து தன்னுடன் வைத்து வளர்த்தாள்.

பாட்டிக்கு அறுபத்தைந்து வயதாகி விட்டாலும் வைராக்கியம் குறையவில்லை. ஆரபியை படிக்கவைத்து நல்ல ஒரு நிலைக்கு உயர்த்திவிட வேண்டும் என்பதில் அவர் பிடிவாதமாக இருந்தார்.

க.பொ.த உயர்தரத்தில் நல்லபெறுபேறுகளைப் பெற்ற ஆரபி, யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்கு தெரிவாகி, பல்கலைக்கழகப் படிப்பை முடித்து பட்டம் பெறும் நாளையும் அடைந்துவிட்டாள். அதற்காகவே அவள் பாட்டியுடன் இப்பொழுது பயணித்துக் கொண்டிருக்கிறாள்.

அவள், இத்தகைய மாற்றத்தை அடைய அவளின் பாட்டிதான் முழுக் காரணமும். அவள் சோர்ந்திருந்த போதெல்லாம்... சோகமாய் இருந்த போதெல்லாம்... துன்பங்களைத்தாங்க முடியாது கேவிக்கேவி கண்ணீர் விட்ட போதெல்லாம்...

தன்னால இந்தப்படிப்பை தொடர்ந்து செய்து ஒரு முடிவை அடைய முடியுமோ...? என்று அவள் கேள்விக்குறியோடு இருந்த சமயம் எல்லாம் அவளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தது பாட்டிதான்.

அவவுக்கு ஒரேயொரு மகன்தான். அவரும் திருமணமாகி வெளிநாட்டில் வசிக்கிறார்.

மகனிடமிருந்து கார்த்திகைப்பிறை கண்டாற்போல் எப்போதேனும் சில்லறை உதவிகள் கிடைக்கும். அதை- ஐஞ்சைப் பத்தாக்கி, பத்தை நூறாக்கி- ஏதோ தனக்குத் தெரிந்த வழியில - ஆட்டை, கோழியை வளர்த்து வருமானத்தைப் பெருக்கி, அந்த வருமானத்தில ஆரபியைப் படிக்கவைத்தார் பாட்டி.

"... இஞ்சை மோனை நீ ஒண்டுக்கும் யோசிக்காமைப் படி. நான் எப்பாடுபட்டாவது உன்னை படிப்பிச்சு... ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்துவிடுவன். அதுக்குப்பிறகுதான் என்ர சாவு..."

வயோதிப காலத்தில பாட்டி இப்படிக் கஸ்டப்படுறது... அதுவும் அவளுக்காகக் கஸ்டப்படுறது... அவவின்ர கஸ்டத்தில தனக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துககொள்வது என்பது அவளால் ஏற்றுக்கொள்ள முடியாத- மன வேதனையைத் தருகின்ற ஒரு விடயமாகவே இருந்தது.

அவள் பாட்டியிடம் "வேண்டாம் அம்மம்மா நீங்கள் தனியாகக் கஸ்டப்படவேண்டாம். நான் உழைத்து உங்களைக் காப்பாற்றவேண்டிய நேரத்தில, நீங்கள் என்னைத் தன்னந் தனியா கவனிக்கிறது என்றது சரியா இருக்காது" என்று கூறியிருக்கிறாள்.

ஆனால், பாட்டியோ... "இல்லைப் பிள்ளை என்ரை பிள்ளையும் மருமகனும் கண்ட கனவது. நீ நல்லாய்ப் படிக்கவேணும் என்றது. நீ எதையும் யோசிக்காதே... கடவுள் என்ர கை, காலுக்கு பொல்லாப்புத் தரமாட்டார். நான் அது செய்து முடிப்பன்."

தந்தை, தாயின் கனவை நிறைவேற்றவேண்டும்... பாட்டியை ஏமாற்றக்கூடாது. இவை மட்டும்தான் அவளின் நெஞ்சுக்கூட்டின் அடிநாதம். அவளுடைய` சகோரங்கள் கூட இப்போ இல்லை. இருந்திருந்தால், தான் நிறைவேற்ற முடியாமல் போனாலும் தன் சகோதரர்கள் நிறைவேற்ற முடியும் என அவள் ஆறுதல் அடைவதற்கு. அண்ணனதும் தங்கையதும் உருவம் கண்முன் நிழலாடியது. அவளையும் அறியாமல் கண்கள் பனித்தன.

தொண்டு நிறுவனமொன்று ஆரபியின் குடும்பநிலை கண்டு தையல் இயந்திரம் ஒன்றை வழங்கியிருந்தது. தைப்பது என்றால், ஆரபிக்கு நிகர் ஆரபியே.

முன்னரும் அவள் ஒரு தையல் இயந்திரம் வைத்தருந்தாள். அது அவளுக்கு பரிசாகக் கிடைத்தது. க.பொ.த சாதாரணதரம் பரீட்சை முடித்துவிட்டு பாடசாலை விடுதலை நாட்களில் அவள் தையல் வகுப்பிற்கு போய்- சிறப்புச் சான்றிதழையும் பெற்றிருந்தாள். அவளது திறமைக்கு பரிசாகக் கிடைத்ததுதான் அந்த தையல் இயந்திரம். ஆனால், அதனை மாத்தளன் வரைதான் அவர்களால் காப்பாற்ற முடிந்தருந்தது.

இப்போ அது எங்கேயோ என்ன ஆச்சோ யாரால் சொல்லமுடியும்?

பல்கலைக்குச் செல்வதும் கிடைக்கும் நேரங்களில் வீட்டில் தையல் வேலையில் ஈடுபடுவதுமாய் நேரத்தைப் பயனுள்ளதாய் மாற்றிக் கொண்டாள்.

செம்மணி வெளிதாண்டி அவர்கள் பயணித்த வண்டி போய்க்கொண்டிருந்தது. ஆனால், அவளது வாழ்வின் முடிந்துபோன அத்தியாயங்கள் அவளை விட்டுச் செல்ல மறுக்கின்றன.

அவளது தந்தை தருமுவுக்கு தனது மகள் படித்து ஒரு ஆசிரியராக வரவேண்டும் என்பதுதான் ஒரே அசை. இவரது ஆசை சற்று வேறுபட்டது தான். மற்றைய பெற்றோர்களாயின் தனது மகனோ மகளோ வைத்தியர் அல்லது பொறியியலாளராக, சட்டவாளராக பெரிய பெரிய துறைகளில் சாதிக்கவேண்டும் என்றுதான் ஆசைப்படுவர்.

தருமுவின் ஆசைக்குக் காரணம் இருக்கவே செய்தது. வைத்தியர் பொறியியலாளர்... இன்னோரன்ன துறைகளில் வளரவேண்டுமாயின் அதற்கேற்ற கல்வி தேவை. அந்தக் கல்வியை புகட்டுபவன் ஒரு ஆசிரியர் தானே...!

எந்தத் துறை சார்ந்த கல்விக்கும் ஏற்றிவிடும் ஏணியாக இருப்பவர்கள் ஆசிரியர்கள்தான். அதனாலேதான் தனது மகளையும் அத்தகைய பெருமைமிக்க நல்லாசிரியராகக் காணவேண்டும் என்ற அவா தருமுவுக்கு இருந்தது.

"அப்பா நீங்கள் என்ன கனவு, கற்பனை கண்டியளோ... அதை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன் உங்கட மகள் ஆரபி கட்டாயம் நிறை வேற்றுவாள்..." அப்பாவின் நினைவுகளில் மிதந்தவளை அம்மம்மாவின் குரல் நிஜவுலகிற்கு அழைத்தது.

"பிள்ளை பஸ்ராண்ட்டு கிட்ட வந்திடுத்து. இறங்கி, புன்னாலைக்கட்டுவன் பஸ் பிடிக்கவேணுமெல்ல..." என்றவாறு ஆரபியின் தோளைத் தட்டினாள் கனகம்மா.

ஓம் அம்மம்மா, நிப்பாட்டட்டும் இறங்குவம்.

வைத்தியசாலையை அடுத்துள்ள வளைவால் நுழைந்து தரிப்பில் தரித்துக்கொண்டது மினிபஸ். சனக் கூட்டம் மெல்ல மெல்ல இறங்கிக் கொள்ள, இறுதியாய் கனகம்மாவும் ஆரபியும் இறங்கிக்கொண்டார்கள்.

புன்னாலைக்கட்டுவன் பஸ்தரிப்பிடத்தை நாடி அந்த பஸ்ஸில் ஏறியமர்ந்து கொண்டனர்.

.........................................

மற்றப் பிள்ளைகள் அம்மா, அப்பா, உற்றார் உறவினர் என்று எத்தனையோ பேரோட வந்துநிற்க.

அவளின் இலட்சிய நெருப்பை அடிமனதில் வளர்த்து வளர்த்து- அது சுடர்விடும் நேரத்தில், அதனைக் கண்டு சந்தோசப்படுவதற்கு முடியாமல், ஓய்ந்தபோன ஜீவன்களான அவளது குடும்ப உறவுகள் அவளின் கண்ணுள் விம்பங்களாய் மிளர்ந்தன...!

பிரதான வீதியில் பல்கலைக் கழக வாயில், மற்றும் உட்புறம் என எல்லா இடங்களும் வண்ணக் கோலத்தில் அலங்கரிக்கப்பட்டுக் கிடந்தது. பல்கலை வாயில் தாண்டி ஆரபியும் கனகம்மாவும் காலடி எடுத்து வைத்தபடியிருந்தனர். அந்நேரம், நிகழ்வு ஆரம்பிப்பதற்கான கணமாக இருந்தது. அவளது கையில் கட்டியிருந்த கடிகாரத்தின் முட்கள் அதை உறுதிசெய்தன.

விம்மிப்புடைத்த கண்ணீர்த் திவலைகள் அணைக்கட்டைத் தாண்டி வெளியேறும் நீராய் கண்ணீர்க் குளத்தை விட்டு தரையில் பட்டுச் சிதறின.

பட்டமளிப்பு விழாவுக்கு என அணியப்படும் அந்த ஆடை, தலையை அலங்கரிக்கும் அந்தத் தொப்பி, கைகளை நிறைக்கும் பட்டம் பெற்றுவிட்டதற்கான அத்தாட்சிப் பத்திரம், கழுத்தில் அசைந்தாடும் பதக்கம்... இவையெல்லாம் பல மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆனந்தப்பெருக்கை ஏற்படுத்துவனவாய் ...

"அம்மம்மா.. என்ர அப்பா, அம்மா, சகோதரங்கள் இப்ப நிண்டிருந்தால்..."

வார்தைகள் தொண்டைக் குழிக்குள்ளிருந்து வெளியேறத் துடித்தாலும் ... முடியவில்லை.

.........................................

அழுதேவிட்டாள்.

"பிள்ளை, அழாதையம்மா... இப்ப நீ அழக்கூடாது. இந்தக் கோலத்தில், அதுகள் உன்னை நேரில் பார்க்க கிடைக்காட்டிலும், வானத்தில் இருந்து நிச்சயம் பார்ப்பினம்" என்று ஆரபிக்கு ஆறுதலளிக்க முனைந்த கனகம்மாவின் கண்களும் பொறுப்பதாயில்லை.

அம்மம்மாவை கட்டியணைத்து கதறியழவேண்டும்போல் அவளுக்கு இருந்தது... அவள் கைகள் அம்மம்மாவை இறுகப்பற்றி அணைத்துக்கொண்டது. கனகம்மாவின் கரங்களும் அவளை தழுவிக்கொண்டன. அந்த வயதான தாயின் மனதில் வெற்றிப் பெருமிதம் முட்டி நின்றது.

அம்மம்மாவின் காதருகே அவள் "அம்மம்மா நான் அப்பாவின் ஆசையை நிறைவேற்றி விட்டன்... எல்லாத்துக்கும் நீங்கள்தான் காரணம்...! தனிமரமா நிண்ட என்னை விருட்சமாக்கினது நீங்கள்தான்...!"


நிமிர்ந்தாள். கண்களைத்துடைத்துக்கொண்டாள். மேடையை நோக்கி நகர்ந்தாள். பீடாதிபதிகளினால் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பட்டமளிப்பு நடந்துகொண்டிருந்தது.

பட்டத்தையும் கல்விமகான்களின் ஆசியையும் பெற்றுக் கொண்டு ஆரபி மேடையைவிட்டு இறங்கிக்கொள்கிறாள். தந்தையின் ஆசையை நனவாக்கிவிட்ட திருப்தியில் ...அவள் மனசு சற்று இலேசானது. அடுத்தது... ஒரு வேலையைப் பெற்றுக்கொள்வது..., அம்மம்மாவைக் கண்கலங்காமல் காப்பாற்றுவது. அவளையும் அறியாமல் ஒரு உற்சாகம் அவளிடம் தொற்றிக்கொண்டது.

மல்லாவிக் கஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொதுத்தேர்தலை சூழ்ந்துள்ள இனவாத அரசியல்




இலங்கையில் பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஏழு நாட்கள் மாத்திரமே இருக்கும் நிலையில், பிரதான கட்சிகள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டதோடு, ஒவ்வொரு கட்சியினரும் தங்களுக்கு எதிரானவர்களால் வெளியிடப்பட்ட விஞ்ஞாபனத்தை விமர்சனம் செய்வதையே தமது தேர்தல் பரப்புரையாக மேற்கொண்டு வருகிறார்கள்.

அதுவும் தமிழர் கூட்டமைப்பு தங்கள் விஞ்ஞாபனத்தை வெளியிட்டதோடு தெற்கில் சிங்களக் கட்சிகளின் பார்வை அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தின் பக்கமே திரும்பியிருக்கிறது.

புலிகள் கேட்டதையே கூட்டமைபபும் கேட்கிறது, மீண்டும் பிரிவினை கோரிக்கையையே முன்வைக்கிறார்கள் என்ற குரல் அனேகமாக எல்லா மேடைகளிலும் எதிரொலிக்கிறது எனலாம்.

தமிழர்களது நீண்டகால பாரம்பரியம் கொண்ட மற்றொரு கட்சியான இலங்கை தமிழ்க் காங்கிரஸை முதன்மையான அங்கமாகக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் *இரு தேசம் ஒருநாடு* என்ற கொள்கையும் அவ்வாறே தென்னிலங்கை இனவாதிகளால் தனிநாட்டுக்கான கோரிக்கையாக விமர்சிக்கப்படுகிறது.

தமிழ்த் தரப்பு எதைக்கேட்டாலும் பேரினம் இனவாதத்தை அதில் குழைத்து தமது இலாபத்தை பெருக்கிக் கொண்வதுதான் அன்று தொட்டு இன்று வரைக்கும் நடந்துவருகிறது என்பதையே இங்கே காண்கிறோம்.

தற்போது, தமிழர் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி ஐ.தே கட்சியின் கருத்தானது, தமிழ்தேசிய கூட்டமைப்பு சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலை வலியுறுத்தலாம்.

ஆனால், எமது கட்சி ஒற்றையாட்சிக்குள் அதியுச்ச அதிகாரப் பரவலாக்கலையே வழங்கும் என்று தெரிவித்திருக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சுனில் பிரேம்ஜெயந்த கருத்துத் தெரிவிக்கையில், தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் அதிகாரப் பகிர்வுக்கு செல்ல முடியாது. அதன் மூலம் நாட்டை பிளவுபடுத்தும் செயல் பாட்டை நாம் செய்ய மாட்டோம் என்று ஒரு படி மேலே சென்று தெரிவித்திருந்தார்.

முன்னாள் இராஜதந்திரியும், மகிந்தாவின் இந்நாள் ஆதரவாளருமான தயான் ஜயத்திலக்க வெளியிட்ட ஒரு கருத்தில். 'பிரபாகரன் மீண்டும் அவதாரம் எடுத்தது போலவும், தமிழர் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டங்கள் 'பொங்குதமிழ்' நிகழ்வுபோலவும் இருப்பதாக கூறியுள்ளார்.

இனவாதியான சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்தில், 'நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகளும், பிரிவினைவாதமும் தலைதூக்க விடமாட்டோம்' என்று தெரிவித்துள்ளார்.

மகிந்தாவின் விசுவாசியான உதய கம்மன்பில தெரிவித்த ஒரு கருத்தில், வடக்கில் இருப்பவை நாய் குட்டிகள் அல்ல, அவை புலிக்குட்டிகள் என தெரிவித்துள்ளார்.

இதேபோன்ற கருத்துக்களையே ஜே.வி.பியும், ஏனைய இனவாதக் கட்சிகளும் வெளியிட்டிருந்தன. தமிழர் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் அறிக்கையின்படி, நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலான அதிஉச்ச அதிகாரப் பகிர்வே தீர்வாக அமையும் என்பதே கோரிக்கையாக முன்வைக்கப் பட்டிருந்தது.

பல விடயங்கள் அதில் உள்ளடக்கப் பட்டிருந்தாலும், சமஷ்டி என்ற பதம் அங்கே புகுத்தப்பட்டிருப்பதால் அதை மட்டும் பிடித்துக்கொண்டு, நாட்டுக்குத் தேவை என கருதப்படும் ஏனைய கருத்துக்களை சிங்களத் தலைமைகள் உள்வாங்கத் தவறியுள்ளன என்றே எண்ணத் தோன்றுகிறது.

தமிழீழம், விடுதலைப் புலிகள், மனித உரிமைகள் , போர் குற்றம் போன்ற வார்த்தைகள் சிங்கள இனத்துக்கும், சிங்கள அரசியல்வாதிகளுக்கும் எவ்வளவு சிம்ம சொற்பனமோ, அதேயளவுக்கு சமஷ்டி என்பதும் தந்தை செல்வா காலத்திலிருந்தே சிங்களவர்களால் ஜீரணிக்க முடியாத ஒரு வார்த்தையாகவே பார்க்கப்படுகிறது.

எந்த ஒரு சிங்களக் கட்சியும் தமிழரின் இனப்பிரச்சனைக்கு தீர்வொன்றை தரப்போவதில்லை என்பது எப்போதோ தமிழ் மக்களால் உணரப்பட்ட விடயம். அதி உச்ச ஆயுத பலத்தின் மூலமாகவே பெற முடியாமல் போன உரிமையை, பலமிழந்த நிலையில் போச்சு வார்த்தை மூலம் சிங்கள பெரும் பான்மை இனத்திடம் கேட்டுப் பெறமுடியும் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம்.

சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதற்காக மட்டுமே தமிழருக்கு பாதகமான கருத்துக்களை சிங்கள கட்சிகள் வெளியிடுகின்றன என்று சொல்வதற்கில்லை.

அவர்களது சிந்தனையும் செயலும், என்றுமே தமிழ் மக்களை அடிமைப் படுத்தி வைத்திருப்பதிலேயே குறியாக இருக்கும் என்பது சிங்கள கட்சிகளின் தேர்தல் பரப்புரைகளிலிருந்தே உறுதியாகிறது.

தமிழருக்கு எதிரான கருத்துக்களை தேர்தல் மேடைகளில் வெளிப்படுத்துவதால் தமிழ் மக்கள் கொதிப்படைவார்களே! தமக்கு வாக்களிக்க மாட்டாரகளே...! என்றெல்லாம் சிங்கள அரசியல் வாதிகள் கவலைப்படுவதில்லை.

வாக்குகளையும் கடந்து, தமிழர்களை தலையெடுக்க விடாமல் அடக்கி வைத்திருக்க வேண்டும் என்பதிலேயே சிங்கள இனம் குறியாக இருக்கிறது. தமிழர்களின் எழுச்சியை தடுப்பதற்கு அவர்கள் தமது அரசியல் எதிரிகளுடன் மட்டுமல்ல, எந்தப் பிசாசுடனும் சேரத் தயாராக இருக்கிறார்கள்.

ஐ.தே.கட்சியோ, மகிந்தாவின் கூட்டமைப்போ, எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் தமிழரின் உரிமை சார்ந்த விடயத்தை பொறுத்தவரை சிங்கள ஆட்சியாளர்கள் எப்போதுமே எச்சரிக்கையோடு இருப்பார்கள் என்பதும்,

தமிழரின் ஒற்றுமையை சிதைத்து அவர்களை ஏமாற்றி தம் இனம் சார்ந்த அரசியலை முன்நகர்த்திச் செல்வார்கள் என்பதும், அரச படைகளின் கண்காணிப்பில் எப்போதும் தமிழரை ஆயுத முனையில் வைத்திருப்பார்கள் என்பதும் சிங்கள மக்கள் பெரிதும் நம்பும் ஒரு விடயமாகும்.

அத்தகைய அடக்குமுறையை உறுதியோடு நடைமுறைப்படுத்தும் தரப்புக்கே அவர்களது வாக்குகள் தாராளமாக விழும் என்பதும் கடந்தகால வரலாறாகும். அந்த வகையில் இம்முறையும் தமிழரையும், புலிகளையும் மையப்படுத்திய இனவாதப் பிரச்சாரம் தென்னிலங்கையில் விரிவடைந்துள்ளது.

அதற்கு தலைமை தாங்கும் உந்து சக்தியாக மகிந்தா விளங்குகிறார். அவரது இனவாதக் கருத்துக்களையும் மேவி, சிங்கள வாக்குகளை அறுவடை செய்யும் நோக்கில் ஏனைய சிங்கள அரசியல்வாதிகளும் இனவாதத்தை கக்க ஆரம்பித்துள்ளார்கள்.

> "எந்த ஒரு சிங்களக் கட்சியும் தமிழரின் இனப் பிரச்சனைக்கு தீர வொன்றை தரப்போவதில்லை என்பது எப்போதோ தமிழ் மக்களால் உணரப்பட்ட விடயம். அதி உச்ச ஆயுத பலத்தின் மூலமாகவே பெற முடியாமல் போன உரிமையை, பலமிழந்த நிலையில் போச்சுவார்த்தை மூலம் சிங்கள பெரும் பான்மை இனத்திடம் கேட்டுப் பெறமுடியும் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம்."

ஊழல்வாதிகளை தோற்கடித்து, மாற்றத்தை கொண்டுவந்தவர்களால் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தையோ, இன ஒற்றுமையையோ கொண்டுவர முடியவில்லை என்பதுதான் கடந்த எட்டு மாதங்களில் கண்ட மிச்சம். நாட்டுக்கு அத்தியாவசியமானவற்றை விடுத்து, தமது அரசியல் அதிகார இருப்புக்கான நகர்வுகளை மேற்கொள்வதிலேயே காலம் கடத்தப்பட்டுள்ளது. மாற்றத்துக்கு உதவினார்கள் என்பதால் தமிழர்கள் முகம்கொடுத்த பிரச்சனைகளுக்கு தீர்வாக ஒருசிலவற்றை கிள்ளித் தெளிக்கலாம்.

ஆனால்,தமிழரின் அடிப்படையான பிரச்சினைகள் முன்னைய காலங்களைப்போலவே பின்னோக்கி தள்ளப் பட்டள்ளன. இவர்களை நம்பி இணக்க அரசியலுக்குள் நுளைவது எந்தப்பலனையும் தரப்போவதில்லை.

புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்படும் போர் குற்றம், மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கான சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கையை உட்பட வைப்பதே ஓரளவுக்கேனும் தமிழருக்கான பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தரும். இந்தியாவின் சுட்டுவிரல் அசைவிற்கு நர்த்தனமாடாமல் மக்கள் கோரிக்கைகளுக்கு தலையசைத்து, நேர்மையாகவும் வெளிப்படையாகவும் செயற்படுபவர்கள்தான் தேர்தல் மூலம் தெரிவாக வேண்டும் என்பதே இன்று முக்கியமான விடயம்.

ஏனெனில் எந்தக் கோரிக்கையை முன்வைத்தாலும் சிங்கள அரசாங்கம் அதை ஏறெடுத்தும் பார்க்கப் போவதில்லை.

போராட்டம்தான் தமிழர் வாழ்வு என்றானபின் மக்கள் கோரிக்கைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதும் அவர்களுக்குத் தலைவணங்குவதும் தான் வேட்பாளர்களிடம் நாம் காண வேண்டிய சிறப்பம்சமாக இருக்கவேண்டும் என்பதே பிரதான அம்சம். தமிழ் அத்தகைய அங்கத்தவர்கற்கே முன்னுரிமை கொடுத்து உறுதியோடு செயற்படுவதே பொருத்தமாக இருக்கும்.

*-ரவீந்திரநாதன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான் தீவிரவாதிகளும் அமெரிக்காவின் தந்திரமும்

**வல்லரசுகளின் இராஜதந்திரத்தால், சீரழியும் ஆப்கானிஸ்தானின் இன்றைய நிலவரம் , அதன் வரலாறு எமது தேசத்துக்கும் நல்லதொரு பாடம் புகட்டவல்ல விடயம் எனறு நம்பலாம்.**



தலிபான் தலைவர் முல்லா முஹம்மெட் உமர்

மரணம் எப்போதும் ஒரு துன்பியல் நிகழ்வுதான். ஆனால், மரணத்தைப் பலியிடுவது கேவலமானது. கடந்த வாரம் ஆப்கானிஸ்தான் அரசு முல்லா ஓமர் இறந்துவிட்டாரென அறிவித்தது. ஆப்கானிஸ்தானும் தலிபான்களும் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள நிலையில், குறிப்பாக அடுத்த சுற்றுப் பேச்சுக்கட்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இச் செய்தியை ஆப்கானிஸ்தான் அரசு வெளியிட்டுள்ளது.

முல்லா ஓமரின் மரணத்தை அறிவித்த ஆப்கான் அரசு, அவர் இரண்டு ஆண்டுகள் முன்பே இறந்து விட்டதாகவும் தெரிவித்திருக்கிறது. இரண்டு ஆண்டுகள் முன்பே இறந்த ஒருவரின் மரணத்தை ஆப்கான் அரசு இப்போது அறிவிப்பது ஏன் என்பது முதலாவது கேள்வி. அதைவிட, கடந்த மாதம் ஆப்கான்-தலிபான் பேச்சுக்களை ஆதரிப்பதாக முல்லா ஓமர் தனது ரமழான் வாழ்த்துச் செய்தியிற் குறிப்பிட்டதாகச் சொல்லிய தகவலின் வாய்மை என்ன? அச் செய்திதானே பேச்சுவார்த்தைகளை முன் னகர்த்த உதவியது. இந்நிலையில் இம் மரணச் செய்தியானது பேச்சுவார்த்தை களைப் பாதிக்கும் என ஆப்கான் அரசு அறியாதா? எனின், இது ஏன் நிகழ்ந்தது?

முல்லா ஓமர், இப்போது இறந்தாரா அல்லது எங்களுக்குச் சொல்லப்படுவது போல இரண்டாண்டுகள் முன்னர் பாகிஸ்தானின் கராச்சி நகர வைத்தியசாலையிற் காலமானரா என்பதல்ல பிரச்சினை. மரணங்கள் இயற்கையானவை. ஆனால், இந்த மரணத்தை இப்போது பலியிடும் காரணங்கள் முக்கியமானவை. ஒசாமா பின் லேடனின் மரணம் கொண்டாடப்பட்ட மரணம். முல்லா ஓமரது பலியிடப்பட்ட மரணம்.

இஸ்லாமிய போராட்ட இயக்கங்களில் அல் கைடாவை அடுத்து மிக அறியப்பட்ட இயக்கமாகத் தலிபான் உள்ளது. அவ்வரிசையில் அண்மைய புதிய வரவு ஐ.எஸ்.ஐ.எஸ். 2001இல் அமெரிக்க வர்த்தக மையக் கட்டடத்தின் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக தலிபான்களுக்கெதிராக அமெரிக்கா தொடுத்த போர், தலிபான்களை உலகறியச் செய்தது. அதனால், வெளித் தோற்றத்துக்கு, ஏதோ சில முட்டாள் முல்லாக்கள்தான் இன்று உலகம் முழுவதும் வெடிக்கும் பயங்கரவாதங்களுக்குக் காரணமெனப் பலர் எண்ணியிருந்தனர். ஆனால், தலிபான்களின் கதை வேறு.

தலிபான்களின் தோற்றம் அமெரிக்க-சோவியத் கெடுபிடிப் போரின் விளைவுகளில் ஒன்று. கெடுபிடிப் போர் நிலவிய காலத்தில், 1979இல் ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் தன் அரசியல் இராணுவச் செல்வாக்கை நிலைநிறுத்த முற்பட்டது. அதன் போக்கில் ஏற்பட்ட வெகுசன எதிர்ப்பின் பின்னணியில் ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்து, அங்கிருந்த சோவியத் சார்பான ஆட்சியைக் கவிழ்த்துத் தனக்கு உவப்பான இன்னொரு ஆட்சியை நிறுவியது. இப்பின்னணியில் ஏலவே அங்கு ஊடுருவியிருந்த அமெரிக்கா, சோவியத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து சோவியத் யூனியனை அங்கிருந்து விரட்டும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியது. 1989இல் சோவியத் யூனியன் அவமானமான தோல்வ யுடன் வெளியேறும் வரை அமெரிக்க முயற்சிகள் ஓயவில்லை.

ஆப்கானிஸ்தானை நாத்திகர்களும் சாத்தானின் சீடர்களுமான கம்யூனிஸ்ட்டுகள் ஆக்கிரமித்திருப்பதாக பிரசாரத்தை மேற்கொண்ட அமெரிக்கா, அவர்களை விரட்டும் புனிதப் போரைத் தொடங்குமாறு இஸ்லாமிய மதவாதிகளை அணிதிரட்டியது. இன்று, அமெரிக்காவை எதிர்த்துப் புனிதப் போர் நடத்தும் பயங்கரவாதிகள் எல்லோரும் இப்படித்தான் உருவாகினர். முஜாகிதீன்களுக்கான ஆயுத உதவி முதல் பணம் வரை அனைத்தும் அமெரிக்காவிலிருந்து வந்தன. மதத்தைக் காப்பாற்றுவதற்காக இஸ்லாமிய நாடுகளிலிருந்து போராளிகள் இறக்குமதியாயினர். பின்னாளில் அல் கைய்தாவை ஆரம்பித்த ஒசாமா பின் லேடன், இவ்வாறே சவூதி அரேபியாவிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு இடம்பெயர்ந்தார்.

இதற்கான மையமாகப் பாகிஸ்தான் பயன்பட்டது. பாகிஸ்தானின் சகல மாநிலங்களிலும் அமெரிக்க நிதி உதவியோடு நூற்றுக்கணக்கான மதரசாக்கள் நிறுவப்பட்டன. இந்த மதரசாக்களின் மூலம் ஆயிரக்கணக்கான முஜாஹிதீன்கள் உருவாக்கப்பட்டு ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டனர். பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., அமெரிக்காவின் ஆணைக்கேற்ப இந்த வேலைகளை ஒருங்கிணைத்தது. இந்த அடியாள் வேலைக்காகவே பாகிஸ்தானிய இராணுவ சர்வாதிகார ஆட்சிகளை அமெரிக்கா முழு மனதுடன் ஆதரித்தது. ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகள் விலகியதும் அமெரிக்க ஆசியுடன் தலிபான்கள் களத்தில் இறங்கினர். இத்தகைய முட்டாள் மதவாதிகள், ஆப்கானிஸ்தானில் ஆட்சியிலிருப்பது தனக்குப் பலவிதங்களில் உதவுமென எதிர்பார்த்தே தலிபான்களை அமெரிக்கா ஆதரித்தது.

1996 முதல் 2001 வரை ஆப்கானிஸ்தானை தலிபான்கள் ஆண்டார்கள். அவர்களின் தலைவராக முல்லா ஓமர் இருந்தார். உலக நாடுகள், தலிபான் ஆட்சியை அங்கிகரியாத போதும் அமெரிக்காவின் கூட்டாளிகளான சவுதி அரேபியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அங்கிகரித்தன. இயற்கை எரிவாயுக் குழாய் அமைப்பதற்கான பேச்சுக்களுக்காகத் தலிபான் பிரதிநிதிகளை அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள் அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றன.

ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்திருந்தவரை அமெரிக்கா உருவாக்கி வளர்த்த இஸ்லாமிய மதவாதம், அமெரிக்காவை இரட்சகனாகக் கருதி வந்தது. சோவியத் யூனியன் வெளியேறிய பிறகு இருவரும் தத்தமது நலன் கருதிப் பிரியும் சூழ்நிலை வந்தது. முதல் வளைகுடாப் போரும், இஸ்ரேலின் அடாவடித் தனங்களும் பொதுவில் முஸ்லிம்களுக்குச் சினமூட்டின. இப் பின்னணியிலேயே பின் லேடனின் அல் கைய்தா, தனது முன்னாள் எஜமானை எதிரியாக அறிவித்தது. தலிபான்கள் அதற்கு ஆதரவுக் கரம் நீட்டினர்.

கடந்த 14 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் வெல்லமுடியாத ஒரு போரிற் சிக்கியுள்ள அமெரிக்கா, அங்கிருந்து மெதுமெதுவாக நழுவ விரும்புகிறது. அதன்படியே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இரண்டாண்டுகள் முன்பு படைக் குறைப்பு நடவடிக்கைகளை அறிவித்தார். இவ்விடத்துக், "கடைசிப் பயங்கரவாதி அழிக்கப்படும் வரை பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தம் தொடரும" எனும் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் சூளுரை நினைவுகூரத்தக்கது. அவமானமான வெளியேற்றத்தைக் கௌரவத்துடன் நிகழ்த்த அமெரிக்கா விரும்புகிறது. வெளித் தோற்றத்துக்கு "அமெரிக்கா என்றும் பயங்கரவாதிகளுடன் பேசாது" என்று வீராப்புப் பேசினாலும், தலிபான்களுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறது. அதன் தொடர்ச்சியே தற்போது ஆப்கான் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையில் நிகழும் பேச்சுவார்த்தைகளாம். அதற்கு வாய்ப்பாக, குவான்டனாமோவில் தான் சிறைவைத்திருந்த ஐந்து தலிபான் தலைவர்களை அமெரிக்கா ஆரவாரமின்றி விடுவித்துள்ளது. அவர்களுக்கான வசதிகளைக் கட்டார் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே முல்லா ஓமரின் மரணத்தை ஆப்கான் அரசு அறிவிக்கிறது. அதை உறுதிப்படுத்திய தலிபான்கள் புதிய தலைவராகத் தமது இரண்டாம் நிலைத் தலைவராயிருந்த முல்லா மன்சூரைத் தலைவராக அறிவித்த நிலையிற், பேச்சுக்கள் பிற்போடப்பட்டுள்ளன. ஆப்கான் அரசு இரண்டாண்டுகளுக்கு முன்பே முல்லா ஓமர் இறந்துவிட்டார் என்ற செய்தியை வெளியிட்டது. இரண்டாண்டுகட்கு முன் இறந்தவரைப் பற்றிய தகவலைப் பேச்சுவார்த்தைகட்கு இரண்டு நாட்கள் முன்பாக வெளியிடும் தேவை என்ன என்பது முக்கியமானது. இதை இருவிதமாக விளங்கலாம். முதலாவதாக, அமெரிக்கப் படைகள் வெளியேறுவதை ஆப்கான் ஜனாதிபதி விரும்பவில்லை. அமெரிக்கப் படைகளின் வெளியேற்றம் இப்போது ஆப்கானிஸ்தானின் பல பகுதிகளைக் கட்டுப்பாட்டிற் கொண்டுள்ள தலிபான்களுக்கே சாதகமாகும்.

முடிவில் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் ஆப்கானிஸ்தான் போக நேரும். எனவே, அவர் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதன் மூலம் அமெரிக்கப் பிரசன்னத்தை தொடர முயல்கிறார். மாறாகத், தலைவரின் சாவை அறிவிப்பதன் மூலம் தலிபான்களிடையே குழப்பத்தை உருவாக்கிப் பேச்சுவார்த்தைகளில் வலுவான நிலையை எட்டும் முயற்சியாகவும் இதை நோக்கலாம்.

ஆப்கானிஸ்தான்மீதான உலகின் கவனம உலக அமைதி பற்றியதல்ல. ஆப்கானிஸ்தான்- பூகோளரீதியான அமைவிடம் பற்றியது. கிழக்கிலும் தெற்கிலும் பாகிஸ்தான், மேற்கே ஈரான், வடமேற்கில் துர்க்மெனிஸ்தான், வடக்கே உஸ்பெக்கிஸ்தான், தஜிகிஸ்தான், வடகிழக்கில் சீனாவின் சின்ஜியாங் மாநிலம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட நாடு ஆப்கானிஸதான்.

ஆப்கானிஸ்தானில் பின் லேடனைத் தேடி அமெரிக்க இராணுவம் படையெடுக்க முன்பே, மத்திய-ஆசிய நாடுகளின் இயற்கை வளங்களைக் - குறிப்பாக எண்ணெய், எரிவாயுவைத் தேடி அமெரிக்க நிறுவனங்கள் படையெடுக்கத் தொடங்கிவிட்டன. 2000 மைல் நீண்டு அகன்ற ஸ்ற்றெப்பிஸ் புல்வெளிகளையும் பனிபடர்ந்த நெடிய மலைத் தொடர்களையும் கொண்ட மத்திய-ஆசிய நாடுகள் அனைத்திலும் இயற்கை வளங்கள் நிறைந்துள்ளன. சோவியத் யூனியனின் உடைவு, புதிதாகத் தோன்றிய நாடுகளிடமிருந்தும் மத்திய-ஆசிய நாடுகளிலிருந்தும் எரிபொருள் வளங்களைக் குறைந்த விலைக்குப் பெறுவதை இயலுமாக்கியது. அதிற் சிக்கல் ஏதென்றால் எண்ணெயையும் எரிவாயுவையும் கொண்டு செல்லும் குழாய்களெல்லாம் ரஷ்யாவினூடாகவே செல்கின்றன. இதை அமெரிக்காவோ அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளோ விரும்பவில்லை.

இதற்குத் பதிலீடாகக் கஸ்பியன் கடலுகுக் குறுக்கே எண்ணெய்க் குழாய் அமைப்பதினும் தூரம் குறைந்த, அரைவாசிச் செலவு மட்டுமே கொள்ளக்கூடிய பாதை ஆப்கான் - பாகிஸ்தான்-அரபிக் கடல் எனும் குழாய்ப் பாதையாகும். அரபிக் கடலிலிருந்து இந்தியாவையும் பிற ஆசிய நாடுகளையும், வளைகுடாவையும் ஐரோப்பாவையும் எளிதாக அடைய முடியும். மேலும் பாகிஸ்தானின் பாலைவனப் பகுதிகளில் கணிசமான எரிவாயு உள்ளது. தெற்காசியா, சீனா, மத்திய ஆசியா, வளைகுடா நாடுகள் என ஆசியா முழுவதையும் கட்டுப்படுத்தற்கு ஏற்ற இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் ஆப்கானிஸ்தான் அமைந்துள்ளமை அதைக் குறிவைக்க இன்னொரு காரணமாகும்.

முல்லா ஓமரின் மரணத்தைப் பலியிடுகிற அமெரிக்க வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் இப்போதைய நவீன ஜிகாதிகளுடன் ஒப்பிடும்போது முல்லா ஓமர் மிதவாதி என்றும் அதீத வன்முறையை விரும்பாதவர் என்றும் எழுதுகின்றன. முல்லா ஓமர், ஆப்கானிஸ்தானில் மனித உரிமைகட்கெதிரான ஓர் ஆட்சியை நடத்திய போதும் பர்மியன் புத்தர் சிலைகளைச் சரித்தபோதும் அமெரிக்கா இரகசியமாக அபின் கொள்வனவு செய்ததை இங்கு நினைவு கூரலாம்.

இன்று அதிதீவிர இஸ்லாமியக் குழுக்களின் எழுச்சியால் அமெரிக்கா திக்குமுக்காடும் நிலையில் முல்லா ஓமரை மிதவாதியென்பதில் ஆச்சரியமில்லை. மறுபுறம் பின் லேடன் போல் அமெரிக்கக் கரங்களில் இறுதிவரை சிக்காது அமெரிக்கா வலைவீசித் தேடிய ஒருவரின் மரணத்தைப் பலியிடுவதுதான் அமெரிக்கா கொண்டாடக் கூடிய வெற்றி.

-மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்
திரைப்படம்: மகாதேவி
பாடியவர்: ரி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன், டி.கே. ராமமூர்த்தி




குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா - இது
கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும் திருட்டு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா இதயம் திருந்த மருந்து சொல்லடா
இருக்கும் அறிவை மடமை மூடிய இருட்டு உலகமடா - வாழ்வில்
எந்த நேரமும் சண்டை ஓயாத முரட்டு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா இதயம் திருந்த மருந்து சொல்லடா
குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா - இது
கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும் திருட்டு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா இதயம் திருந்த மருந்து சொல்லடா
விளையும் பயிரை வளரும் கொடியை வேருடன் அறுத்து விளையாடும்
ஓ... ஓ.. ஓ..
விளையும் பயிரை வளரும் கொடியை வேருடன் அறுத்து விளையாடும் - மனம்
வெந்திடும் தோட்டக்காரனிடம்
மிரட்டல்வார்த்தைகளாடும்பலவரட்டுகீதமும்பாடும்
விதவிதமான பொய்களை வைத்துப் புரட்டும் உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா இதயம் திருந்த மருந்து சொல்லடா
அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு அகந்தைக் குரங்கு தாவும் - அதன்
அழகைக் குலைக்க மேவும்
கொம்பும் ஒடிந்து கொடியும் குலைந்து குரங்கும் விழுந்து சாகும்
கொம்பும் ஒடிந்து கொடியும் குலைந்து குரங்கும் விழுந்து சாகும் - சிலர்
குணமும் இது போல் குறுகிப் போகும் கிறுக்கு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா இதயம் திருந்த மருந்து சொல்லடா
குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா - இது
கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும் திருட்டு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா இதயம் திருந்த மருந்து சொல்லடா
ஆ.. ஆஆஆஆஆஆ... ஆஆஆஆஆ

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

சொரூபன்-நீர்வேலி, எம்.ருஷாந்தன், கமல், செல்வா, நிஷான், பிந்துஜன், தர்ஷன், சுதர்ஷன், ரூபி, புவனேஷ்வரி, சிந்து, கபிஷா -அரியாலை, சுஜித்தா-சங்கானை, தூரியா- திருநெல்வேலி, அம்பிகா-கைதடி, எஸ்.இன்பா, அனுஷா- கிளிநொச்சி திருநகர், தீபா- இந்தியா.

*அன்பு வாசகர்களே!*


காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1543**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## ஈழத்து சினிமா

# பூம்புகார் குறும்பட விமர்சனம்



போர் ஓய்வுக்கு வந்தபின்னும் யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்படாமல் கவனிப்பார் அற்று அடிப்படை வசதிகள் இன்றி மிகவெறுமையாகவிருக்கும் கிராமம் கிழக்கரியாலையில் உள்ள பூம்புகார் கிராமம். தனிமையுடன் கலந்த தவிப்புடன் அல்லலுற்று வாழும் இம் மக்களின் யதார்த்த நடைமுறை பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் தனது குறும்படம் மூலம் வெளிப்படுத்த முயன்றுள்ளார் இயக்குநர் விமல்ராஜ்.

மோட்டார் சைக்கிளில் வரும் இளைஞர் ஒருவர் பலரிடம் பவ்யமாக பூம்புகார் செல்வதற்கான வழியை விசாரிப்பதன் காட்சிப்படிமத்துடன்குறும்படம் ஆரம்பிக்கிறது. பலருடன் பூம்புகாருக்குச் செல்லும் வழிகளை விசாரித்தும் சரியான வழியை கண்டுபிடிக்க முடியாமல் தவிக்கின்றார்.

பூம்புகாரில் வசிக்கும் சிறுவன் தன் தந்தையுடன் யாழ்ப்பாண நகரத்தில் இருக்கும் தன் மாமியின் வீட்டுக்குப் புறப்படுகின்றான். முதன்முறையாக அவன் வாழ்ந்த கிராமத்தில் இருந்து நகரம் நோக்கிச் செல்கின்றான். நகரம் என்றால் எப்படி இருக்கும் என்ற ஆரம்ப கேள்வியுடனும் ஆர்வம் சுடர்விடும் கண்களுடனும் மிரச்சியுடன் தந்தையின் அரவணைப்பில், அப்பாவித்தனம் மிக்க தந்தையின் விடைகளுடன் யாழ்.நகரம் நோக்கி குன்றுகுழிகள் சிதறியிருக்கும் வீதியில் கவர்மெண்ட் C.T.B பேருந்தில் பயணிக்கின்றான்.

நகரத்துக்கு வரும் அவனுக்கு எக்கச்சக்கமான கேள்விகள் முளைக்கின்றன. நகரத்தில் உள்ளவர்களின் வாழ்க்கைமுறை அவனுக்கு சிலிர்ப்புடன் கூடிய மகத்துவமான பெரும் வியப்பைத் தருகின்றன. அவன் காணும் சாதாரண மின்விளக்கு, தொலைக்காட்சி அனைத்தும் பற்பல விசித்திர கேள்விகளை அவனுக்குள் ஏற்படுத்துகின்றது. காரணம் அவனின் கிராமத்தில் காணமுடியாதவை அவை. அவை தொடர்பான அடிப்படை புரிதல்களை உருவாக்கிக்கொள்ள தந்தையை நோக்கி தனது கேள்விகளை ஆழமாகத் தொடுக்கின்றான். நகரத்தில் பெரும்பாலானவர்கள் உபயோகிக்கும் எந்த உபகரணங்களும் மின்சாரத்தில் இயங்கும் என்பதை அறிந்து மின்சாரம் என்றால் என்ன என்பதனை விளங்கிக்கொள்ள முயல தந்தையிடம் கேட்கிறான். கடற்றொழிலில் ஈடுபடும் எளிமையான தந்தையும் பதில் சொல்ல முடியாமல் திணறுகின்றார்.

மீண்டும் கிராமத்துக்கு வரும் சிறுவனுக்கு நகரம் தந்த அனுபவங்கள் பெரும் வியப்பைத் தந்துகொண்டிருகின்றது. தனது கிராமத்துக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என்பதனை அவன் ஏக்கங்கள், தனிமையுடனும் கண்ணீருடனும் வெளிப்படுகின்றன. இந்த நேரத்தில் ஒருநாள் அச்சிறுவன் தவறுதலாக திடீரென கிணற்றில் விழுந்துவிடுகிறான். ஊரில் வைத்தியசாலைகள் இல்லை. பல மைல்கள் தள்ளியிருக்கும் யாழ்ப்பாண நகரத்திற்கே கொண்டு செல்லவேண்டிய கட்டாயம். அதன்பின் என்னவாகின்றது என்பதே மிகுதிக் கதை.

பூம்புகார் மக்களின் வாழ்வியலை இயக்குநர் உள்ளடக்கம் சார்ந்து நுட்பமாக குறும்படமாக்கியுள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. ஒளிப்பதிவு, எடிட்டிங் கண்களை தொந்தரவு செய்யும் வகையில் மிக அபத்தமாகவுள்ளது. இருந்தபோதிலும் காட்சி படிமங்களில் நகர்வு பார்வையாளனை படத்துடன் ஒன்றவைக்க எத்தனிக்கின்றது.

பூம்புகார் கிராமத்துக்கு வழிகேட்டுக்கும்போது பதில்கூறுபவர்களின் நடிப்பு மிகசெயற்கை. அச்சந்தர்ப்பத்தில் திரைக்கதையில் எழுதப்பட்ட வாசகங்களும் மிக செயற்கைத்தனத்துடன் உள்ளது. சிறுவனாக நடித்தவரின் நடிப்பும் தந்தையின் நடிப்பும் இயல்பாக இருகின்றபோதிலும் சில இடங்களில் வசன பிரயோகமுறையில் செயற்கைத்தனங்கள் கொண்ட நடிப்பாக மிளிர்கின்றது. அலுவலகத்தில் மின்விசிறியின் சுழற்சிகளின் ஊடாக ஒளிப்படம் பிடிக்கப்பட்ட காட்சிகள் குறிப்பிடத்தக்க ஒளிப்பதிவுத்துண்டுகள். இறுதியில் அரிக்கன் லாம்பை துடைத்து வீட்டில் வைக்கும் குறியீடுகள் நன்று. இவ் இருபது நிமிட பூம்புகார் குறும்படத்தினூடக கவனிக்க வைக்கின்றார் இயக்குநர் விமல்ராஜ்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

## ஈழத்துக் கவிதைகள்

### காளான்தேசம்

நிழலும் மழையும் முலைப்பாலாய்க்
குடித்து வளரும் நிலம்சூழ்தேசத்தே
நாளுக்கு நாள் நசிந்து போகும்
காளான் வீடுகளில் என் குடியிருப்பு.
மழை தரை விட்டுவிட்டுத் தட்டும்
காற்றுத்தடம் பார்த்து நடக்கும்
குடைக்காளான் மூக்கு.
அற்றதில் பிறக்கும் தேகம்
கூரையாய்க் கூம்பிச் சடைக்கும்
கொண்டைத்தலை
இற்றுச் சமாதி பட்ட மரம் சுற்றிச் சுற்றி
வட்டத்துளிர்ப்பு
செத்தவுடல் கொள்ளியிட்டு எரித்துவந்து
மனைவி சட்டைத்துணி விலக்கிச் சரசமிட்டு
ஒட்டித் தழுவு
சுடலைவாழ் வெட்டியின் ஞானக்கற்றைவீச்சு.
குடை பிடித்து வழுகி நனையும் விம்மி
மீன்பூச்சுவாசம்
விரியும் சுருங்கும் வளையும் வளரும்.
கம்பளிப்பூச்சிகளின் காதலோட்டங்கள்
கால்களைச் சுற்றிச் சுற்றி ஊறிச் சுனைக்கும்.
இந்த இருப்பில் பிறக்கும் நம்பிக்கை.
மழை மறையப் பிடிக்கும் சோகை
படியும் பசலை ஒசியும் உடல்
காயும் கசங்கி உதிர்த்திறக்கும் இரப்பை.
சுவாசப்புற்றுமானுடன் வாழ்க்கை.
பட்டமரத்துள் ஊரும் நிழற்படிமம்
கொட்டும் காளான் துகள் தேசம்
ஒருநாள் காளான் தேசம் விரிந்ததெம்
உலகாய்.
பட்டமரங்கள் ஆகின வாழ்களங்கள்.
நிழலும் மழையும் தேடி நிமிர்வதாய் எம்
வாழ்க்கை
செத்தமரம் கண்ட தேசமெல்லாம்
செவ்விச் சிறக்கும் எம்பரம்பலின் சிறகு.
விருட்சப்பசுமை இளமை வற்றிப் பட்டாலும்
சேதமில்லை
தன் பிருஷ்டம் ஒருபோகம் ஒட்டி வாழும்
உயிரப்புக்கேனும்
உடல் உறுத்து வண்டு செத்த மாவற்றல்
தூளாய்ப்
பெருகிப் போகாதிருக்க விட்டுவிடா யாசிப்போடு
காளான் தேசத்துக் குடைகள்
விரியும் சுருங்கும் வளையும் வளரும் மடியும்
மடிதலும் மறைதலும் வேறு வேறு
இற்றலும் இடைக்கிடைத் தோன்றலும் போலே
மீளக் கனியும்.
மழையும் கூட நிழல் நீளச் சொட்டும் நிலம்.

**சித்தார்த்த "சே" குவேரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது என்ன மாயம்

திரை விமர்சனம்



காதலும் காதல் நிமித்தமும் தான் இது என்ன மாயம்.. படித்த படிப்புக்கு வேலையைச் செய்யாமல் நண்பர்கள் இணைந்து இதுதான் எங்கள் வாழ்க்கை இலட்சியம் என நாடகம் போட்டு பெரிய ஆளாக வரலாம் என நினைக்கிறார்கள். ஆனால் வழக்கம் போல் அரங்கம் ஈ ஆடுகிறது.

வீட்டிலும் செம டோஸ் விழ விக்ரம் பிரபு அவரின் நண்பர்கள் குழு சூழ பிளான் சேஞ்ச். நாடகத்தை ரியல் வாழ்க்கையிலேயே போடலாமே என ஒரு தலைக் காதல்களை நாடகம் போட்டு சேர்த்து வைக்கும் படலம் ஆரம்பிக்கிறது. அப்போதுதான் வருகிறார், இன்னொரு நாயகன் நவ்தீப். காதலை சேர்த்து வையுங்கள் என சொல்லிக்கொண்டு. பெண் யாரென தெரிந்தவுடன் விக்ரம் பிரபுவிடம் தடுமாற்றம்.

அதே தான் கல்லூரி வாழ்க்கை கீர்த்தி சுரேஷ் லவ், பிரேக் அப் என நாம் நினைத்த அப்பட்டமான அதே கதை. இருப்பினும் மிகப்பெரிய தொழிலதிபர் நவ்தீப்பின் பணம், இவர்களின் நிலை என நண்பர்கள் வற்புறுத்த ஒப்புக் கொள்கிறார் விக்ரம் பிரபு. எனினும் பழைய காதல் விடுமா. காதலின் சக்தியை கொஞ்சம் எதிர்பாராத திருப்ப மாக எண்ட் கார்டு போடுகிறார்கள்

விக்ரம் பிரபு, கல்லூரி மாணவர், பின் ஒரு டீம் லீடர் என பக்கா பொருத்தம், நடுவில் ஒரு விதமான சகுனி கரக்டராகவே மாறிவிடும் போது கண்களிலேயே பொறாமை, சோகம் என வெளிப்படுத்தியி ருக்கிறார். கீர்த்திசுரேஷ் அழகாக இருக்கிறார், தமிழுக்கேத்த பப்ளி பொண்ணு. உணர்வுகளை நன்றாக வெளிப்படுத்தவும் செய்கிறார். நான் டுபாய் போகக் கூடாதுன்னு நீதான் பிளான் போட்டியா என கேட்டுவிட்டு வைத்தியசாலையில் சின்னதாக சிரிக்கும் காட்சியில் , என்ன பொண்ணுடா மொமெண்ட்.

அப்பட்டமான பணக்கார லுக்,ஹீரோயினை விட்டுக் கொடுக்கும் இரண்டாம் ஹீரோ என நவ்தீப் செம பொருத்தம். ஆனால் காதலே இல்லாத பொண்ணுக்காக காசை இலட்ச இலட்சமாக வாரி இறைப்ப தெல்லம் கொஞ்சம் அதிகம். இந்த காதலை உன் வாயால சொல்ல வைக்கணும்னு நினைச்சு நாங்க போட்ட பிளான் என நவ்தீப் கூறும் போது, பரிதாபமாகவே தெரிகிறார்.

நாசர் , அம்பிகா, ஆர்.ஜே பாலாஜி, இப்படி படம் முழுக்க நடிகர்கள், எனினும் திரைக்கதைக்கு உதவ வில்லை. சில இடங்களில் ஆர்.ஜே. பாலாஜி வசனங்கள் இந்த இடத்தில் இது தேவையா எனக் கேட்கவும் செய்து விடுகிறது. இயக்குநர் விஜய் என்ன தான் ஆச்சு உங்களுக்கு கதை கொஞ்சம் மெதுவாக போகலாம் .அதுக்காக இடைவேளை விடுங்களேன் என வாய் திறந்து கேட்டே விடும் அளவிற்கா மெதுவான கதை ஓட்டம்.

காதலுக்காக நாடகம் போடும் உங்கள் லோகேஷன்களில் அதெப்படி யாருமே வராமல் செட்டப்பாகவே இருக்கும். ஒரு பார்க்கில் விக்ரம் பிரபு குழு செட்டப் செய்யும் ஆட்களை தவிர வேறு யாரும் வராமல் இருப்பது ஓகே. சென்னையில் பல பூங்காங்களை அப்படிப் பார்க்க முடியும். ஆனால் அவ்வளவு பெரிய பீச்சில் சாத்தியமா. இன்னொரு காதலுக்காக நாடகம் போடுவது அதில் சொதப்புவது பின் தானே லவ்வி எஸ்! ஐ லவ் திஸ் இடியட் இதெல்லாம் இருபது வருடப் பழசு..

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜய் வித விதமாக செய்து விட்டார் முதல் பாதி தேமே என செல்கிறது இதில் நான்கு பாடல்கள் வேறு. மீண்டும் மீண்டும் ஒரே விதமான காட்சிகள், பெரிதாக காட்சிகளுக்கு மெனக்கெடவில்லை.

'இரவாக நீ' , சுற்றும் பூமி பாடல்கள் சுமார் ரகம். மற்ற பாடல்கள் ஈர்க்கவில்லை. பின்னணி இசை காதல் காட்சிகளில் அருமை. என்றாலும் ஹையோ ஜி.வி . பிரகாஷ் இசையாச்சே என மண்டையில் உதித்தவுடன் அடக்கடவுளே! என சொல்ல வைக்கிறது. பாடல் காட்சிகளில் நிரவ் ஷாவின் ஒளிப்பதிவு ரசிக்கலாம்.

காட்சிக்கு காட்சி தெரிந்துவிடும் படியான கதை. மெதுவான திரைக்கதை ஓட்டம், காதலர்களுக்காக போடும் நாடகம் , எல்லாவற்றிற்கும் மேல் மிகச் சிறிய கதைக் கரு என 'இது என்ன மாயம்' கொஞ்சம் மனதை கவர மறந்து மாயமாய்த்தான் போகிறது.


3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில் உங்கள் தெரிவுப்படி மீள்செலுத்தலாம்
ரூபா.5மில்லியன்வரை பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே
SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்



தங்க பெண்டன்ட்

100ஐ வெற்றி பெறுங்கள்
எல் பீ பினான்ஸ் தங்க நகை அடகு சேவை
உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிகூடிய முற்பணம் எங்களிடமிருந்தே
ஒவ்வொரு வாரமும் நடைபெறும் சீட்டிழுப்பில் 7 பேர் வெற்றிபெறும் வாய்ப்பு
L B FINANCE GOLD LOANS
WPGT 4392
ஒகஸ்ட் 01 முதல் ஒக்டோபர் 31 வரை எல். பீ. பினான்ஸ் மூலம் தங்க நகை அடகு வைப்பவர்கள் அனைவரும் சீட்டிழுப்புக்கு உள்வாங்கப்படுவர் * நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
வார நாட்கள் மற்றும் சனிக்கிழமைகளில் பி. ப. 6. மணி வரை திறந்திருக்கும்.
L B FINANCE
எல் பி பினான்ஸ் பீ. எல். சி
275/75, பேராசியர் ஸ்டேன்லி விஜேசுந்தர, கொழும்பு - 07
Tel: 011 4 521 000 | www.lbfinance.com
Call: 0771 811 638, 0773 384 981
0778 065 387


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த மீண்டும் ஆட்சிபீடத்திலேற சீனாவும் கடவுளை வேண்டுகிறது

சீனா ஒருபோதும் இலங்கையைக் கைவிடப் போவதில்லை. இந்திய மாக்கடலிலும் தென்னாசியாவிலும் சீனா மிகப் பாரிய மூலோபாய நலனைக் கொண்டுள்ளது. இந்திய மாக்கடலில் சீனாவின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் இலங்கை மையமாக விளங்குகிறது.

இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மத்தியிலும் தேர்தல் பரப்புரை சூடுபிடித்துள்ளது. பொதுத்தேர்தலின் மூலம், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிப் பீடத்தில் ஏறவேண்டும் என சீனாவும் கடவுளை வேண்டுகிறது.

ஒகஸ்ட் 17, 2015 அன்று இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று நாட்டின் பிரதமராகப் பதவியேற்க வேண்டும் என்பது சீனாவின் விருப்பாகும்.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதியாக, மகிந்தவைப் புறக்கணித்துவிட்டு, மைத்திரிபாலசிறிசேனவை இலங்கையர்கள் தேர்ந்தெடுத்த போது, சீனாவின் உறவு இடைநிறுத்தப்பட்டன. இதனால் சீனா அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாக ஆட்சி செய்த காலத்தில் சீனாவுடன் மேற்கொள்ளப்பட்ட 1.4 பில்லியன் பெறுமதியான கொழும்புத் துறைமுக நகரத் திட்டமானது மைத்திரி அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டது.

இத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல் மோசடிகளே இதற்கான காரணமாகும். எவ்வாறெனினும், சீனாவின் மிகப் பாரிய திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டால் சீனா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் பாதகம் ஏற்படும் என்பதை இவ்விரண்டும் புரிந்து கொள்ள முயற்சித்தன.

அதாவது இலங்கை சீனாவிடமிருந்து பெரும் தொகையான கடனைப் பெற்றுள்ளது. அத்துடன் சீனாவும் இலங்கையும அதிக முதலீட்டை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி மைததிரிபால சிறிசேனவும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் சீனாவிற்கான தமது உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டனர். இதன்மூலம் இலங்கையுடனான முறிந்து போன உறவு மீளவும் கட்டியெழுப்பப்படும் என சீனா நம்பிக்கை கொண்டது.

இதன் பின்னர், இலங்கையில் தனது செல்வாக்கைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள முடியும் என சீனா நம்பியது. சீனாவிற்கு ஆதரவு வழங்கும் மகிந்த ராஜபக்ச மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சீனாவின் சில திட்டங்கள் மீண்டும் இலங்கையில் தொடரப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இலங்கை மீண்டும் சீனாவுடனான தனது உறவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவதையே சுட்டிக் காட்டுகின்றது.

சீனாவின் நிதியுதவியுடன் மாத்தறை-அம்பாந்தோட்டை அதி வேகப் பாதை அமைக்கும் திட்டம் கடந்த மாதம் 07 ஆம் திகதி ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டமானது காலியின் ஊடாக கொழும்பு - மாத்தறை அதி வேகப் பாதையுடன் தொடர்பை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டதாகும்.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் உள்நாட்டு மக்கள் பலர் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொணடுள்ளதாகவும் இதனால் தாம் திருப்தி கொள்வதாகவும் கொழும்பிற்கான சீனத் தூதுவர் நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.



காலி- மாத்தறை அதிவேகப் பாதைத் திட்டத்திற்காக சீனாவின் எக்சிம் வங்கி 180 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இதே போன்று அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தின் இரண்டாம் கட்டமும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் ஒரே தடவையில் 12 கப்பல்கள் தரித்து வைக்க முடியும். தற்போது இரண்டு கப்பல்கள் மட்டுமே தரித்து நிறுத்த முடிவதாக கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களை நோக்கில் சீன-இலங்கை ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் இலங்கையின் சிறப்புப் படைகள் மற்றும் படையணிகள் 'பட்டுப்பாதை 2015" என்கின்ற மூன்று வார பயிற்சித் திட்டத்தைத் பூர்த்தி செய்துள்ளன. இதன்மூலம் இவ்விரு நாட்டு இராணுவ வீரர்களின கூட்டுச் சிறப்பு நடவடிக்கைகள் மேலும் முன்னேற்றப்படும்.

கடந்த மாதம், மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் சீன இராணுவக் குழு ஒன்று இலங்கைக்குப் பயணம் செய்திருந்தது. இந்தக் குழுவினர் இலங்கையின் தியத்தலாவவிலுள்ள இலங்கை இராணுவக் கல்லூரியில் சீன நிதியுதவியுடன் அமைக்கப்படும் அரங்கத்தைப் பார்வையிட்டு இத்திட்டம் தொடர்பாக மீளாய்வு செய்திருந்தது.

இலங்கையின் கிராமிய மட்ட மக்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் சீனா உணரத் தவறவில்லை. சீனத் தொடர்பாடல் நிறுவனத்தின் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மற்றும் சீனத் துறைமுக இலங்கைப் பிராந்திய நிறுவனம் போன்றன போரால் பாதிக்கப்பட்ட வடக்கிலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நான்கு குடிநீர்க் கிணறுகளை அமைப்பதற்கான 14,400 டொலர் நிதியை நன்கொடையாக வழங்கியிருந்தன.



**colombo telegraph** என்ற ஊடகத்திற்கு முன்னாள் இந்தியப் படைத் துறை அதிகாரி **கேணல் ஹரிகரன** எழுதியுள்ள கட்டுரையிலிருந்து....

இலங்கையின் முன்னைய அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்ட பின்னரே தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வழங்கப்படும் என ஜூன் 20, 2015 அன்று இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்திருந்தமை சீனாவுக்கு ஆச்சரியத்தை அளித்திருக்காது.

இலங்கை மீதும் அதன் அயல் நாடுகளான குறிப்பாக இந்தியா போன்றன மீதும் இத்திட்டத்தால் எதிர்விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே கொழும்பு நகரத் திட்டம் மீளாய்வு செய்யப்படுவதாக நீதி அமைச்சர் அறிவித்திருந்தார்.

இலங்கைக்கான தனது பயணத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சீனாவின் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக தனது அதிருப்தியை வெளியிட்டிருந்த நிலையில் அதற்கு சாதகமாக பதிலளிக்கும் வகையில் இலங்கையின் இந்த அறிவிப்பு இடம்பெற்றுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சீனாவுக்கு 350 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார். 'இது இலங்கையின் நில உரிமைச் சட்டத்தை முற்றிலும் மீறுகிறது. இத்திட்டமானது அதற்கான உடன்படிக்கையின்பிரகாரம்மேற்கொள்ளப்பட்டிருந்தால் இலங்கையர்கள்கூட இதற்குள் உள்நுழைவதற்கு நுழைவிசைவு தேவைப்பட்டிருக்கலாம்.

இந்த நிலத்தின் மேலுள்ள வான் பரப்பை இலங்கையர்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி பெறவேண்டியேற்பட்டிருக்கும். இவ்வாறானதொரு ஆபத்து இடம்பெறுவதற்கு நாங்கள் இடமளிக்கவில்லை.

சீனாவிற்கான தனது பயணத்தின் போது இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரி அந்நாட்டு ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தார். இவ்வாறான சில சிக்கல்களைத் தீர்த்த பின்னரே கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்வதற்கான அனுமதி வழங்கப்படும்' என இலங்கையின் நிதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவானது கிட்டத்தட்ட 70 சதவீதச் செயற்பாடுகளை மேற்கொள்கிறது. இந்நிலையில் இத்துறைமுகம் மீது சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதானது இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு ஆபத்தை விளைவிப்பதாக இந்தியா சுட்டிக்காட்டியிருந்தது.

மைத்திரி அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணும் அமெரிக்காவும் சீனாவைப் போன்றே இலங்கையில் தனது மூலோபாய நலன்களை அடைந்து கொள்ள விரும்புகிறது. மைத்திரி அரசாங்கம் சீனாவுடன் உறவைத் தக்க வைத்துக் கொள்வதாக உறுதி தெரிவித்திருந்தாலும் கூட, இவர்களுக்கிடையில் ஏற்கனவே முறிந்து போன உறவானது மீளவும் நெருக்கமாவதற்கு சில காலங்கள் எடுக்கும். ஏனெனில் சீனாவில் தங்கியிராத வெளியுறவுக் கோட்பாட்டை அமுலாக்க இலங்கை விரும்புகிறது.

இதனை இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, ஜப்பானுக்கு பயணம் செய்திருந்த போது வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். சீனாவில் தங்கியிருக்கக் கூடிய வெளியுறவுக் கோட்பாட்டை முன்னாள் ஜனாதிபதி மகிந்த வரைந்துள்ளார் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனாலும் தனது அரசாங்கமானது சீனா உட்பட அனைத்து நாடுகளிடமும் சமமான வெளியுறவுக் கோட்பாட்டைப் பேண விரும்புவதாக மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருந்தார். ஜப்பானை விட சீனா, இலங்கைக்கு 2009 இல் அதிக உதவிகளை வழங்கிய போதிலும் கூட, இலங்கையின் முன்னைய அரசாங்கத்தின் கீழ் ஊழல் மோசடி இடம்பெற்றது.

சீனாவின் அதிக வட்டியுடன் கூடிய கடன்களிலிருந்து இலங்கை தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மிகக் குறைந்த வட்டியிலான கடன்களைப் பெற முயற்சிக்கிறது. இந்த அடிப்படையில், அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் மீளாய்வு செய்வதாகவும் கொழும்பிலுள்ள துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிப்பதாகவும் பொருளாதாரக் காரணங்களுக்காகவே இவ்வாறானதொரு தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ, இலங்கையின் பிரதமரானால் மீண்டும் சீனாவுடனான உறவை வலுப்படுத்த முயற்சிப்பார். சீனாவுடனான உறவு தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவிடம் வினவப்பட்டபோது இதனை அவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

மகிந்த பிரதமரானால் சீனாவுடனான உறவைப் புதுப்பித்துக் கொளவாரா என அண்மையில் நேர்காணல் ஒன்றில் மகிந்தவிடம் வினவப்பட்டது. அதன் போது 'சீனாவுடன் மட்டுமல்ல, மேற்குலகம் உட்பட அனைத்து நாடுகளுடனும் நல்லுறவைப் பேணுவதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படும்' என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இலங்கையுடனான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நல்லுறவானது சிறிசேன அரசாங்கம் சீனாவுடன் தனது உறவை சமப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான சாதகமான நிலையை உருவாக்க வழிவகுத்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்த போது மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகளை இந்தியா எதிர்காலத்தில் பின்பற்றுவதிலேயே இலங்கையின் சீன உறவு தங்கியுள்ளது.

ஆனால் கடந்த காலத்தில், இந்தியாவானது தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளைக் குறித்த கால அவகாசத்திற்குள் நிறைவேற்றத் தவறியுள்ளது.

சீனா ஒருபோதும் இலங்கையைக் கைவிடப் போவதில்லை. இந்திய மாக்கடலிலும் தென்னாசியாவிலும் சீனா மிகப் பாரிய மூலோபாய நலனைக் கொண்டுள்ளது. இந்திய மாக்கடலில் சீனாவின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் இலங்கை மையமாக விளங்குகிறது.

இதேபோன்று சீன ஜனாதிபதியின 20 ஆம் நூற்றாண்டு கால கடல்சார் பாதைகளைப் பலப்படுத்துவதற்கான திட்டங்களை வெற்றி கொள்ளச் செய்வதற்கான சீனாவின் முதலீட்டு மையமாக இலங்கை விளங்குகிறது. இந்திய மாக்கடலில் இந்தியத் தீபகற்பத்தின் பாதுகாப்பிற்கும் அதன் அதிகார வலுவுக்கும் இலங்கை முதன்மைப் பங்காற்றுகிறது.

இலங்கைத் தீவின் ஆட்சியில் எவர் அமர்ந்தாலும் இந்தியாவானது தொடர்ந்தும் இலங்கையுடன் வெற்றியளிக்கும் உறவைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என சாதாரணமாக எடைபோடக்கூடாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

facebook

# முள்ளம் பன்றி குட்டியின் விளையாட்டு முடிவு

ஒரு காட்டில் ஒரு தாய் முள்ளம்பன்றியும் அதன் குட்டியும் வசித்து வந்தன. குட்டி முள்ளம்பன்றி மிகவும் துருதுருவென இருக்கும். அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருக்கும். ஒரு நாள் அது காட்டில் உள்ள மற்ற விலங்கு குட்டிகளுடன் விளையாட சென்றது. மற்ற விலங்கு குட்டிகள் ஓடி பிடித்து விளையாடிக்கொண்டு இருந்தன. முள்ளம்பன்றி குட்டி அங்கே சென்று "என்னையும் விளையாட சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டியது. மற்ற குட்டிகளும் அதை விளையாட சேர்த்துக் கொண்டன. எல்லா விலங்கு குட்டிகளும் ஓடி பிடித்து விளையாடிக் கொண்டு இருந்தன. முள்ளம் பன்றி குட்டி ஓடிப் பிடித்து விளையாடும் போது அதன் முட்கள் மற்ற குட்டிகள் மீது குத்தியது. இதனால் மற்ற குட்டிகள் முள்ளம் பன்றி குட்டியிடம் "உன்னுடைய முட்கள் எங்கள் மேல் குத்துகிறது. அதனால் எங்களுடன் விளையாட வேண்டாம்." என்று கூறின. அதற்கு முள்ளம் பன்றி குட்டி "நான் உங்கள் மேல் குத்தாமல் விளையாடுகிறேன். என்னை விளையாட்டிலிருந்து நீக்க வேண்டாம்" என்று கேட்டது. ஆனாலும் மற்ற குட்டிகள் அதற்கு சம்மதிக்கவில்லை. இதனால் மிகவும் மன வருத்தம் அடைந்த முள்ளம் பன்றி குட்டி சோகமாக வீடு திரும்பியது. அம்மாவிடம் வந்து அழுதது. அது தன் அம்மாவிடம்" அம்மா எனக்கு இந்த முட்கள் வேண்டாம். எல்லாவற்றையும் வெட்டி விடு" என்று கூறியது. அதற்கு அதன் அம்மா "நீ அப்படி சொல்லக்கூடாது. இயற்கையில் கிடைத்துள்ள அந்த முட்கள்தான் நமக்கு அழகு. நம்மை எதிரிகள் யாராவது தாக்க வந்தால் நாம் அந்த முட்களால் அவர்களை குத்தி தப்பித்து கொள்ளலாம்" என்றது.

ஆனால் குட்டி அதை காது கொடுத்து கேட்கவில்லை. அதெல்லாம் கிடையாது. எனக்கு இப்போதே எனது முட்களை வெட்டி விடு என்று அடம் பிடித்தது.

அதற்கு அதன் அம்மா நான் அந்த முட்களை வெட்டி விட்டு விடுவேன். ஆனால் திரும்பி வேண்டுமென்றால் பிறகு உடனடியாக கிடைக்காது என்றது.

"அதனால் பரவாயில்லை" என்றது குட்டி.

தாயும் தன் குட்டியின் ஆசை படியே அதன் முட்களை வெட்டி விட்டது.

முட்களை கத்தியால் சரித்து விட்ட பின் முள்ளம் பன்றி குட்டி மொழு மொழுவென இருந்தது. உடனே முள்ளம் பன்றி குட்டி மீண்டும் தனது நண்பர்களுடன் விளையாட சென்றது. மொழு மொழுவென இருந்த முள்ளம் பன்றி குட்டியை பார்த்தவுடன் எல்லா குட்டிகளும் கொல்லென சிரித்து விட்டன. உடனே கோபம் கொண்ட முள்ளம் பன்றி குட்டி "நீங்கள் எல்லோரும் குத்துகிறது என்று சொன்னதால்தான் நான் என் அம்மாவிடம் சொல்லி முட்களை வெட்டி கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் அனைவரும் இப்படி சிரித்தால் எனக்கு கோபம் வரும்" என்று கூறியது.

உடனே மற்ற குட்டிகள் "சேச்சே, அப்படியெல்லாம் இல்லை. இப்போது நீ மிகவும் அழகாக இருக்கிறாய்" என்று கூறி சிரித்துக் கொண்டன. "உன்னை நாங்கள் மறுபடியம் விளையாட்டில் சேர்த்துக் கொள்கிறோம்." என்று கூறின.

முள்ளம் பன்றி குட்டி மொழு மொழுவென இருந்ததால் எல்லா குட்டிகளும் அதை தொட்டு தொட்டு பார்த்தன. பிறகு ஒரு குரங்கு குட்டி அதை கிள்ளி, கிண்டல் செய்தது. மீண்டும் கோபம் கொண்ட முள்ளம் பன்றி குட்டி, குரங்கு குட்டியுடன் சண்டைக்கு சென்றது. இப்படியாக ச்ண்டை அதிகரித்தது.

இதனால் மிகவும் மன வருத்தம் அடைந்த முள்ளம் பன்றி குட்டி, மீண்டும் சோகமாக வீடு திரும்பியது.

அதைப் பார்த்த தாய் முள்ளம் பன்றி, குட்டியை பார்த்து "ஏன் மிகவும் சோகமாக வீடு திரும்பி விட்டாய்?" என்று கேட்டது.

முள்ளம் பன்றி குட்டி, நடந்ததை கூறியது. உடனே அதன் அம்மா "இதற்குத்தான் நான் முள்ளை எல்லாம் வெட்ட வேண்டாம் என்று கூறினேன்" என்றது.

அப்போது முள்ளம் பன்றி குட்டி, "எனக்கு மறுபடியும் எனது முட்கள் வேண்டும். எப்போது அவை வளரும்?" என்று கேட்டது.

அதன் அம்மா " அவை வளர ஒரு மாதம் ஆகும்" என்றது.

அதற்கு குட்டி "ஐயோ, அது வரை நான் என்ன செய்வது?" என்று வருத்தப் பட்டது. அதன் அம்மா "அது வரை விளையாட எங்கும் போக வேண்டாம். வீட்டில் பாடம் படித்துக் கொண்டு சும்மா இரு" என்றது.

இப்படியாக ஒரு மாதம் ஓடியது. அதற்குள் குட்டிக்கு முட்கள் மீண்டும் வளர்ந்து விட்டன. மறுபடியும் முள்ளம் பன்றி குட்டி தனது நண்பர்களுடன் விளையாட சென்றது. இப்போது மற்ற குட்டிகள் அதைப் பார்த்து "மீண்டும் நீ முட்களுடன் வந்து விட்டாயா? நீ எங்களுடன் விளையாடினால் உன் முட்கள் எங்கள் மேல் குத்தும்" என்றன.


மீண்டும் கோபம் கொண்ட முள்ளம் பன்றி குட்டி, "என்ன நீங்கள் எல்லாம் விளையாடு கிறீர்களா? முள் இல்லாமல் வந்தால் கிண்டல் செய்து என்னை கிள்ளுகிறீர்கள். முட்களுடன் வந்தால் குத்தும் என்கிறீர்கள். இப்போது என்னை விளையாட்டில் சேர்த்துக் கொள்கிறீர்களா? அல்லது எல்லோரையும் எனது முள்ளால் நன்றாக குத்தி விடட்டுமா? " என்று அதட்டியது.

இதைப் பார்த்து பயந்த மற்ற குட்டிகள் அதை விளையாட்டுக்கு சேர்த்துக் கொண்டன. இப்போது முள்ளம் பன்றி குட்டி தனது நண்பர்களுடன் விளையாடி சந்தோசமாக நாட்களை கழித்தது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 457

Search for people, places and things Nagendram Home


துஸ்யந்தன் கிருஷ்ணன்




மேரி அந்தோனிப்பிள்ளை


மழையில் ஒரு விளையாட்டு


ரவி ரகுவர்மன்




ஷாந் நிஷாந்


நாங்களும் குடிப்பமல்லே கோலா

உஷா விஸ்வா




கியாஸ் மொகமட்


ஒரு குடம் தண்ணி ஊற்றி ஒரு பூ பூத்தது அந்த நாள் ஞாபகம்....



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிராவிட்டே என்னை மாற்றினார்





ராகுல் டிராவிட் அளித்த டிப்ஸ்களதான் தன்னை சிறந்த துடுப்பாட்ட வீரராக மாற்றியுள்ளதாக பாகிஸ்தான் அணியின் மூத்த வீரர் யூனிஸ்கான் தெரிவித்துள்ளார்.

தற்போது 37 வயதான யூனிஸ்கான், கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியின் தலைமை பொறுப்பில் இருந்து விலகினார். டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடி வரும் யூனிஸ்கான், ராகுல் டிராவிட்டின் அறிவுரை தனக்கு மிகுந்த பயனுள்ளதாக இருந்தது எனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், " ராகுல் டிராவிட் மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர். அவரிடம் இருந்து நான் நிறைய கற்றுக் கொண்டேன். தொடக்க காலங்களில் அவர் அளித்த அறிவுரைகள், டிப்ஸ்கள்தான் என்னை மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரராக மாற்றியது.

கடந்த 2009ஆம் ஆண்டு என்னை அணித்தலைவராக நியமித்தபோது, அணி வீரர்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முடியவில்லை என்றால், எனது பதவியை உடனடியாக இராஜினாமா செய்து விடுவேன் என்று கூறியிருந்தேன்.

அதேபோல் வீரர்களை ஒருங்கிணைக்க முடியவில்லை. இதையடுத்து தலைவர் பதவியில் இருந்து விலகினேன். ஆனால் தலைவர் பதவியில் இருந்து விலகியது தவறான முடிவு என்பதை இப்போது உணர்ந்துள்ளேன்.

எப்போதும் எல்லோராலும் சிறப்பான பங்களிப்பை தர முடியாது. நானும் அத்தகைய தவறை செய்துவிட்டேன். ஆனால் அதற்குபின் தலைவர் பதவி என்னைத் தேடி வந்தால் ஏற்றுக் கொண்டிருப்பேன். இப்போதும் அந்த வாய்ப்பு தரப்பட்டால் சிறப்பாக என்னால் செயற்பட முடியும் .

என் வாழ்க்கையில் யாரையும் நான் துச்சமாக மதித்தது இல்லை. பாகிஸ்தானுக்காக 100 போட்டிகளில் விளையாடிவிட்டேன். என்னை மரியாதையுடன் நடத்த வேண்டுமென்றுதான் விரும்புகிறேன் என்றார்.

மேலும் ஐ.பி.எல். போட்டி குறித்து யூனிஸ்கான் கூறும் போது,"ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக ஒரே ஒரு போட்டியில்தான் விளையாட வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதற்குபின் அப்போதைய அணியின் தலைவர் ஷேன் வோர்ன், எனக்கு அந்த வாய்ப்பை அளிக்கவில்லை என தெரிவித்தார். (க)


பாராளுமன்றத் தேர்தல் - 2015

யாழ் தேர்தல் மாவட்டம்

நேர்மை! எளிமை!! உறுதி!!!



X 7

7



எங்களில் ஒருவரான (முன்னாள் பா.உ

அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)

திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்

அவர்களை ஆதரிப்போம்.

- மானிப்பாய் தொகுதி மக்கள்

(C-405)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org